பதினாறு பக்கங்கள் | விலை ரூபா நான்கு

நிரு ரியுசன் சென்ரர்
O/L
பகல்நேர வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன
மாணவர்கள் விண்ணப்பங்களை காலை 6 மணிமுதல் பெற்றுக் கொள்ளலாம்.
- நிர்வாகி

# வார முரசொலி

NIRU TUITION CENTRE
KONDAVIL
91 A/L பிரிவு II
கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

முரசு 03 ஒலி 173 ஞாயிற்றுக்கிழமை 02 - 07 - 1989 ஆனி 18 துல்ஹஃதா 27

★ அமைதிப்படை வாபஸ் பெறுவது தொடர்பான தீர்வுக்கு

# ஜே. ஆர். மத்தியஸ்தம் வகித்தால் ஜனாதிபதி பிரேமதாஸ எதிர்ப்பார்

## 'லண்டன் கார்டியன்' தகவல்

(லண்டன்)

இந்தியப்படைகள் இலங்கையிலிருந்து வாபஸ் பெறுவது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே எழுந்துள்ள சர்ச்சையை, இந்தியப்படைகள் இலங்கைக்கு வரக் காரணமாக இருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே மத்தியஸ்தம் வகித்து தீர்க்க வேண்டும் என லண்டன் கார்டியன் அரசியல் நிருபர் டேவிற் பிறவுண் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸவின் படைவிலகல் கோரிக்கையால் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவுகளில் விரிசல் பற்றி இந்த நிருபர் நேற்று பி.பி.ஸிக்கு பேட்டி அளித்த போது இதனைத் தெரிவித்தார்.

இந்தியா கேட்டுக்கொண்டதுபோல இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சு நடத்தக் கூடிய சூழ்நிலை தற்போது இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இருநாட்டு தலைவர்களும் தமது செல்வாக்கை இச்சந்தர்ப்பத்தில் இழக்க விரும்பாத

— 16-ம் பக்கம் பார்க்க

இந்திய பாதுகாப்பு அமைச்சர் சொல்கிறார்

## ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது

(வாஷிங்டன்)

இம்மாதம் 29-ம் திகதிக்குள் இந்திய அமைதிப்படையினர் வாபஸ் பெற வேண்டும் என்ற ஜனாதிபதி பிரேமதாஸவின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் தெரிவித்துள்ளார்.

இங்கு செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய அவர் ஜனாதிபதி பிரேமதாஸவின் கோரிக்கை நடைமுறைக்கு ஒவ்வாததது என்றும் அங்குள்ள சூழ்நிலையைப் பொறுத்தே அமைதிப்படை அங்கிருந்து விலகும் எனவும் சொன்னார்.

அமெரிக்க ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் உப

—16-ம் பக்கம் பார்க்க

இந்திய ஜனாதிபதி - கருணாநிதி சந்திப்பு

## சகல தரப்பினருடனும் பேச்சுக்கள் நடாத்த வேண்டும்

(சென்னை)

தமிழகம் வந்துள்ள இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கடராமனை தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நேற்று ஆளுநர் மாளிகையில் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமைகள்பற்றி பேச்சு நடாத்தினார்.

உதவியாளர் எவருமின்றி சுமார் முப்பது நிமிடங்கள்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் ஹர்த்தால்

மாங்குளம், வவுனியா போன்ற வன்னிப்பிரதேசங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டதால் இங்கிருந்து சென்ற கொழும்பு வவுனியா மற்றும் தூர இடங்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வங்கி கிளைகளில் தமிழ் மொழியில் கருமங்கள்

இலங்கை வங்கி வடமாகாணத்திலுள்ள அலுவலகங்களில் தமிழ் மொழி மூலம் அலுவலக கடமைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதன் பொருட்டு வடபகுதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் இருபத்தியொரு தமிழ் தட்டெழுத்தாளர்கள் மேலதிகமாக நியமிக்கப்படவுள்ளனர்.

— 15 ஆம் பக்கம் பார்க்க

## ஜவானுக்கு காயம்

நேற்று இந்திய அமைதிப் படை ஜவான் ஒருவர் சூட்டுக் காயத்துடன் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

... 16 ஆம் பக்கம் பார்க்க

## நோயாளருக்கு புதிய சேவை

நாட்டில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வேலை நிறுத்தம் போன்ற சம்பவங்கள் ஏற்படும்போது நோயாளர்களை பாதிக்கப்படாது சிகிச்சை அளிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் சுகாதார ஸ்தாபனங்கள் மூலம் இத்தகைய நாட்களில் நோயாளரைப் பேணவும், சிகிச்சை அளிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜோ. பெர்னாண்டோ சகல ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார். இவ்வாறு வேலை நிறுத்தங்கள் ஏற்படும் போது இனிமேல் பொதுமக்கள் தகுந்த சிகிச்சை பெறலாம் எனவும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாணவர் ஒன்றியம் அறிக்கை

## பெற்றோர் ஆசிரியர்கள் ஒன்றுகூடி தீர்மானிக்கவும்

சுற்றிவளைப்புகளின் போது மாணவர்கள் தாக்கப்படுவது, கைதுசெய்யப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது, அவர்கள் பின்னர் சுட்டுக் கொல்லப் படுவது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பொது இடங்களில் வைத்து மாணவர்கள் உட்பட இளைஞர்கள் கடத்தப்பட்டு சுய விருப்பமின்றி பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

தற்பொழுது நடைபெற்று

— 15 ஆம் பக்கம் பார்க்க

## கரவெட்டியில் நேற்றும் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள்

(வடமராட்சி)

நேற்றுக்காலை கரவெட்டியில் கன்பொல்லை அரசடி, அத்துளு முதலான இடங்களில் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் கன்பொல்லைப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. இத் துப்பாக்கிவேட்டுக்களால் கன்பொல்லைப் பகுதியில் கூடிய

— 16 ஆம் பக்கம் பார்க்க

## புனர்வாழ்வு கொடுப்பனவுகள் வங்கிகளில் ஆரம்பமாகும்

யாழ். மாவட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழான ஆயிரம் ரூபா, நாலாயிரம் ரூபா கொடுப்பனவுகளை வழங்கும் வேலைகளை வங்கிகள் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளன.

கடந்த சில மாதங்களாக இக் கொடுப்பனவுகளை வழங்கும் வேலைகள் வங்கிகளினால் மேற்கொள்ளப்படவில்லை.

— 16 ஆம் பக்கம் பார்க்க

## பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கைவங்கி கடன் சலுகை

வன்செயலினால் பாதிக்கப் பட்டு பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாதுள்ளவர்களுக்கு இலங்கை வங்கி விசேட சலுகைகளை வழங்கவுள்ளது.

இதன் பிரகாரம் வன்செயலினால் பாதிக்கப்பட்டுள்ளமையை நிரூபிக்கும், கடனைத் திருப்பிச்செலுத்த முடியாத வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் பெற்ற கடனுக்குரிய வட்டியில் ஐம்பது சதவீதம் மட்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு யாழ். பகுதிக்கு இடமாற்றம்

(எப். சி. ஆர்.)

வெளிமாவட்டங்களில் கடமை புரிந்த இருநூற்றி அறுபத்தி ஒன்பது பட்டதாரி ஆசிரியர்கள் இம் மாதம் பத்தாம் திகதி முதல் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் 1984-ம் ஆண்டு மார்ச், ஆகஸ்ட் மாதங்களில்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## மிருசுவில் சம்பவத்துக்கு 'ரெலோ' கண்டனம்

கடந்த 28 ஆம் திகதி மிருசுவிலில் நடாத்தப்பட்ட திடீர்த் தாக்குதல்களினால் இரு மினி பஸ்களில் சென்றவர்களான ஈழத்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியைச் சேர்ந்த பதினான்கு உறுப்பினர்கள் அகாலமரணமடைந்துள்ளனர் இவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம். இவ்வாறு தமிழ்ஈழ விடுதலை இயக்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## புங்குடுதீவு பாடசாலை அதிபர் பேச்சு:

# மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் அக்கறை அவசியம்

(புங்குடுதீவு)

எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் பல இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றார்கள். அவர்களின் வாழ்வை வளமாக்குவதானால் அவர்களுக்கு எந்தெந்தமுறையில் நாம் செயல்பட வேண்டுமென்பதை அதிபரோ, ஆசிரியர்களோ, பாடசாலை அபிவிருத்திச் சங்கமோ செய்தால் மட்டும் போதாது. முக்கியமாக முதன்மை பெற்றிருப்பவர்கள் அப்பிள்ளைகளின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள். இவர்கள் முன்னின்று செயல்பட்டால் பிள்ளைகளின் கல்வியறிவு, உடல் வளர்ச்சி, மென்மேலும் வளர்ச்சி பெறும்.

இவ்வாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒழுங்கு செய்துள்ள ''பிள்ளைகளின் தேவையும் பாடசாலையின் வளர்ச்சி'' என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் புங்குடுதீவு பாடசாலை அதிபர் திரு. அ. வீயோன்சியஸ் தலைமையில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் வி. செபமாலை லூர்த்து-ஞானரெத்தினம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

## விளையாட்டுப் போட்டி

(சுன்னாகம்)

ஏழாலை லெனின் சன சமூக நிலையத்தாரின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 9-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நிலையத் தலைவர் திரு. சி.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், ஏழாலை தெற்கு கிராம சேவையாளர் திரு.இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நற்சான்றிதழ் பத்திரம் இல்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதிகளிலுள்ள சில கிராம சேவையாளரிடம் நற்சான்றிதழ் பத்திரம்எழுதுவதற்கான புத்தகங்கள் இல்லையென தெரியவருகிறது.

மேற்படி இக்கிராம சேவையாளரிடம் கேட்கின்ற போதெல்லாம் புத்தகங்கள் வரவில்லை என்ற வாசகத்தையே கூறுகின்றார்கள்.

அத்தோடு கடைகளில் அப்பத்திரங்கள் விற்பனையாகிவருவதெனவும் கூறுகின்றார்கள்.

ஆனால் அப்பத்திரங்களையும் பெறமுடியாத நிலையில் அவஸ்தைப்படுகின்றார்கள்.

## நியமனம்

(நாயன்மார்கட்டு)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட எழுவைதீவுக்கு புதிதாக திரு. மு.விஜயரத்தினம் கிராம சேவை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## வாரத்தில் நடைபெறும்

# இரு சமயபாட வகுப்புக்களை ஐந்தாக அதிகரிக்கவேண்டும்

யாழ்ப்பாணம் விவேகானந்த சபையின் செயற்குழு கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்க மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

சமீப காலத்தில் ஒருவாரத்தில் நடைபெற்று வந்த ஐந்து சமயபாடவகுப்புகள் வாரத்திற்கு இரண்டு வகுப்புகளாக குறைக்கபட்டுள்ளது தீயவழிகளில் புலனைச் செலுத்தாமல் விழிப்புணர்ச்சியுடன் மாணவர்களைஉய்வுறச்செய்வதுசமய பாடபோதனை ஒன்றுதான். எனவே தினமும் சமயபாட போதனை இடம் பெறவேண்டும்.

சமய பாட ஆசிரியர்களுக்கு உயர்தரப் பயிற்சிகளைப் பெறுவதற்குரிய ஒழுங்குகள் செய்ய வேண்டும்.

சைவசமய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் இந்து சமயத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும் இவையே அந்த தீர்மானங்களாகும்.

மேலும் இவ்வருட இறுதியில் சபையின் சமயப் பரீட்சை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதாக செயலாளர் திரு வி அமிர்தேஸ்வரராஜா தெரிவித்தார்.

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

வேலணை பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலகத்தில் இயங்கிவரும் ஆயுர் வேத வைத்தியசாலையில் கடந்த பல நாட்களாக முக்கியமான பல மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் துன்பங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

மேலும் மருந்துகளை எடுத்து வருவதற்காக கொழும்பு செல்லவேண்டியிருக்கின்ற போதிலும் தற்போது போக்குவரத்துச் சேவைகள் சீராக இன்மையே மருந்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடென தெரிய வருகின்றது.

## வரட்சியால் நோய்கள்

புங்குடுதீவு பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் அப்பகுதிகளில் வாழும் பெருந்தொகையான மக்கள் வெப்பு நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

சின்னமுத்து, பொக்குளிப்பான், சொறி, சிரங்கு போன்ற நோய்களால் பெருந்தொகையானவர்கள் பீடிக்கப்பட்டு துன்பமடைந்து வருகின்றார்கள்.

அது மட்டுமல்லாமல் ஒருவிதமான மூன்று நாள் காய்ச்சலினாலும் சிறுவர் முதல் பெரியோர் வரை புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையிலும், தனியார் மருத்துவமனைகளிலும்சேர்க்கப்பட்டுசிகிச்சை பெற்று வருகின்றார்கள்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அச்சுவேலி வடக்கு சி.இரத்தினசுவாமி ஆகிய நான் எனது மெற்றல் பிறேம் பொருத்திய ரின்-ரெட் இரு பார்வை மூக்கு கண்ணாடியை தவறவிட்டு விட்டேன். மோட்டார் சைக்கிளில் அச்சுவேலியில் இருந்து தினமும்106,4-ம் குறுக்குத் தெருவில் இருக்கும் ரி.ஆர்.ஆர்.ஓ ஸ்தாபனத்திற்கு வருவது வழக்கம். நண்பர் யாரேனும் வீட்டிலோ அல்லது வழியிலோ தவறி இருக்கக் கூடும். இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறித்துள்ள விலாசங்கட்குத் தெரிவிக்கவும். 07028

### தேவை

வேப்பம் விதைகள்,இலுப்பம் விதைகள் தொகையாகத் தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். 07025

பங்கு விகிதத்தில் றெக்கோடிங் ஸ்தாபனத்தில் பணி புரிவதற்கு ஐந்து வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்விண்ணப்பிக்கலாம் தொடர்பு: விக்ரர் அன் சன்ஸ், (விக்ரேஸ்) இல,100,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 07031

### விற்பனை

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை பிரிவுகளுக்கான எல்லாப் பாடங்களுக்குமான Tutes மலிவு விலையில் 2.7.89-ல் இருந்து எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes 58A,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 07022

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து



★ வினோத்குமார் ★

இன்பருட்டியைச் சேர்ந்த அழகேஸ்வரன் விஜயமாலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் வினோத்குமார் தனது முதலாவது பிறந்த தினத்தை குதூகலமாக கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரிய மாமா, மாமி, இத்தாலி மாமா, கனடா மாமா, ஆசை மாமா, குட்டி மாமா, பெரிய அன்ரி, பெரியப்பா, சின்ன அன்ரி, சித்தப்பா, குவைத் சித்தப்பா, சவூதி சித்தப்பா, இந்து அத்தை, ரூபி சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகிறார்கள்.

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு,
அல்வாய். 07024

## 6-வது நினைவஞ்சலி 1-வது நினைவஞ்சலி

தோற்றம்: 15.11.1915 — மறைவு: 06.03.1983





தோற்றம்: 08.03.1923 — மறைவு: 12.07.1988

திரு. எஸ். எம். பேரம்பலம்
(யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ், நுகேகொட.)

திருமதி பேரம்பலம்

அன்பின் மலர்ந்த இருபாச நினைப்புக்களே பசுமை மாறாமல் என்றும் எங்கள் மனதில் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வங்களுக்கு உங்கள் ஆத்மா சாந்தியடைய இருவரும் கேட்ட வரங்களைக் கொடுத்தருளிய காரைநகர் களபூமி திக்கரை முருகனைப் பிரார்த்திக்கும்,

பேரம்பலம் இல்லம்,
களபூமி, காரைநகர்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
07004

## 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

பிறப்பு: 18 | 06 | 1960



இறப்பு: 04 | 04 | 1989

அமரர் கந்தையா கனகசிங்கம் (நாதன்)
(மினி பஸ் நடத்துனர்)

எங்கள் குடும்பத்துக்கு முதன் முதலாய்
வந்துதித்த பாசப் பறவையே
எங்கள் நெஞ்சமெல்லாம் தீராத ஏக்கத்தை
தந்து விட்டுச் சென்ற ஒளி விளக்கே
நொடிப் பொழுதில் ஓடி மறைந்து விட்டாயே
சுடர் விளக்கே மன்னவனே நாதனே

குறிப்பு:- அன்னாரின் இல்லத்தில் 02-07-1989 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்னாரின் சார்பில் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்,மாமன், மாமி,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
உறவினர்கள்,நண்பர்கள்.

சு. வீரசிங்கம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

07030




# எழுத்துச் சீர்திருத்தம்: இது அவசியமா?

பேராசிரியர்,
கலாநிதி
கா. இந்திரபாலா

இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் கலனியாதிக்கத்திலிருந்து விடுபட்டு, புதிய பாதையிலே செல்லத்தொடங்கிய ஆசிய அரசுகளிலெல்லாம் மேலைத்தேசத்தை எட்டிப் பிடிக்கும் நவீன மயமாக்க முயற்சிகளும், பழைய பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளும் பக்கம் பக்கமாகவும், பல சந்தர்ப்பங்களிலே ஒன்றுக்கொன்று முரணாகவும் இடம்பெற்று வருவதைக் காணலாம். இப் பின்னணியிலேதான் எழுத்துக்கள் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும் எனப் பொதுவாக எல்லா ஆசிய நாடுகளிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டும், அதற்கமையச் சில முயற்சிகள் எடுக்கப்பட்டும் வருகின்றன.

தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தி அமைக்கப்படவேண்டுமென நீண்டகாலமாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. எனினும், இந்த ஆண்டு தமிழ்நாட்டு அரசாங்கம் இதுசம்பந்தமான சில நடவடிக்கைகளை எடுத்ததினால் எழுத்துச் சீர்திருத்தம் ஒரு முக்கிய விஷயமாகப் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இரண்டொரு சிறிய மாற்றங்கள் தொடக்கம் பாரதூரமான பல மாற்றங்கள் வரை பலவகைத் திருத்தங்கள் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. நம்நாட்டுக் கலாநிதி எஸ். சிவசேகரமும் தமிழ்நாட்டுத் திரு. ஐராவதம் மகாதேவனும் முக்கியமான சீர்திருத்தங்கள் பலவற்றை முன்வைத்துள்ளார்கள். இந் நிலையில் இத்தகைய அடிப்படையான எழுத்துச்சீர்திருத்தம் தமிழுக்குத் தேவையா? தமிழ் எழுத்துக்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்ட ஒரு யந்திரம் போன்று முற்றிலும் செம்மையாக அமையவேண்டியது மிகவும் அவசியமானதா? நவீனமய ஆக்கத்துக்கு உண்மையிலேயே தமிழ் எழுத்துமுறை தடையாக அமைகின்றதா? பிறமொழிகளுக்கிருக்கும் ஒலிகளை எல்லாம் தமிழிலும் கொண்டுவந்து நிறைவினை ஏற்படுத்துதல் விரும்பத்தக்கதா? பாரதூரமான சீர்திருத்தம் சாத்தியமானதா? பின்தங்கிய நாடுகளில் இப்படியான சீர்திருத்தத்துக்கு நாம் என்ன விலை கொடுக்க வேண்டும்? எம்மால் அதனைக் கொடுக்க முடியுமா? என்பன போன்ற பல வினாக்கள் எம் மனத்தில் எழத்தான் செய்கின்றன.

இவற்றைப்பற்றிச் சிலகருத்துக்களைத் தெரிவிக்குமுன் தமிழ் எழுத்தின் வரலாற்றைப் பற்றிய சில குறிப்புக்களைக் கொடுத்தல் அவசியம் என எண்ணுகிறேன். இன்று நாம் பயன்படுத்தும் தமிழ் எழுத்து இந்தியாவிலும் இலங்கையிலும் பிற மொழிகளுக்குரிய எழுத்து முறைகளை விட வேறுபட்டவையாகத் தோன்றினாலும், உண்மையில் தமிழ்எழுத்துக்களும் இந்தியாவின் சுதேச மொழிகளுக்குரிய எழுத்துக்களும் (உறுது மொழிக்குரிய அறபு எழுத்து வேறு) சிங்கள எழுத்துக்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழக்கிலிருந்தஓர் எழுத்து முறையிலிருந்து வழிவந்தவை என்பதை முதலில் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அந்த எழுத்துக்கு நாம் கொடுத்துள்ள பெயர் பிராமி என்பதாகும். இதைக் கூறும்போது, படித்தவர் உட்படப் பலர்மத்தியில் உள்ள தப்பபிப்பிராயம் ஒன்றைத் தீர்த்து வைக்க வேண்டிய அவசியம் ஒன்று உண்டு அதாவது எழுத்து வேறு, மொழி வேறு என்பதாகும் தமிழும் சமஸ்கிருதமும் ஒருகாலத்தில் ஒரே எழுத்துமுறையைச் சில வேறுபாடுகளுடன் பயன்படுத்தின என்றுகூறியதும், தமிழ்மொழியும் சமஸ்கிருத மொழியும் ஓரின மொழிகளாஎன்று பலர் கேட்பதுண்டு. தமிழை ஆங்கிலம் பயன்படுத்தும் உரோம எழுத்துக்களாலும் எழுதலாம். சில தேவைகளுக்கு நாம் எழுதியும் வருகின்றோம். அதனால், தமிழ் ஐரோப்பிய மொழி என்று சொல்ல முடியாது. எந்த ஒரு மொழியை எழுதுதற்கும் வேறு ஒரு மொழிக்குரிய எழுத்துக்களைத் திருத்தங்களுடன் பயன்படுத்தலாம். ஆகவே எழுத்து வேறு, மொழி வேறு. ஒரு காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் மொழி வேறுபாடுகள் எவையாக இருந்தாலும் பிராமி என்ற ஒரே எழுத்து முறை பயன்படுத்தப்பட்டது. இன்று ஐரோப்பாவின்பெரும்பாகத்தில் உரோம எழுத்துக்களை உபயோகிப்பது போன்ற நிலை அது.

பிராமி ஒரு மிகவும் எளிமையான எழுத்துமுறையாகும். இன்று நம்மை எதிர்நோக்கும் எழுத்துப் பிரச்சினைகளும் அதற்குப் பெருமளவு இல்லை எனலாம் நம் முன்னோர் மிகவும் விஞ்ஞான ரீதியான முறையில் அதனை வகுத்திருந்தனர் என்றுகூடக் கூறலாம்.

ஆனால் காலப்போக்கில் பல்வேறு காரணங்களின் சேர்க்கையினால் அந்த இலகுவான எளிமையான எழுத்துமுறை, இடத்துக்கோர் எழுத்துமுறையாக மாறி, இன்று ஒன்றுக்கொன்று தொடர்பு காண முடியாத வகையிலே காட்சியளிக்கின்றது. நேர் கோடுகளைப் பெருமளவிலே கொண்டிருந்த பிராமி எழுத்துக்கள் இன்று தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், சிங்களம் ஆகிய தென்பகுதி மொழிகளில் வளைகோடுகளைக் கொண்டவையாய் மாறிவிட்டன. தென்பகுதியில் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதியமை இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். நேர் கோடுகள் ஓலையைக் கிழித்து விடுமாகையால் மெதுவாக இவை வளைந்து வளைந்து உருமாறிவிட்டன. இப்படியான காரணங்கள் ஈராயிரம் ஆண்டுகளாகச் செயற்பட்டதனாலே தான், தொடக்கத்தில் இருந்த விஞ்ஞான ரீதியான பண்புகள் கூட, காலப்போக்கில் சிரமற்ற பண்புகளாக நம் எழுத்தைப் பொறுத்து மாறிவிட்டன. இதனை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தைக் காட்டலாம்.

உயிர் மெய் எழுத்துக்களில் 'ஆ'என்ற ஒலியைக் குறிப்பதற்குப் பொதுவாக அரவு அல்லது கால் (ா) எனப்படும் குறியீடு பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் ஆ,ஞ,ரு,போன்ற எழுத்துக்களில் இந்தக் குறியீடு இல்லை. அதுமட்டுமன்றி, 'ஆ'என்ற எழுத்தில் 'அ' உடன் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தோன்றும். குறியீடு 'பூ'போன்ற எழுத்துக்களில் வேறோர் ஒலியைக் குறிக்கின்றது. இதனால், நம் எழுத்து முறை விஞ்ஞான ரீதியாய் அமையவில்லை என்று பலர் கூறுவதற்கு இடமுண்டாகிவிட்டது. ஆனால் இத்தகைய தவறை நம் முன்னோர் விடவில்லை. தொடக்கத்தில் பிராமி எழுத்தில் விஞ்ஞான ரீதியாக அமைந்திருந்த குறியீடுகள் காலப்போக்கில் திரிபடைந்து இக் குழப்பத்தை இன்று ஏற்படுத்தியுள்ளன. தொடக்கத்தில், 'க' வை நெடிலாக்குவதற்கு (கா) என்ற குறியீடு சேர்க்கப்பட்டதோ, அதுதான் 'அ'வை'ஆ' ஆக்குவதற்கும் சேர்க்கப்பட்டது. 'ன' வை 'ஞ'ஆக்குவதற்கும் அவ்வாறேதான் அதே குறியீடு சேர்க்கப்பட்டது. இதை மறந்து நம் முன்னோர் மீது குறை சுமத்துவது சரியன்று. காலப்போக்கில், ஒரே குறியீடு வெவ்வேறு வடிவங்களைக்கொண்ட எழுத்துக்களுடன் சேர்த்து எழுதப்பட்டு வந்தபோது, வெவ்வேறு திரிபுகளைப் பெற்றுவிட்டது.

பதினாறும் நூற்றாண்டுவரை தமிழ் எழுத்துக்களில் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன, அதன்பின் அச்சியந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக எழுத்துக்களின் இயல்பாக ஏற்பட்டு வந்தமாற்றம் நின்றுவிட்டது. இதன் பின் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துக்களைப் பொறுத்து முதலாவது சீர்திருத்தம் ஒன்று ஏற்பட்டது. வீரமாமுனிவர் என்னும் இத்தாலியப்பாதிரியார் இரட்டைக் கொம்புக் குறியீட்டினைப் புகுத்தினார்.

இதன்பின் பிரித்தானியர் ஆட்சி தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் நடைபெற்ற போதும் ஆங்கிலமே முதலிடம் பெற்றதனால், தமிழ் அதிகம் பயன்படுத்தப்படாது, அதன் எழுத்துப்பற்றிய சிந்தனையும் கற்றறிந்தவர் மத்தியில் தோன்றாது போயிற்று. இருபதாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டில் அரசியல் இயக்கங்கள் தோன்றியபோதும், சுதந்திரகாலத்தில் தமிழைப் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தத் தொடங்கிய போதும் தமிழ் எழுத்துக்களில் விஞ்ஞானரீதியற்றவையாகத் தோன்றும் சில பண்புகளை மாற்றவேண்டும் என்ற சிந்தனை சில அறிஞர்கள் மத்தியில் உதயமாயிற்று.

கடந்த சில ஆண்டுகளாக ஒரு விஞ்ஞானியின் கண்கொண்டு தமிழ் எழுத்துக்களை ஆராய்ந்து, அவற்றின் குறைபாடுகளை நீக்குவதற்கான வழிகளைக்காட்டியிருக்கிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்து பொறியியல் அறிஞர் கலாநிதி எஸ். சிவசேகரம் அவர்கள். அவர் முன்வைத்துள்ள ஆலோசனைகளையிட்டுக் குறை கூறுவதற்கு எதுவுமில்லை. நீண்டகாலமாகத் தமிழ்நாட்டில் பெரியார் ஈ.வே.ரா, சில எழுத்துக்களைச் சீர்திருத்த முயன்று வந்தார். அதன் விளைவாக இவ்வாண்டு தமிழ்நாட்டு அரசாங்கம் சில சீர்திருத்தங்களைத் தமிழ் எழுத்துக்களைப் பொறுத்து ஏற்படுத்தியுள்ளது. இக்காரணத்தினால் பெரியார் நூற்றாண்டு கொண்டாடப்படும் இவ்வாண்டு எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய விஷயம் அலசி ஆராயப்பட்டு வருவதைக்காணலாம். அண்மையில் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களும் பிறரும் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளிலே பல அடிப்படையான சீர்திருத்தங்களை முன்வைத்துள்ளனர். நாம் தற்பொழுது பயன்படுத்தும் உயிர் எழுத்துக்களுள் 'அ' தவிர்ந்த ஏனைய எழுத்துக்களை ஒரேடியாக நீக்குவதுகூட இச்சீர்திருத்தங்களுள் ஒன்றாகும்.

இதுவரை பிரேரிக்கப்பட்ட சீர்திருத்தங்களை இங்கு நான் எடுத்துக்கூறி ஆராய விரும்பவில்லை. அவை சரியா பிழையா என்றகேள்வியை நான்எழுப்பவில்லை. அத்தகைய கேள்விக்கு இடமில்லை. எந்த ஒரு மொழிக்குரிய எழுத்துமுறையும் சீர்திருத்தி மேலும் மேலும் செம்மைப்படுத்தலாம். அவ்வாறே தமிழ் எழுத்துக்களையும் சீர் திருத்தலாம். மேலும் செம்மைப்படுத்தலாம். ஆனால் அத்தகைய சீர்திருத்தம் அத்தியாவசியமானதா, முடியுமானதா என்ற இரு கேள்விகளையும் மட்டுமே இங்கு எழுப்ப விரும்புகின்றேன். தமிழ் எழுத்துக்களைப் பொறுத்துச் சீர் திருத்தத்தின் அவசியத்தை அறிஞர் சிலர் மிகைப்படுத்தி உள்ளார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது.

உலகத்தில் இன்று எந்த மொழிக்குரிய எழுத்தும் நன்கு திட்டமிடப்பட்டும் விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்டில்லை. எந்த எழுத்து முறையும் இன்று மேலும் சீர்திருத்திச் செம்மைப்படுத்த இடமுண்டு. சீர்திருத்த இடமுண்டு என்பதற்காக மட்டும் எந்த எழுத்து முறையையும் சீர்திருத்தி அமைக்கவேண்டும் என்று எவரும் கூறுவதில்லை. அத்தகைய சீர்திருத்தம் மிகவும் அத்தியாவசியமாக அமைந்தாலே தான் இன்றைய நிலையில் சீர்திருத்தத்தை மேற்கொள்ளலாம்.

[ 9-ம் பக்கம் பார்க்க ]

## செயற்கரிய செய்தோர்

### வெண்ணிக்குயத்தியார்

சோழ அரசன் கரிகாற் பெருவளத்தான் என்பவனுக்கும் சேர அரசன் பெருஞ்சேரலாதன் என்பவனுக்கும் போர் நிகழ்ந்தது. போரில் சோழ அரசன் வென்றான். சேர அரசன் தோல்வி உற்றான்.

போர் நிகழ்ந்த போது சேர அரசனுக்குப் புறப்புண் ஏற்பட்டது. புறத்தே புண் ஏற்பட்டது தனது மான உணர்வுக்கு இழுக்கு என்று அறிந்த சேர வேந்தன் வடக்கிருந்து மானங் காத்து உயிர்விட்டான்.

வெண்ணிக்குயத்தியார் என்னும் புலவர் இதனை அறிந்தார். போரில் வென்ற சோழ அரசனின் வீரத்தை விட புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் நீத்த சேர வேந்தனின் மானம் அவருக்கு வியப்பை ஏற்படுத்தியது.

வீரமும், மானமும் உடைய இரு வேந்தரின் சிறப்பையும் பாடஎண்ணிய வெண்ணிக்குயத்தியார் சோழ அரசனைப்பார்த்து, "வேந்தே, வெற்றிப் புகழ் ஒன்றே நீ பெற்றனை, வெற்றியை உனக்குத் தந்து நின்னாலுண்டாகிய புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து பெறும் பெரும் புகழை அவன் எய்தினான். அவன் நின்னினும் நல்லன் போலும்'' என்றார்.

சோழனின் பகை அரசனாகிய சேரனின் மானச் சிறப்பை சோழனின் முன்னிலையிற் சிறப்பித்துக் கூறிய வெண்ணிக்குயத்தியாரின் நடுவு நிலைமையும், துணிவும் போற்றற்குரியன. நல்லவை எங்கிருப்பினும் எவரிடத்து இருப்பினும் நாடிப் போற்றும் நல்லுள்ளம் புலவர் உள்ளம் அதனால் தான் காலத்தை வென்று நின்று உலகை உய்விக்கும் கருத்துக்களை அவர்களால் கூறமுடிந்தது.

## வைத்தியக் களஞ்சியம்

# புண்களுக்கு மருந்து கட்டும்போது அவதானிக்க வேண்டியவை;

டாக்டர் எம்.கே.முருகானந்தன் M.B.B.S. (Cey)

* சிறு காயங்கள், புண்கள் ஏற்பட்டால் அவற்றிற்கு நீங்களே மருந்து கட்டிக் குணமாக்கலாம். அதற்கான வழிமுறைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அறிந்திருப்பது உதவியாக இருக்கும். உரசற் காயங்கள், அதிக அளவு சிதைவு ஏற்படாத காயங்கள், அதிக ஆழமற்ற காயங்கள், இரத்தப் பெருக்கற்ற காயங்கள், கிருமித் தொற்றுதல் ஏற்படாத காயங்கள் ஆகியவற்றை நீங்களே சமாளித்துக் கொள்ளலாம்.
* காயங்களுக்கு மருந்திடுபவர், மருந்து கட்ட ஆரம்பிக்கு முன்னர் தனது கைகளைச் ''சோப்'' இட்டுச் சுத்தமான நீரினால் அழுக்கும், கிருமிகளும் நீங்கும் வண்ணம் துப்புரவாகக் கழுவ வேண்டும். மருந்து கட்டுவதற்கு உபயோகிக்கும், துணி, பஞ்சு இடுக்கி (Forceps) முதலியவை சுத்தமாக இருந்தால் மட்டும் போதாது. அவற்றைக் கிருமி நீக்கம் செய்யவும் வேண்டும். துணி, பஞ்சு போன்றவற்றை நீரிற் போட்டுக் கிருமி நீக்கம் செய்ய முடியாது. நீராவியினால் கிருமி நீக்கம் செய்யலாம். இட்டலித் தட்டு, பிரஷர் குக்கர் (Pressure Cooker) போன்ற வீட்டிற் கிடைக்கும் பொருள்களை உபயோகித்து அவற்றைக் கிருமி நீக்கம் செய்யலாம்.
* புண் அல்லது சிறு காயத்தில் இருக்கும் அழுக்கு சிராய், மண் போன்ற பொருள்களை நீக்கச் சுத்தமான நீரினால் ''சோப்''இட்டு நன்கு கழுவலாம். பின் அவற்றைச் சுத்தம் செய்ய 'சவலோன்' (Savlon) டெற்டோல், (Dettol) போன்ற கிருமி நீக்கிகளை உபயோகிக்கலாம். முதலிற் கிருமி நீக்கியால் நனைக்கப்பட்ட பஞ்சைக் கொண்டு புண்ணின் சுற்றுப் புறத்தை நன்கு துடைக்க வேண்டும். பின் அப்பஞ்சை எறிந்து விட்டு, இன்னும் சிறிது பஞ்சை எடுத்துக் கிருமி நீக்கியால் நனைத்துப் புண்ணை மெதுவாகத் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். அதன் பின் புண்ணின் சுற்றுப் புறத்தை ''ஸ்பிரிற்'' தோய்த்த பஞ்சினாலே துடைக்க வேண்டும்.
* ''பிளேவின்'' (Flavin), ''கைபேர்ரொனிக் சேலைன்'' (Hypertonic Saline- உப்புத் தண்ணீர்,) ''ஸில்வர் நைற்ரேட்'' (Siver nitrate) போன்ற பலவகை மருந்துகள் புண்களுக்கு வைத்துக் கட்ட உபயோகிக்கப்படுகின்றன. சீழ், அழுகல், கசிவு போன்றவை இருந்தால் ''கைபோரொனித் சேலைன்'' நல்ல பலனைக் கொடுக்கும்.
* புண்ணுக்கு மருந்து கட்டவும், சுத்தம் செய்யவும் உபயோகிக்கும் கிருமி நீக்கப்பட்ட பஞ்சு,துணி, ''ஹோஸ்''(Gauze)போன்றவற்றை வெறுங்கைகளால் எடுக்கக் கூடாது. அவற்றைக் கிருமி நீக்கம் செய்யப்பட்ட இடுக்கி மூலமே எடுக்க வேண்டும்.
* கட்டுப் போடும்போது இரத்த ஓட்டம் தடைப்படும் வகையில் மிக இறுக்கமாகப் போடக் கூடாது அதே போற் காற்றோட்டம் தடைப்படும் வண்ணம் துணியைப் பல சுற்றுக்கள் சுற்றவும் கூடாது. சுத்தமான, கசிவு அற்ற புண்ணாக இருந்தால் ஒரு நாள் விட்டு மறுநாள் மருந்து கட்டினால் போதுமானது. கசிவு, அழுகல் போன்றவை அதிகம் இருந்தால் தினமும் மருந்து கட்டுவது அவசியமாகும்.
* சிலர் புண்கள் ஏற்பட்டால் அவை குணமடையும் வரை நீர் படக்கூடாது என்ற எண்ணத்திற் பல நாள்களுக்குக் குளிக்காமல் இருந்து விடுகிறார்கள் இது தவறானது அழுக்கான உடலில் இருக்கும் கிருமிகள் புண்களுக்கும் பரவி விடும். எனவே தினமும் குளிப்பது அவசியமானது அத்துடன் புண்களைக் கூட ''சோப்''இட்டுச் சுத்தமாகக் கழுவிக் கொண்டு வருமாறு வைத்தியர் உங்களைப் பெரும்பாலும் கோரக் கூடும்.
* அதிக நீராகாரம் பருகுவதும் பழவகைகள் உண்பதும் புண்களைச் சீழ்ப்பிடிக்க வைக்கும் எனப் பலர் எண்ணுகின்றார்கள் உண்மையிலே போதியளவு நீராகாரம் குடிப்பதும், போதியளவு பழவகைகள், புரதங்கள் உண்பதும் உடலின் குணமாகும் திறனை அதிகரித்து, புண்கள் விரைவிற் குணமாக உதவும்.
* ரெட்ராசைகிளின், ''பென்சிலின்'' ''அம்பிசிலின் போன்ற நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைப் புண்கள் குணமாகவென வழமையாகச் சிலர் உட்கொள்கின்றார்கள். மனித உடலுக்குப் புண்களையும் காயங்களையும் தானாகவே குணமாக்கும் திறன் இருப்பதால் இவை அவசியமற்றவை. ஆனால் புண்களிலே கிருமி தொற்றி வீக்கம்,வலி, கொதி,நெறி போடுதல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தோன்றினால் வைத்தியரின் ஆலோசனையுடன் மாத்திரம் நுண்ணுயிர் கொல்லி மருந்துகளை உபயோகியுங்கள்.
* காயங்கள் ஏற்பட்டால் ஏற்புத்தடை ஊசி போடுவது அவசியமானது. காயப்பட்ட உடன் முதலாவதும், ஒரு மாத எல்லையில் இரண்டாவதும், ஆறு மாத எல்லையில் மூன்றாவதுமாக ஏற்புத் தடை ஊசிகளை ஒழுங்காகப் போடவேண்டும்.

# களஞ்சியம்

## காஞ்சி ஜகத்குரு அருள் வாக்கு

வாழ்க்கைத் தொல்லைகளிடையே கொஞ்சம் உல்லாசமாகப் பொழுதுபோக்குவது ஒரு தப்பா? என்று கேட்பீர்கள். உங்களுக்குச் சொல்கிறேன். பரோபகாரமாகச் சேவைசெய்தால் அதுவே பெரிய உல்லாசம் என்று தெரியும் அதுவே விளையாட்டு, அதுவே இன்பம்.

## ஆட்டோகிராப்

ஆட்டோ கிராப் என்பது கிரேக்கச் சொல்லாகும். கிரேக்க மொழியில் ''ஆட்டோ'' என்றால் சுயமாக எனவும் கிராப்பியன் என்றால் எழுதிய எனவும் பொருள்படும். எனவே ஆட்டோ கிராப் என்பது சுயமாக எழுதியது எனப் பொருள் கொள்பவர் சிலர் இதனை''ஹோலோ கிராப்'' எனவும் அழைப்பர்.

## புனைபெயரில் எழுதியவர்

முதன் முதலில் புனைபெயரில் கதை எழுதிய எழுத்தாளர் வ. வே. சு. ஐயர்தான். அவர் எழுதிய குளத்தங்கரை அரசமரம் என்ற கதை 1915 ஆம் ஆண்டு விவேகபானு என்ற இதழில் வெளியாகியது. இவர் யாருடைய பெயரை புனைபெயராக வைத்திருப்பார்? மனைவி பாக்கிய லட்சுமி அம்மாளின் பெயரையே புனைபெயராக வைத்துக் கொண்டார்.

## இங்கிலாந்தின் பொன்னான காலம்

ஷேக்ஸ்பியர்காலத்தை இங்கிலாந்தின் பொன்னான காலம் என்று சொல்வார்கள். முதலாம் எலிஸபெத் மகாராணியார் இங்கிலாந்தை மிகவும் சிறப்பாக ஆண்டு வந்த காலம் அது. பிரிட்டன் தன் கடற்படைப் பலத்தால் சாம்ராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருந்த நேரம் அது. எலிஸபெத்தின் இந்த ஆட்சிக் காலத்தில்தான் இங்கிலாந்து தேசமே விழாக் கோலம் பூண்டு கோலாகலமாய் விளங்கியது.

## குப்தர் காலத்தில் அகழி

சந்திரகுப்த மன்னனுடைய தலைநகர் பாடலிபுரத்தில் 600 அடி அகலமும் 45 அடி ஆழமும் உடைய அகழி இருந்ததென்று மெகாஸ்தெனீஸ் குறிப்புக்களாலே தெரிய வருகிறது.

## விக்கல் சாதனை

லொஸ் ஏஞ்சல்ஸ்சைச் சேர்ந்த ''ஜாக் ஒலியரி'' என்பவருக்கு 1948ஆம் ஆண்டு ஜூன் 13ஆம் திகதி விக்கல் ஆரம்பித்தது. அது 1956ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதியன்றே நின்றது எட்டு ஆண்டுகளில் 16 கோடிமுறை (உத்தேசமாகத்தான்) விக்கல் வந்திருக்கும் என்று கணக்கு மூலம் சொல்லப்படுகின்றது மேலும் விக்கல் காலத்தின் போது இவருடைய எடை 64 இரு ஆல் குறைந்தது. இவருடைய விக்கலை நிறுத்துவதற்கு உலக நாடுகளிலுள்ள பலர் ஆலோசனைகள் தெரிவித்திருந்தனர். இந்த விக்கல் சாதனையாளர் தற்போது உயிருடன் இல்லை.

-மேரி ஷாலினி

## ஓ. கே! என்ற சொல்

ஆங்கிலம் பேசுவோர் மட்டு மன்றித் தமிழ் பேசுவோரிடையேகூட 'ஓ.கே' என்ற சொல் தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஓ. கே என்ற இந்தச் சுருக்கிய பதத்திற்கு உண்மையான வரிவடிவம் என்னவென்று பல பேராசிரியர்கள் இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

'ஒல் கரெக்ட்' என்ற சொற்கள்தான் சுருங்கி ஓ. கே ஆனதாக பிரிட்டிஸ் பேராசிரியர் கால்ஃபிரெய்த் தெரிவிக்கிறார்.

இத்தாலிய மொழியில் அப்படியே ஆகட்டும் என்பதற்கு 'ஓஸ்லே- கேஸ்டர்' என்பார்களாம். இச் சொற்களின் முதல்எழுத்துக்களின் கூட்டே ஓ. கே ஆகியிருக்கலாம் என்கிறார்கள் சிலர்.

ஓ. கே அமெரிக்காவில் பிறந்தது. அந் நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த ஆண்ட்ரூ ஜாக்சன் எழுதப் படிக்கத் தெரியாதவர். 1828-ல் தேர்தலில் அவர் போட்டியிட்டபோது ஓ. கே என்கிற சொல்லைப் பயன் படுத்தினார். அதற்குப் பிறகு அது பிரபலமாகி விட்டது என்கிறது ஒரு ஆங்கில அகராதி.

அமெரிக்க இந்தியர் பேசும் 'சோக்டா' என்ற மொழியில் ஓ. கே என்ற சொல் இருப்பதாகவும் அதற்கு 'அப்படியே ஆகட்டும்' என்ற அர்த்தமிருப்பதாகவும் தெரிகிறது.

இப்படியெல்லாம் 'ஓ.கே. மிகுந்த ஆராய்ச்சிக்குரிய சொல்லே ஆனாலும் இன்னமும் உலக வழக்கில் வழங்கி வருவது ஆச்சரியம்தான்.

## அச்சுத்தொழில் வரலாறு

மேடு பள்ளங்கள் கொண்ட பரப்பொன்றின் மேல் மை தடவிக்காகிதத்தின்மேலோ வேறொரு பரப்பின் மேலோ அழுத்திப் பரப்பிலுள்ள உருவத்தை அதில் தோற்றுவிப்பது அச்சடித்தல் எனப்படும். இன்று இத்துறையில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. லைனோடைப் (Lyno type) மொனோடைப் (Mono type)என இருவகை இயந்திரங்கள் இன்று புழக்கத்தில் உள்ளன லைனோடைப் இயந்திரம் வரி வரியாக அச்சுக்களைக்கோக்கும் மொனோடைப் இயந்திரம் தனித்தனியே அச்சுக்களை வார்த்துக் கோக்கிறது.

லைனோடைப் எந்திரத்தில் சாதாரணடைப்ரைட்டரில் இருப்பதுபோல் எழுத்துக்கள் குறிக்கப்பட்ட பொத்தான்கள் கொண்ட வரிசைகள் இருக்கும். ஏதாவதொரு பொத்தானை அழுத்தினால் எந்திரம் இயங்கி அச்செழுத்துக்கள் கொண்ட பெட்டியிலிருந்து அப் பொத்தானுக் கேற்ற எழுத்தை வெளியே எடுத்து ஓரிடத்திற் சேர்க்கும். இப்படி ஒரு வரிக்கு வேண்டிய எழுத்துக்கள் சேர்ந்தவுடன் வார்ப்படப் பெட்டி (Casteng box) என்ற கலத்திற்குள் எடுத்துச் செல்லப்படும். இதற்குள் உருகிய ஈயம் இருக்கும். வார்க்க வேண்டிய வரி இதை அடைந்ததும் உருகிய ஈயம் எழுத்துக்களின் மேற் பாய்ந்து ஒரு வரி அச்சைத் தோற்றுவிக்கும். இவ்வாறு உருவாகும் வரிகள்ஒன்றன்பின்ஒன்றாகஒரு அச்சுத் தட்டை அடையும். வரியை வார்த்தபின் எழுத்துக்கள் மீண்டும் தத்தமக்குரிய அறைகளை அடைந்து விடும்.

மொனோடைப் முறையில் அச்சுக்கோப்பதும் எழுத்துக்களை வார்ப்பதும் ஒரே எந்திரத்திற் செய்யப்படுவதில்லை. இந்த எந்திரத்திலே எழுத்துக்கள் குறித்த பொத்தான்களை அழுத்தினால் ஒரு நீண்ட காகிதச் சுருளில் ஒவ்வொரு எழுத்துக்கும் சரியாக ஒரு துவாரம் ஏற்படும். இவ்வாறு துவாரங்கள் கொண்ட சுருளை வார்ப்பட எந்திரத்தில் மாட்டி விட்டால் அது துவாரத்துக் கேற்ற எழுத்துக்களைத் தனித்தனியாக வார்த்துச் சேர்த்துக் கொண்டே வரும். விலை உயர்ந்த புத்தகங்கள் முதலியவற்றை அச்சடிக்க இம்முறை பெரிதும் பயன்படுகிறது. லைனோடைப் முறையில் பிழை ஏற்பட்டால் அந்த வரி முழுவதையும் திருப்பி வார்க்க வேண்டும், மொனோடைப் முறையில் பிழையான எழுத்தை மட்டும் வார்த்தாலே போதுமானது.

வேறு சில எந்திரங்களும் இப்போது புழக்கத்துக்கு வந்துள்ளன. இவற்றில் ஒளி அச்சுக்கோப்பான் (Photo typesetter) என்பது முக்கியமானது.

வி. கேயூரன்

# முனிக்கொரு நாணிலே

ஒரு நாள், மிதிலை மக்கள் திரண்டு, ''ஞான முனிக்கொரு நாணிலே'' என்று சர்வ வல்லமைகளும் படைத்த விசுவாமித்திர முனிவரை ஏசுகிறார்கள்.

கணமேனும் காத்த லரிய
வெகுளி யுறையும்

விசுவாமித்திரரின் வெகுளியையே விஞ்சுகிற வெகுளியோடு மக்கள் அங்கும் இங்கும் எங்கும் மொய்த்து நின்று ஏசுகின்றார்கள்.

வில் வளைத்தற் பொருட்டு இராமனை மிதிலைக்குஅழைத்து வந்த அம் முனிவருக்கு நாணமே இல்லை என்று பரிகசிக்கிறார்கள். (நாணம்—வெட்கம்; அறிவு)

அரிச்சந்திரனை உலகுள்ளளவும் சத்தியவந்தன் எனப் போற்றிப் புகழவைத்த அம் முனிவருக்கு வெட்கமே இல்லை என்று இச் சாதாரணர் பழிக்கின்றார்கள்.

அம் முனிப்புங்கவர் செய்த குற்றம் என்ன?

பெருந்தகை இராமனே சீதைக்கு ஏற்ற நாயகன் என அழைத்து வந்த முனிவர், நேரடியாகவே விவாகப் பேச்சைத் தொடங்குவதை விட்டு, மறந்துபோகவேண்டிய வில் வளைத்தல் பற்றி ஏன் பிரஸ்தாபிக்க வேண்டும்?

மல்லாதி மல்லரான மன்னர்கள் அசைக்கவும் முடியாத இந்த வில்லை இச் சிறு பிள்ளை எடுத்து நாணேற்றி விடுவானா? நாண் வில்லில் ஏறாதாயின், சீதை கழுத்தில் மங்கலநாண் ஏறாதே!

சீதையின் மங்கல வாழ்வுக்கு இந்தத் தனுசு ஒரு பெருந்தடை என்பது மக்கள் கணிப்பு. சீதை என்ற ஒருத்தி மேல் அவர்கள் கொண்ட பரிசுத்தமான அன்பு அம் மக்களை அவ்வாறு முனிவரைப் பழிக்கத் தூண்டியது வியப்பல்ல.

முனிபுங்கவரைப் பழித்துரைக்கச் சற்று முன்னர், இவர்கள் இராஜரிஷி ஜனகனையும் எள்ளி நகையாடியவர்கள்.

வேள்வி காணிய வந்தாராய இக் ''குலக் குமரர்... வில்லுங் காண்பார்'' என விசுவாமித்திர முனிவர் முதற்கண் கூறியதைச் சிந்தை செய்து, அக் குமரர்குல வரலாறு மனங்குளிரக் கேட்ட ஜனகன், ''வில் வளைதலே இயல்பு. ஆயினும் எவராலும் வளைக்கப்படாததாகிய ஆச்சரியகரமான இவ் வில்லை வளைத்தவனே எம் புதல்வியின் மணாளனுவான் என நான் சொன்ன சொற் பிழைத்ததால் நான் தோற்றவாறினை எண்ண என் மனம் நடுங்குகின்றது.

''நொய்தின் ஐயன் வில்
ஏற்றுமேல்
நோற்றனள் நங்கையும்
என்னையும் ''இடர்க் கடல்
ஏற்றும்'' என்றவன்,
''குன்று உறள் வரிசிலை
கொணர்மின் ஈண்டு''

என, தன் எதிரில் நின்றவர்களை நோக்கிப் பணித்தான்.

கல்லெனத் திரண்ட தோளினர் மல்வர் பல்லாயிரவர் திரியம்பகம் என்னும் அத் திவ்விய வில்லினை விற்சாலையினின்று கொணர்கிறார்கள்.

விசேஷங்களை மோப்பம் பிடித்துத் திரண்டு நின்ற மக்கள், ''ஏனும் இந்த வில்லினைக் கொணர்க என அரசன் பணித்தவன்? இவனுக்குப் புத்தியே இல்லை. மன்னவருள்ளே இந்த ஜனகனைப் போல் புத்தி கெட்டவர் எவரும் உளரோ?'' என்று ஜனகனைப் பழிக்கிறார்கள்.

''என் இது கொணர்க என
இயம்பினன் என்பார்
மன்னவர் உளர்கொலோ
மதிகெட்டார் என்பார்''

கூட்டங் கூட்டமாக நின்ற மக்கள், அவ் வில்லானது முனிவரும், ஜனகனும், இராமலக்குமணரும், வேறு பல அரசர்களும் கூடியிருக்கும் சபா மண்டபத்திலே, நிலமகள் முதுகு நெளிந்து பள்ளமாக, தரையில் வைக்கப்படுவதைக் காணுகிறார்கள்.

மதயானையை ஒத்தவனை இராமன் பொலிவையும், தன் சொல் இதுவரை பிழைத்ததால் வேதனை தருகின்ற அவ் வில்லையும், தன் புதல்வி சீதையின் நலனையும் எண்ணிய

**சுமுகன்**

ஜனகனது உட்கருத்தை உணர்ந்த குலகுரு சதானந்த முனிவர், அவ்வில் ஜனகனது அரச பரம்பரையில் வந்துற்ற வரலாற்றினைக் கூறத்தொடங்கினார்.

இத் தனுசு, உமாதேவியாரைப் பழித்த தக்கன் வேள்வியை அழித்து, அவிப்பாகம் பெற வந்த தேவர்களின் கரங்களும், பற்களும் உதிர வைத்த சிவ தனுசு.

இது, ஜனகனின் மூதாதையரில் ஒருவரான தேவராத மகாராஜனிடம் வைக்கப்பட்டது.

திரியம்பகத்தின் வரலாறு இதுவாக, சீதாவதார விசேஷம் பற்றியும் சதானந்த முனிவர் கூறலுற்றார்.

சீதா கல்யாணத்துக்கு, இச் சிவ தனுசை வளைத்து நாணேற்றியவனே நாயகன் ஆவான் என ஜனகன் முதலானோர் நிச்சயத்திருந்தார்கள்.

இவை, தனிக் கதைகள்.

இஃது இவ்வாறாக, வெளியே மொய்த்து நின்ற மக்கட் கூட்டத்திரைச் சற்றே நோக்குவோம்.

ஆதரவரித்து யானைகளென வந்து சீதாதேவியை மணங் குறித்துப் பேசிய வீராதி வீரர்களும், சூராதிசூரர்களும் இவ் வில்லுக் காற்றாராய்ப் பின்வாங்கி ஓடிப்போன கதை தெரிந்தவர்கள் அம்மக்கள்.

அசகாயசூரர்களுக்குநேர்ந்த கதி அதுவானால், இப் பாலகன் எம்மாத்திரம்!

நீண்ட காலமாக வில்லை எட்டிப் பார்க்கவே எவரும் துணியவில்லை. இன்று இந்தச் சிறு பிள்ளையை இம் முனிவர் இட்டு வந்துள்ளார். இப் பாலகன் வில்லை எடுத்து நாண் பூட்டிச் சீதைக்கு மாலைசூட்ட வல்லவனா?

இவ்வாறு அங்கலாய்ப்பு அலை மோதுகிற மனத்தினராய அம் மக்களின் கரங்கள் சிரமேற் குவிகின்றன. கண்கள் பனிக்கின்றன. குலதெய்வங்களின் நாமங்கள் உச்சரிக்கப்படுகின்றன. நேர்த்திகள் சங்கல்பிக்கப் படுகின்றன.

'இந்த இராமனும் வில் வளைத்து நாணேற்றானாயின், சீதாதேவியும் நாமெல்லோமும் ஒருமித்துத் தீ மூழ்குவோம்' என்று சபதம் செய்கிறார்கள் மக்கள்.

'இந்த இராமன் சீதையை மணஞ்செயவிரும்பியவனாயின், கேட்க முன்னரே, 'ஏற்றுக் கொள்வாயாக' எனக் கன்னிகாதானஞ் செய்து கொடுப்பதை விடுத்து, உள்ளீடற்ற மனத்தவனான இந்த ஜனகன் மகாமேரு போன்ற சிவ தனுசை எடுத்து இப் பாலகன் முன் வைத்தது அறிவின்மை' என்று ஜனகனின் மேதைமையைப் பேதைமை எனச் சாடுகிறார்கள் மக்கள்.

வள்ளல் மணத்தை மகிழ்ந்
தனன் என்றால்
கொள்ளென முன்பு கொடுப்
பதை அல்லால்
வெள்ளை மனத்தவன் வில்லை
எடுத்து, இப்
பிள்ளை முன் இட்டது
பேதைமைஎன்றார்.

சீதையின்பால் மக்கள் கொண்டிருந்த பேரன்பு அபிமானமாகி இவ்வாறெல்லாம் அவர்களைச் சிந்திக்க, சொல்ல வைத்தது.

இம் மட்டோ!

'ஞான முனிக்கொரு நாணிலே' என்று விசுவாமித்திரரைப் பழித்தவர்கள், அதே வாயால் அதே மூச்சில்,

'கோன் இவனில் கொடியார் இலே' என்பார்.

இந்த வெள்ளை மனத்தவன், நாணிலாத விசுவாமித்திர முனிவர் சொற்கேட்டு, வில்லை வளை என்று பச்சைப் பாலகன் முன் அதனை இட்டதால், சீதா கல்யாணம் நிகழுமோ என்ற ஐயப்பாட்டில், அரசனாகிய ஜனகனிற் கொடியவர் வேறு எவருமில்லை என்று மக்கள் புலம்புகிறார்கள்.

இடையில்,

விசுவாமித்திர முனிவர். புனைந்த சடை முடி துளக்கிப்

[14-ம் பக்கம் பார்க்க]

# அச்சுக்கலை வல்லுநர் சின்னத்துரை

**ஆசிரியமணி
அ. பஞ்சாட்சரம்**

**1902** ஆம் ஆண்டில் ''சுதேச நாட்டியம்'' ஆரம்பிக்கப்பட்டது. இப்பத்திரிகையை ஆரம்பித்தவர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை. ''கண்டனங்கள் கிறக் கல்லடியான்'' என்பது இவர் பிரதாபத் திருநாமம். இவர் எழுதிய நூல்கள் பல. அவற்றுட் சிரோரத்தினமாய் விளங்குவது ''யாழ்ப்பாண வைபவ கௌமுதி'' 1918–ல் இந் நூல் வெளிவந்தது.

1909. 12. 05-ல் வயாவிளானிற் பிறந்த சின்னத்துரை வயாவிளான் அமெரிக்க மிஷன் பாடசாலையில் [இப்பொழுது வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை] ஏழாம் வகுப்பு வரையும் படித்தார். ஆங்கில பாடசாலையிற் சேர்ந்து படிக்க எடுத்த பிரயத்தனங்கள் கைகூடவில்லை. ஓராண்டு கமத்தொழிலில் ஈடுபட்டார்.


''சுதேச நாட்டியம்'' பத்திரிகை ஸ்தாபனமான வயாவிளான் ஜய ஸ்ரீ சாரதா பீடேந்திரசாலை, இளைஞரான சின்னத்துரையை வரவேற்றது. கைகொடுத்துதவினர். மாமனாரான ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அச்சகத்தையும், சுதேசநாட்டியம் பத்திரிகையையும் நல்ல முறையில் நடத்திவந்தவரான கவிஞர் திரு. சி. நல்லதம்பி அநுசரணையில் அச்சக முயற்சிகளில் ஈடுபட்டுத் தொழில் நுட்பங்களை நன்கு பயின்று கொண்டார் திரு. சின்னத்துரை.

வயாவிளான் விநாயகர் ஆலயத்தில் பூசகராயிருந்தவரும், மஹாவித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களது பேரருமான பிரம்மஸ்ரீ சி. தங்கசாமி ஐயர் அவர்களிடம் தமிழை கற்கும் வாய்ப்புத் திரு. சின்னத்துரைச்குக் கிடைத்தது. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, கவிஞர் நல்லதம்பி, பிரம்மஸ்ரீ, சி. தங்கசாமி ஐயர் என்போரே இளமையிற் கல்வியுலகிலேயே தம்மைக் கைதூக்கிவிட்ட பெரியார்கள் என்று திரு. சின்னத்துரை இன்றும் நன்றிப் பெருக்குடன் கூறுகிறார்.

1926ஆம் ஆண்டு 'தனலக்குமி புத்தகசா'லையையும், 1924ஆம் ஆண்டு 'திருமகள் அழுத்தக'த்தையும் ஆரம்பித்தது இரு கண்கள் என மதித்து வளர்த்தவர் குரும்பசிட்டி திரு. நா. பொன்னையா. திரு; பொன்னையா 'சுதேச நாட்டியம்' பத்திரிகை ஸ்தாபனத்தில் எழுத்துக் கோத்தல் புத்தகங்கள் கட்டுதல் முதலிய துறைகளில் இளமையிற் பயிற்சி பெற்றவர். அவரது பயிற்சி 'தனலக்குமி புத்தகசாலை' 'திருமகள் அழுத்தகம்' என்பனவற்றின் வளர்ச்சிக்குப் பெரு வித்தாயமைந்தது எனலாம். இப்பயிற்சியின் அடிப்படையில் 1930ஆம் ஆண்டில் ஈழகேசரிப் பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தத்தொடங்கினார்கள். இதன் காரணமாகக் குரும்பசிட்டி திரு. நா. பொன்னையா 'ஈழகேசரிப் பொன்னையா' என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டார். ஈழகேசரிப் பொன்னையாவின் கண்கள் திரு. சின்னத்துரையைக் கண்டன' 1933 இல் திருமகள் அழுத்தகத்திற் சேர்ந்தவர் திரு. சின்னத்துரை.

ஈழத்துத் தமிழ் வளர்ச்சி வரலாற்றில் திருமகள் அழுத்தகத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. ஈழகேசரி வாயிலாகவும் பெரியார்களது நூல்களை அச்சிட்டு வெளியிட்டதின் மூலமும், மாணவர்களுக்கு வேண்டிய உப பாடப் புத்தகங்களைச் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்துக்கு ஏற்றமுறையிற் பிரசுரித்ததின் மூலமும் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தின் பங்களிப்பு உயர்ந்த இடத்தைப் பெறுகின்றது. வட இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகத்தின் பெயர் இவ்வாற்றல் எங்கும் பரவியது. இம் முயற்சிகளுக்கெல்லாம் அழுத்தக ஊழியராய் இருந்த போதிலும் நிர்வாகிகளுக்கு ஊன்றுகோலாயுதவியவர் திரு. செ. சின்னத்துரை அவர்கள்.

ஈழகேசரி பத்திராதிபர் திரு. நா. பொன்னையா ஊழியர்களிடம் அன்புடனும் பண்புடனும் நடந்துகொள்ளும் இயல்பினர். திருமகள் அழுத்தகத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊழியர்களை நல்ல முறையிற் பேணிவந்த பெருந்தகை. எனக்கு வேறு இடங்களிற் கூடிய சம்பளத்தில் வேலைசெய்யச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதிலும் பத்திராதிபர் அவர்களது பண்பட்ட போக்குத் திருமகளிலேயே நிலைக்கவைத்துவிட்டது. அவ



ரது அன்புப்பிணைப்பு அவரை விட்டு விலக விடவில்லை. முதலாளி என்றால் பத்திராதிபர்தான் என்பார் திரு. சின்னத்துரை.

திருமகள் அழுத்தகத்திற் பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள், விசேட மலர்கள் அச்சாகி வெளிவந்துள்ளன. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் இலங்கையிற் கலை வளர்ச்சி, தென்னிந்திய சிற்ப வடிவங்கள், ஈழநாட்டுப் புலவர் சரித்திரம், ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், மட்டக்களப்புத் தமிழகம் என்பவை திருமகள் அழுத்தகத்தில் அச்சிட்டு வெளிவந்த முக்கிய நூல்கள்.

பண்டிதமணி அவர்களுக்குப் பெரும் புகழ் தந்த கந்த புராணம் தக்ஷகாண்டம் உரை நூல், சைவ நற்சிந்தனைகள் சமயக்கட்டுரை, இலக்கிய வழி திருத்தப் பதிப்பு, கந்தபுராண போதனை, கம்பராமாயணம்–கவிநயக் கட்டுரை, சிந்தனைக் களஞ்சியம், அன்பினைந்திணை, அத்வைத சிந்தனை, என்பனவும் அச்சிட்டுவெளிவந்த நூல்களே

கந்த புராணம் தக்ஷகாண்டம் உரை நூலிற் பண்டிதமணி அவர்கள் எழுதிய நன்றியுரையில்.

'திருமகள் அழுத்தக அதிபர் திரு. மு. சபாரத்தினம் அவர்கள் ஒவ்வொரு துறையிலும் உழைத்த உழைப்புச் சொல்லுந்தரமன்று அச்சமைப்பு முதல்வர் திரு. செ. சின்னத்துரை அவர்களின் நுட்பங்களும், திரு. ஆ. முத்தையா அவர்களின் புத்தக அமைப்பும் தனிச் சிறப்பு வாய்ந்தவை'

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 'திரு. செ. சின்னத்துரை அவர்களின் நுட்பங்களும்' என்ற தொடரில் 'நுட்பங்கள்' என்ற சொல் அர்த்தபுஷ்டி வாய்ந்தது. அச்சமைப்பு முதல்வர் திரு. செ. சின்னத்துரை அவர்களுக்கு அச்சமைப்புத் துறையில் உள்ள சிறந்த அநுபவத்தைப் பண்டிதமணி அவர்களது 'நுட்பங்கள்' என்ற வார்த்தைப் பிரயோகம் இரித்தீபமென விளக்குகின்றது.

கந்த புராணம் தக்ஷகாண்டம் உரை நூல் வெளியீட்டு விழா, பேராதனை பல்கலைக் கழகக் கலை மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்ற போது நூலின் அமைப்புமுறை

[15-ம் பக்கம் பார்க்க]

கற்பனை வளம் வாய்ந்த இனிய நடையினுலும் குடும்ப நிகழ்வுகளை உணர்ச்சிபூர்வமாகச் சித்திரிக்கும் சிறப்பினுலும் நாவல் இலக்கிய உலகில் தனித்துவம் பெற்றவர் லக்ஷ்மி ஆபாசம் கலவாது எழுதுபவர் என்ற சிறப்பும் அவருக்குண்டு. அவரது படைப்புக்களை விமர்சிப்பதோடு அவரது வரலாற்றையும் தருகிறது இந்தக் கட்டுரை.

# நாவல் இலக்கிய உலகில் தனிஇடம் பெற்றவர் லக்ஷ்மி

பெண்கள் பிரச்சினைகளை வைத்து ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாகக் குடும்பக் கதைகள் எழுதிய 'லக்ஷ்மி' அண்மையில் காலமானுர் இவருக்கு இறக்கும் போது வயது 65.

'லக்ஷ்மி'யின் இயற்பெயர் திரிபுரசுந்தரி. இவர் மகப்பேற்றுத்துறையிற் புகழ் பெற்ற டாக்டர். மருத்துவக் கல்லூரியிற் படித்த போது இவர் பொருளாதார நிலை படிப்பைத் தொடர இடையூருக இருந்தது. மருத்துவக் கல்லூரியில் மனதை அழுத்திய துயரத்தை மறக்க அமெரிக்கப் பத்திரிகை ஒன்றைப் புரட்டினுர். அமெரிக்க வைத்தியக் கல்லூரி மாணவன் ஒருவன் தொடர்ந்து தன் படிப்பை முடித்துக்கொள்ளப் பொருளாதார வசதிஇன்றிச் சிரமப்பட்டான்; ஓய்வு நேரங்களிற் காய்கறி ஏற்றிச்சென்ற தொரு லொறியை ஓட்டிக் கிடைத்த ஊதியத்திற் கல்வியைத் தொடர்ந்தான்;பட்டம் பெற்றுன்; மேற் படிப்பை முடித்து அறுவைச் சிகிச்சை நிபுணராக வாழ்ந்தான் என்ற செய்தி 'லக்ஷ்மி'க்குப் புதிய தெம்பை ஊட்டியது.

படிப்பைத் தொடர்வதற்காகக் கதைகள் எழுதினுல் என்ன? என்ற எண்ணம் 'லக்ஷ்மி' மனதில் உதித்தது. 'ஆனந்த விகடன்' காரியாலயம் சென்ருர் 'ஆனந்த விகடன்' பத்திரிகை ஸ்தாபகர் எஸ்.எஸ். வாசனைச் சந்தித்தார் தன் நிலையைக் கூறி எழுதச் சந்தர்ப்பம் கேட்டடார். நீங்கள் சிறுகதை தருகிறீர்களா? என்று கேட்டார் வாசன்.மறுநாள் சிறுகதையுடன் வாசனைச் சந்தித்தார் 'லக்ஷ்மி'

வாசன் 'ஆனந்த விகடன்' ஆசிரியராக இருந்த'கல்கி'யை 'லக்ஷ்மி'க்கு அறிமுகம் செய்து வைத்தார்.'கல்கி' கதையைப் படித்துவிட்டு பதில் எழுதுவோம் கவலைப்படாதீர்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

அமரர் 'கல்கி' தமிழகத்துக்குக் கண்டுபிடித்துக் கொடுத்த எண்ணற்ற எழுத்தாளர்களுள் 'லக்ஷ்மி'யும் ஒருவர்' நான் முதன்முதலாக ஒரு சிறுகதை எழுதி 'ஆனந்த விகடனு'க்கு அனுப்பினேன். அதைப்படித்துவிட்டு கதை பிரசுரமாவதற்கு முன்பே ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினுர் கல்கி அந்தக் கடிதம்தான் என்னைமேன் மேலும் எழுதத் தூண்டியது என்று பல சந்தர்ப்பங்களில் 'லக்ஷ்மி' கூறியுள்ளார்.

திரிபுரசுந்தரி'லக்ஷ்மி' என்ற புனைபெயரில் எழுதியமைக்குத் தன்னுடன் படிக்கும் மாணவர் கதைகளைப் படித்துவிட்டுச் கேலி செய்வார்களோ என்ற பயந்தான் காரணம்.

பத்து வயதிலேயே விதவையாகிவிட்டவர் லக்ஷ்மி''யின் பாட்டியின் சகோதரி. வாழ்க்கையிற் சுகம் என்பதையே அறியாத அவளுடைய நினைவு 'லக்ஷ்மி'யின்நெஞ்சைப் பலமாக அமுக்க... அவள்பெயரை ஏன் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற நினைவில் 'லக்ஷ்மி'என்ற புனை பெயரைத் தேர்ந்தெடுத்தார். அப் பெயரிலே எழுதத் தொடங்கி இறுதிவரை அப்பெயரிலேயே எழுதிவந்தார்.

''தகுந்த தண்டனையா'' இவர் எழுதிய முதலாவது சிறுகதை வைத்திய கல்லூரியை மையமாக வைத்து எழுதப்பட்ட இக்கதை 'லக்ஷ்மி' என்ற புனை பெயரில் 'ஆனந்த விகட'னில் வெளியாகியது.

## முதல் நாவல்

'லக்ஷ்மி' எழுதிய முதல் நாவல்,'பவானி' இந்தநாவல் முப்பத்தேழு அத்தியாயங்களைக் கொண்டது. இக்கதையின் கதாநாயகிக்கு பெயர் பவானி. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கிராமத்துப் பெண். ஆனுல் பணக்காரி, பட்டதாரி, அழகி, கர்வம் மிகுந்தவள். அவள் பிரபல டாக்டரை மணக்கிருள். அறிவு ஜீவியான அவரை அவளாற் புரிந்து கொள்ள முடியவில்லை. அகந்தையாலும், பொருமையாலும் தன் வாழ்க்கையையே நாசம் செய்து கொள்ளுமளவுக்குச் சென்று பின்னர் திருந்துவதாகக் கதை. பவானி கதாநாயகியானுலும் கதாநாயகனை சுந்தரவதனம்தான் நாவலில் நல்லதொரு கண்ணியமான மனிதனுகப் பிரகாசிக்கிருன்.



'லக்ஷ்மி' முதல் நாவலில் ஆண் கதாபாத்திரத்தைத் தான் மிகவும் சிறப்பாகச் சித்திரித்தார்.

லக்ஷ்மி ஆண்களை மட்டந்தட்டி எழுதுவதாக,ஆண்வாசகர்கள் குறை கூறுகிருர்கள். 'இப்படிக் குறை கூறுபவர்கள் எனது முதல் நாவலான பவானியைப் படித்திருந்தால்

பூரணை

அப்படிச் சொல்லமாட்டார்கள் என'லக்ஷ்மி' ஒரு முறை கூறியதுண்டு.

பவானி என்ற நாவலை எழுதிய பின் ஏனைய நாவல்களை ஒரு சில அத்தியாயங்களை மட்டும் எழுதிப் பிரசுரிக்கக் கொடுத்துவிட்டு மீதமுள்ளதை வாராவாரம் எழுதும் பழக்கம் ஏற்பட்டது.

மாத நாவல்களைத் தவிர வாரப் பத்திரிகைகளில் வெளிவரும் எந்தக் கதையையும் அவர் முழுதாக கொடுத்து எழுதியதேயில்லை. முழுவதும் எழுதி. மொத்தமாக கொடுத்து விடவேண்டும் என்ற ஆவல் மட்டும் அவரிடம் இருந்தது; அவகாசம் இருக்கவில்லை.

'லக்ஷ்மி' அவர்கள் சிறுகதைத் தொகுப்பொன்றைப் புத்தகமாக வெளியிட விரும்பினர். இதற்கு முன்னுரை தருமாறு ஒருமுறை ராஜாஜி அவர்களைப் பணிவன் போடு கேட்டார். பேரறிஞர் ராஜாஜி லக்ஷ்மியைப் பார்த்துப் புன்னகைத்தவாறு 'உன் எழுத்துக்கள் இலக்கியத் தரத்துடன் இருந்தால் அதற்கு என் முகவுரை தேவையில்லை. அவ்வாறில்லாதிருந்தால் நான் முகவுரை தருவது தவறு' என்ருர்.

அவர் சொன்ன கருத்தைச் சிந்தித்துப் பார்த்தார் லக்ஷ்மி. அதில் அடங்கியிருந்த அற்புதமான அறிவுரையை எண்ணி மகிழ்ந்தார். அதற்குப் பின்னர் 'லக்ஷ்மி, கதைகளைப் புத்தக வடிவிற் பிரசுரிக்கும் போது. யாரிடமும் முகவுரை கேட்டுச் சென்றதில்லை. பதிப்பாசிரியர் எழுதும் அறிமுகத்துடன் அவரது புத்தங்கள் வெளியாகின.

இவர் எழுதிய 'ஒரு காவிரியைப் போல...' என்ற நாவல் :'சாஹித்திய அகடமி'' பரிசு பெற்றது. 'மிதிலா விலாஸ்' தமிழக அரசின் பரிசைப் பெற்றது இவை வாசகர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்ற நாவல்களாகும்.

## திரைப்படம்

இவருடைய 'பெண் மனம்' சென்னை அரசாங்க பரிசுபெற்ற நாவல், ''இருவர் உள்ளம் எனப்பெயர் மாறப்பட்டுத் திரைப்படமாக வெளிவந்து பெரும் வெற்றி பெற்றது. 'லக்ஷ்மி'யின் பெண்மனத்துக்குக்கலைஞர் மு. கருணாநிதியின் கருத்தாழமிக்க வசனமும் நடிகர்திலகம் சிவாஜிகணேசன் சரோஜாதேவி ஆகியோரின் உணர்ச்சி மிக்க நடிப்பும் உயிரூட்டின என்பதனை எவரும் மறுக்க முடியாது.

1951 ஆம் ஆண்டு லக்ஷ்மி எழுதிய 'தாய்மை' என்ற நாவலுக்கு இலங்கையிற் பரிசு கொடுத்தார்கள். பாராட்டுவிழாவும் நடத்திணுர்கள். இவ் விழாவிற் கலந்து கொள்ள லக்ஷ்மி இலங்கை வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1955 ஆம் ஆண்டு லக்ஷ்மியின் வாசகரான தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த கண்ணபிரானுக்கும், லக்ஷ்மிக்கும் காதல் அரும்பியது. இருவரும் கலப்புத்திருமணம் செய்துகொண்டார்கள். திருமணம் செய்த பின்பு லக்ஷ்மி இருபத்து இரண்டு ஆண்டுகள் தென்ஆபிரிக்காவில் வாழ்ந்தார்,

அங்கே புகழ்பெற்ற டாக்டராகச் சிறந்து விளங்கினுர். லக்ஷ்மியின் கணவர் தென் ஆபிரிக்காவில் அச்சகம் வைத்திருந்தார். இதுதான் தென் ஆபிரிக்காவின் பெரிய அச்சகமாகும்.

'லக்ஷ்மி' யின் கணவர் 'கிரபிக்' என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தி வந்ததோடு நிறவெறி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவும் கொடுத்து வந்தார். இவர் 1966 ஆம் ஆண்டு காலமானுர். லக்ஷ்மிக்கு மகேஸ் என்ற ஒரு மகன் இருக்கிருர். இவர் லண்டனில் டாக்டருக்குப் படித்துக்கொண்டிருக்கிருர்.

'லக்ஷ்மி' 1977 ஆம் ஆண்டு நிரந்தரமாகச் சென்னையிற் குடியேறினுர், அங்கு குடியேறிய பின்னர் வைத்தியத் தொழிலைக் கைவிட்டார். இறக்கும்வரை கதைகள் எழுதுவதிலேயே வாழ் நாளைச் செலவிட்டார்.

இவர் கற்பனையாகவும் கதைகள் எழுதியிருக்கிருர். சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களையும் கதைகளாக எழுதியுள்ளார். பிறர் குறை சொல்ல இடம்தராதபடி கதை எழுதுவார்.

கதையில் மருத்துவப் பிரச்சினை அல்லது சட்டப் பிரச்சினை வருகிறது என்ருல் அந்த அந்தத் துறையைச் சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்த பின்பே எழுதுவார். 'லக்ஷ்மி தனது வாழ்க்கை வரலாற்றை எழுதி இருக்கிருர். இறுதிப் பகுதியை எழுதமுன் மறைந்துவிட்டார். அவர் விட்டுச் சென்ற பகுதியை அவரது மகன் மகேஷ் எழுதப்போவதாகக் கூறியுள்ளார்.

ஆரோக்கியமான எழுத்து மூலமே வாசகர்களைக் கவர முடியும். ஆபாசம் அவசியமில்லை என்று திரும்பத் திரும்ப நிரூபித்தவர் லக்ஷ்மி.

கதை சொல்லும் உத்தியால், பாத்திரப் படைப்புத் திறனுல், உணர்ச்சிகளை வெளியிடும் பாங்கால், ''சஸ்பென்ஸ்டன்''நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கோக்கின்ற பாங்கால், எழுத்தின் நடையழகால், வாசகர்களைக் கவர்ந்தவர் லக்ஷ்மி. ●

# இலக்கியத்தில் இனியதொடர்

**சான்ருேர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வஞ் செல்வமென்பதுவே**

புலவர் ம.பார்வதிநாதசிவம்

நற்றிணை என்பது சங்க இலக்கியமாகிய எட்டுத் தொகையில் ஒன்று. இது காதலைப் பாடும் நூல். இந்நூல் காதலைப்பாடும் அதே நேரத்தில் எக் காலத்துக்கும் பொருந்தும் உயர்ந்த கருத்துக்களையும் சொல்லுகின்றது.

''சான்ருேர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண் செல்வஞ்செல்வமென்பதுவே'' என்னும் இனிய தொடர் நற்றிணையில் வருகிறது. இது தலைவனுக்குத் தோழி கூறுவதாக அமைந்த தொடர்.

இத் தொடரின் பொருள் உலகினர் செல்வம் என்று கருதுவதும் வேறு. சான்ருேர் கருதுவதும் வேறு. தன்னை அடைக்கலம் என்று வந்தவரைக் கைவிடாமல் அவருடைய துன்பத்துக்கு அஞ்சி அத் துன்பத்தைப் போக்கி இனிய பண்பினராக நடந்து கொள்வதையே சான்ருேர் செல்வம் என்பர் என்பதாகும்.

தன்னை அடைக்கலமென்று வந்த விபீடணனுக்கு இராமபிரான் அவனது துன்பத்தைப் போக்கி அருள் செய்தது இராமாயணத்தில் வரும் செல்வம். இது வீட்டுக்கு அப்பால் நிகழ்ந்தது.

நற்றிணை அகப் பொருள் நூலாதலால் வீட்டின் அகத்தே நிகழவேண்டியதை இத் தொடர்மூலம் குறிப்பாகப் புலப்படுத்துகிறது.

தோழி தலைவனைப் பார்த்து ''உன்னை அடைக்கலமென்று கருதி உன்னைக் கைப்பற்றிய மனைவியின் துன்பத்துக்கு அஞ்சி அவள் துன்பத்தைப் போக்கி அவளைக் கண்கலங்க விடாது அவளிடத்து இனிய பண்பினனுக நடந்துகொள்ளுதல் வேண்டும். உன்னிடத்து உலகம் வியக்கத்தக்க பல செல்வங்கள் இருக்கலாம் ஆயினும் சான்ருேர் செல்வம் என்பது இதனையே என்கிருர்.

அகத்திணை நூலாகிய நற்றிணையில் கூறப்பெறும் இந்தக் கருத்து எந்தக் காலத்துக்கும் பொருந்துவதாகித் தலைவியிடத்துத் தலைவனுக்குக் கருணை ஏற்படச் செய்வதாகி அமைந்துள்ளது.

இத் தொடரில் துன்பத்தைப் புன்கண் என்ற சொல்லினுலும் இனிய தன்மையனாய் நடந்து கொள்ளுதலை மென்கண் என்ற சொல்லினுலும் குறிப்பிட்டது பொருள் அழகும், ஒலி நயமும் வாய்ந்த ஒன்ருகும்.

இல்லறம் சிறப்புற வேண்டுமானுல் காதல்வாழ்வு பெருமையுற வேண்டுமானுல் தலைவனிடம் ஏனைய செல்வங்கள் இருப்பதைவிட அன்புச் செல்வம் இருக்கவேண்டியது அவசியமென்கிருள் தோழி. ●

# திருநான்மறை விளக்க ஆராய்ச்சி தந்த அறிஞர்

யாழ்ப்பாணத்திலும் – மட்டக்களப்பிலும் நீண்டகாலமாகத் தமிழ்ப் புலமை சிறந்து விளங்கியதற்குக் குரு சீடபரம்பரையாக வந்த கல்வி முறையே காரணமாகும். ஆற அமர இருந்து, ஐயந்திரிபற இலக்கண இலக்கியங்களை கற்கும் வாய்ப்பு இங்கே இருந்தது. இக் கல்வி முறையினூற் பலர் சிறந்தோங்கினர். ஊரெழு முருகேசையர் இவ் வழியில் வளர்ந்து பூரணத்துவம் எய்திய ஒருவராவர்.

ஆரம்பக்கல்வியை இணுவில் வெங்கடாசலவாத்தியாரின் குருகுலப் பள்ளியில் பெற்ற ஐயர் சுன்னுகம் குமாரசாமி புலவரின் நிழலாக நீண்டகாலந்திரிந்தார். புலவர் வண்ணுர் பண்ணைக்குக் கால்நடையாகச் செல்லும் போது ஐயரும் பின்தொடருவார், திரும்பும் போது தானுந் திரும்புவார். ''நடராசாவும் நிற்கப் படிப்பும் நிற்கும்'' என்று தமது அனுபவத்தை வேடிக்கையாக ஐயா குறிப்பிடுவதுண்டு.

புலவரிடத்தில் பேரன்பு பூண்ட ஐயர் தமிழ்ப் புலவர் சரித்திரம் எழுதும் போது புலவருக்கு வேண்டிய நூல்கள் யாவற்றையும் தேடிக் கொடுத்து உதவி புரிந்தார்.

20-ம்நூற்றுண்டில் நாவலர் பெருமாள் வழியில் கருமமாற்ற முனைந்தவர்களில் ஐயரும்ஒருவர். கொக்குவில் மாத்தளைப் பிள்ளையார் கோயிலுடன் தொடர்புடைய சீனி ஐயரின்மகனுனஇவர், ஊரெழுவில் வாழ்ந்தார். தெல்லிப்பழை, துர்க்கை அம்பாள் ஆலயத்துடனும் இவருக்குத் தொடர்பிருந்தது.

வண்ணுர்பண்ணை சைவப் பிரகாசவித்தியாசாலையில் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளைக்குப்பின் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அதிபரானுர். அங்கே நடந்த காவிய பாடசாலையிலும் ஐயர் அவர்கள்

ச, கதிரவேலு, B. A.

சில காலம் படிப்பித்தார். கைலாசபிள்ளை இவர்களின் வித்துவ நண்பரென்பர்.

ஐயா அவர்கள் கண்டதும் கற்ற பண்டிதர். எல்லாவற்றையும் அறியவேண்டுமென்ற விருப்பமுடையவர். ஒரு கேள்வி கேட்டாற் போதும், உடனே விடை ஓடிவரும், தீர்க்க முடியாத ஐயங்களைப் படித்து ஆராய்ந்து வீடு தேடி வந்து விடை சொல்லுவார். வீதியிற் கிடைக்கும் கடதாசித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துப் படித்துப்பார்த்துப் பயன்படுமாயின் இறப்புக்களிலே சொருகி வைப்பார். தேவைப் படும்போது எடுத்துப்படித்துக் காட்டுவார்.

குத்தலாகக் கதை சொல்வதில் ஐயருக்கு நிகர் ஐயரே. மிகுந்த விவேகத்துடனும், விரைவாகவும் குத்துவார், எப்போதுமே சிலேடையாகத்தான் பேசுவார். ஆசுகவி வேலுப்பிள்ளையுடன் நடந்து கொண்டே பகடிகள் விட்டுக் கொண்டு வயாவிளான் செல்வதையான் பார்த்திருக்கிறேன். வயாவிளான் ஆனந்தகுமரன் அச்சுயந்திர சாலை மூலமே இவர்களின் கண்டனப் பிரசுரங்கள் பெரும்பாலும் வெளிவந்தன. கல்லடி வேலுப்பிள்ளையுடன் சேர்ந்து ஒரே நாளில் அச்சிட்டு வெளியிட்ட சில நூல்களும் உண்டு. இருபதாம் நூற்றுண்டில் 60–65 வருடத்துக்கு மேலாகக் கல்வி கலாசார அறிவாராய்ச்சித் துறையில் ஈடுபட்டு வாழ்ந்த பெரியார் இவர்.

பயன் சொல்வதில் மகா சமர்த்தர். காசி காண்டத்துக்குப் பயன் சொல்வதிலே தேர்ச்சியும் அநுபவமும் பெற்றிருந்தார், புராணப் படிப்பு மரபுகளையும், உரைவேறுபாடுகளையும் நன்கு அறிந்தவர். அந்தக்காலப் புராணப்படிப்பு, இந்தக்காலப் பட்டிமன்றம் மாதிரி இருந்தது. இரும்புக் கடலை என வருணிக்கப்படும் தணிகைப் புராணத்துக்குப் பயன் சொல்லி வெற்றி வாகை சூடியவர் ஐயர். எந்தவகையிலும் அறிவாராய்ச்சிதான் அவர்களின் பொழுதுபோக்கு.

செந்தமிழ் இதழில் ஐயர் அவர்களின் சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன. குமாரசாமிப் புலவருக்கு மாருகச் செந்தமிழ்ப் பத்திரிகையில் நடந்த வாக்குவாதங்களைப் பற்றி விளக்குவதில் அவர்களுக்கொரு இன்பம். வித்து சிரோமணி கணேசையரின் இரகு வம்சத்துக்கு எழுதிய கண்டனமும் சிலப்பதிகார ஆராய்ச்சிக்கு எழுதிய கண்டனமும் பிரசித்தி பெற்றவை. அச்சுவாகன மேறிய நூல்களில், திருநான்மறை விளக்க ஆராய்ச்சி முதன்மையானது. யாப்பிலக்கணத்திலே மிகவும் வல்லுநரான ஐயரவர்கள்,கவிதைகளை எழுதித் தன் மாணவர்கள் நண்பர்கள் பெயரில் வெளியிடுவதுண்டு. பாடிய இரங்கற்பாக்களோ அனந்தம்.

யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சபையின் இணைக்காரியதரிசிகளில் ஒருவராகவும் ஐயர் பணி புரிந்துள்ளார். மானிப்பாய் நாகையாவும் ஊரெழு அப்புக்குட்டியும் இச்சபையிற் கடைசிவரை நின்று பிடித்த உறுப்பினர்களில் இருவராவர். திருமூலர் திருமந்திரத்துக்கு விளக்கம் கொடுப்பதில் ஐயர் மகாவீரன், சைவ சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தி வாழ்க்கையோடு தொடர்புறுத்தி, மிகவும் எளிமையாகவும்,புரிய வைப்பதிலும் ஐயர் சமர்த்தரே.

கண்டனகாரஞக, பண்டிதராக, விகடகவியாக வாழ்ந்த ஐயரின் பணிகள் வெளிக்கொணரப்பட வேண்டும். ஐயரின் தொண்ணூறுவது பிறந்த நாளை ஒட்டி இம்மாத இறுதியில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது மனநிறைவு தருவதொரு செய்தியாகும்.

# துர்க்காபுரம் பண்டிதமணி அறநிதியம்

பண்டிதமணி ஐயா அவர்களின் வாழ்நாளில் பெரும் பகுதி புக்ககமான திருநெல்வேலியாக அமைந்தது. திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப்பேராசானுக இருந்து பணியாற்றிய சைவத் தமிழ்த் தொண்டுகள் பல. இதன் பெறுபேருக பல ஆயிரக்கணக்கான மாணவர் பரம்பரை உருவாகியது. அதனுல் ஒரு பெரிய கல்விப்பாரம்பரியம் தலையெடுத்தது.

பண்டிதமணி ஐயா அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் நாவலர் பெருமானின் நீதி, தர்மம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தவர்கள்.

பண்டிதமணி ஐயா அவர்களின் சீடர் பரம்பரையில்–''எழுத்தறிவித்தவன் இறைவன்'' என்ற நிலையில்-பண்டிதமணி ஐயா அவர்களை ''பண்டிதமணி அப்பா'' என அழைத்துப் பெருமை கொள்பவர்களில் யானும் ஒருவன் பண்டிதமணி ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி நூலுருவிற்காணுமுன் மறைந்தவர் இ. சிதம்பரப்பிள்ளை அவர்கள். அவர்கள் எழுதிய நூலை அச்சிட்டு ''மட்டுவில் தந்த பண்டிதமணி சி,க.'' என்ற பெயரில் வெளியிடும் ஒரு புண்ணியப்பேறு திருவருள் வசத்தால் எனக்கு வாய்த்தது. வெளியீட்டு விழாவில் நூலையும், பண்டிதமணி ஐயா அவர்களையும், நூலாசிரியரையும்பாராட்டிக்கௌரவம் செய்தவர்கள் பலர். கோயில் பணிகளுடன் நின்றுவிடாது சமூகப்பணிகளையும் ஆற்றிவரும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், பெருந்தலைவர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், தர்ம கைங்கரியங்களுக்கு முன்னின்றுதவும் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா அவர்களும், நல்ல காரியங்களைத் தேடி ஆற்றிவரும் முரசொலி நிறுவனமும், பண்டிதமணி ஐயா அவர்களைத் தம் குருவாகக்கொண்டு போற்றிவந்த ''மில்க்வைற்'' தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர்களும், மற்றும் பல அன்பர்களும் முதற் பிரதிகள் பெற்று அளித்த அன்பளிப்புக்கள் அறக்கட்டளை நிதியம் ஒன்றை அமைக்கப் பெருந்துணை புரிந்தன.

இந்த அறக்கட்டளை நிதியம் பண்டிதமணி நினைவாக ஆண்டுதோறும் மார்ச் மாதம் 13 ஆம் திகதியன்று பண்டிதமணி அமரத்துவம் அடைந்த தினம் துர்க்காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகளுக்கு உணவு வழங்கவெனத் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நிர்வகித்துவரும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் நாவலர் பெருமானின் ஆந்தாண்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவர்கள் அநாதை என்ற சொல்லைத் தம் அகராதியில் இருந்துநீக்கிஆதரவற்றபிள்ளைகள் என்ற பாங்கில் நடாத்திவரும் இந்த இல்லத்துக்குப் பண்டிதமணி பெயரில் அமையும் அறக்கட்டளை நிதியம் பல்வேறு வளர்ச்சிக்கும் உதவுவதாகும்.

கா. சிவபாலன்

# தித்திக்கும் கனியின் சத்தும் பயன்களும்

ப. தருமலிங்கம்
மாவட்ட விவசாயப் பயிற்சி முகாமையாளர்

## குடல் ஒழுங்கீனங்களுக்குப் பழங்கள்

பல்வேறுநோய்கட்கும் மலச்சிக்கல் ஒரு மரபுரிமையானது இதற்கு நிரந்தர நிவாரணி உலகிற் கிடையாதபோதும் பழங்கள் இதனைக் குணப்படுத்துகின்றன. அப்பிள், தோடை, பியர்ஸ், வாழை, ஸ்ரோபெரி ஆகியன இயற்கையாகவே மலமிளக்கும் தன்மையுடையன. இருந்தும் அத்தி, முந்திரிகை, சீமை, வாதுமை, கொடிமுந்திரிகை வற்றல், பேரீந்து போன்ற பழங்கள் மலச்சிக்கலை நிரந்தரமாக வேரோடு அகற்றிவிடும் தன்மையுடையன. இப்பலன் கிடைப்பதற்கு மேற்படி பழங்களை நன்கு மென்று உண்ணவேண்டும். அல்லது இவற்றின் சாற்றைப் போதியஅளவு பருகுதல் வேண்டும்.

## ஈரலிலேற்படும் சிக்கல்களுக்குப் பழம்

பழங்களில் உப்புகளும்,அமிலங்களும் இருப்பதனுல் ஈரலின் தொழிற்பாடுகளைச் சீர் திருத்திக் கட்டுப்படுத்துவதிற் பழங்கள் அதி முக்கிய பங்கெடுக்கின்றன. எக்காரணியால் இரத்தச் சோகை ஏற்பட்டாலும் பழங்கள் அகற்றிவிடும். விசேடமாக வாழைப்பழம் இரத்தத்தை உற்பத்தி செய்யும் ஒரு சிறந்த பழமாகும். குழந்தைகட்கு ஏற்படும் இரத்தச் சோகையைப் பழங்கள் போக்கும் தோடம்பழம் இரத்தச் சோகையைக் கண்டிக்கும் ஒரு பழமாகும். இது அழகைக் கொடுப்பதுடன் பலவகை இரத்த எதிரிகளை அழித்துச் சுத்திகரிக்கின்றது. இதனுல் போதியளவு பழங்களை உண்ணும் பழக்கமுடையவர்கள் மறுவில்லாத (மறை) அழகும் கவர்ச்சியான தோற்றமுடையவராகவும் திகழ்வர்.

## சிறுநீரக பித்தப்பை வியாதிகட்கு பழங்கள்

பழங்கள் சிறுநீர்க் கழிவுகளைத் தூண்டும் தன்மையால் சிறு நீரகத்தைத் துப்பரவாக்குகின்றன. இத்தன்மைலெமன் வகையிலும், எலும்மிச்சை வகையிலும் மிகுதியாகக் காணப்படுகின்றது. இப் பழங்கள் சிறுநீரகத்தைக் சுத்தப்படுத்துவதுடன் அதன் தொழிற்பாடுகளையும் சீராக்குகின்றன. எனவே நீரிழிவு நோயினுல் பாதிக்கப்பட்டு உடல் நலம் குன்றியவர்கள் அத்தி, பேரீந்து போன்ற பழங்களில் மட்டுமே தங்கியிருக்கவேண்டும். மாம்பழம் சிறுநீரகம் போன்ற தோற்றமுடையது. அத்துடன் மாம்பழத்தில் சிறுநீரகத்தை வலுவூட்டும் தன்மை அமைந்துள்ளது. சிறுநீரகத்தில் ஏற்படும் கல்,சிறுநீரக பித்தப்பை ஒழுங்கீனங்கட்கு முந்திரிகைப்பழம் சிறந்தது.இரண்டு மூன்று அல்லது சிலவேளைகளில் ஆறு(6) இருத்தல் முந்திரிகைப்பழம் தினமும் உண்ணும்படி விதிக்கப்படுகிறது.

## ஆண்களுக்கு ஏற்படும் நோய்களுக்குப் பழங்கள்

ஆண்களில் மேகநோய்களுக்கு எரிவுத்தன்மையும் கொண்ட மருந்துகளையே பாவிக்கின்றனர். எனினும் ஒழுங்காகப் பழம் சாப்பிடுமிடத்து ஆண் உறுப்பிலேற்படும் குறைபாடுகள் நீக்கப்படுகின்றன. அப்பிள், மா, முந்திரிகை போன்ற பழங்கள் வெண்ணெய் ஆகியவற்றுடன் சேர்த்து உண்ணும் போது விரைவாகவும், சிறப்பாகவும் பலன் கிடைக்கின்றது.

## பெண்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு பழங்கள்

பணக்காரக் குடும்பத்திலுள்ள பெண்கள் சோம்பலாக நேரத்தைக் கழிப்பதாலும், சமிபாட்டுத்தொகுதி தடைப்படுகின்றது இவர்களுக்குப் பல வசதிகளும் இருப்பதினுல் மந்தமடைந்து நன்ருகவேலை செய்ய முடியாது காணப்படுவர். இவர்களின் ஈரலில் உஷ்ணம் கூடி மலர்ச்சிக்கலேற்படுகின்றது.

இதனுல் அசௌகரியமும், நடையில் நொண்டுந் தன்மையும் ஏற்படுகின்றன. சில சமம் இடுப்பு வலியும், தலைவிறைப்புமேற்படுகின்றது. மந்தநிலை ஏற்படும்போது கசப்பு மருந்துகள் குடிக்க முடியாது கஷ்டப்படுவர். இப்படியானவர்கள் இரண்டு மூன்று வாரங்கட்குத் தொடர்ந்து பழ உணவு சாப்பிட்டு வருவதனுல் குணமடைவர்.

## நரம்புத்தொகுதிக்கு ஏற்ற பழங்கள்

புளிப்பான பழங்கள் நரம்பு வியாதிகட்குத் தீங்கானவை. அவற்றிற்கு அமிலத் தன்மையான பழங்கள் நன்மை பயக்கும், இவற்றைப் போதியளவு உட்கொண்டால் வாத நோய்களைக் குணப்படுத்தும்.

## காய்ச்சலுக்குப் பழங்கள்

காய்ச்சலிற்குப் பழரசம் விசேஷமானது. தோடம்பழரசம் ருசியானதும், பசியைத் தூண்டுவதோடு இலகுவில் சீரணிக்கக் கூடிய ஓர் ஔடதமாகும். காய்ச்சலால் தோல் வறண்டு உஷ்ணமாகி, உதட்டில் தோல் உரியுமிடத்து இது அதிகளவில் உட்கொள்ள வேண்டும். இது காய்ச்சலின் வெப்பத்தைத் தணித்து, தாகத்தைத் தணித்து நோயாளியின் வேதனையை அகற்றுகின்றது.

## இரத்த அசுத்தத்திற்குப் பழங்கள்

அமிலத்தன்மையுடைய அல்லது மலமிழக்கும் தன்மையுடைய பழங்கள் இரத்தத்திலுள்ள அசுத்தங்களை நீக்கி தோல் அழற்சியை நீக்குகின்றது. பெரும்பாலும் மாமிச போசணிகளுக்கு இரத்தம் நச்சுத்தன்மையடைதலேற்படுகின்றது. இதற்குப் பழங்களை உண்பதாலேயே குணப்படுத்தலாம்.

## கொழுத்தலிற்குப் பழங்கள்

கொழுத்தல் உண்மையில் ஓர் நோயாகும். கொழுத்தவர்கள் மெலிவதற்கும் சுறுசுறுப்பாகவும், வீரியமாகவும் இருப்பதற்கும், புளிப்பான பழங்களை அதிகளவு உட்கொள்ளல் வேண்டும். தினமும் இரண்டு மூன்று கிளாஸ் லெமன் அல்லது தோடம்பழரசம்பருகுதல் வேண்டும். அல்லது தினமும் இரு லெமன் பழங்களை உண்ணும்பொழுது மேலதிக கொழுப்பை அகற்றி ஒல்லியாகி உடற்பலம் ஏற்படும்.

# வரதருக்கு வயது 65

## வரதரிடமிருந்து புத்தாக்கங்கள் வரவேண்டும்!

‘‘முன்னாலை புன்னாலை, என்னாலை பின்னாலை பொன்னாலை’’ என்று வரகவி கிருஷ்ணரால் விதந்துரைக்கப்பட்ட பொன்னாலைதான் ‘வரதர்’ அவர்களின் தாயகம். கிருஷ்ணராலே புன்னாலைபொன்னாலை ஆயிற்று. இந்தப் பெயரை சிறப்பளித்து வருபவர்களில்



வரதரும் ஒருவர் என்று தயங்காது கூறலாம்.

பொன்னாலைத் தியாகர் சண்முகம் அவர்களின் மகனாக 01-07-1924 இல் பிறந்த வரதராசன் அந்நாட் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலே சித்தியடைந்தவர்; ஈழகேசரிப் பண்ணையில் சிறுபராயத்திலேயே இடம்பெற்று, நாற்பதுகளில் ‘மறுமலர்ச்சி’ இயக்கத்திலேபக்குவதசைஅடைந்து ‘மறுமலர்ச்சி’ சஞ்சிகையின் இணையாசிரியர்களுள் ஒருவராய் முதிர்ச்சி பெற்றவர்; ‘முற்போக்கு’ என்ற சொற்றொடர் நடைமுறையில் கையாளப்பட்டு வேகம்பெற முன்னரே இலக்கிய உலகிலே முற்போக்குக் கொள்கைகளைச் சிக்கெனப் பிடித்துக் கொண்ட பெருமையையும் வரதர் தட்டிக் கொண்டுள்ளார்.

‘வரதர்’ கவிதை செய்ததும் உண்டு. ‘வென்று விட்டாயடி இரத்தினா’, ‘வாழ்க நீ சங்கிலி மன்னா!’ முதலான குறுநாவல்களை எழுதியதும் உண்டு. ஆனால் சிறுகதைத் துறையிலேதான் இவரது சாதனை இலக்கிய விமர்சகர்களின் போற்றுதலுக்கு உள்ளாகியிருக்கிறது. அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் இவரின் ‘வாத்தியார் அழுதார்’ என்ற சிறுகதையின் கட்டுக் கோப்பையும், வருணனைச் சிறப்பையும், கதைசார் கருத்தையும் மிகுதியும்விதந்து எழுதியுள்ளார். அறுபதுகளிலேயே, மிக முற்போக்கான பெண்ணிலைவாதக் கருத்துக் கொண்ட சிறுகதையாக முற்போக்கு விமர்சகர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்ட கதை ‘வெறி’ என்பது ‘கயமை மயக்கம்’ வரதரது தரமான சிறுகதைகளின் தொகுதி.

வரதர் செயல் வீரர். அதிகம் பேசி அலட்டிக் கொள்வது அவர் அறியாதது எழுத்தாளர் கூட்டுறவுப் பிரசுரங்கள், சங்கங்கள் அமைந்து, ஆக்க இலக்கியங்களும், ஆற்றல் இலக்கியங்களும் பரவலாக நூல்வடிவம் பெற முன்னரே எழுத்தாளர் பலரின் ஆக்கங்களுக்கு நூல்வடிவம் தந்து ஊக்குவித்த புரவலராகவும் ‘வரதர்’ விளங்கினார்; விளங்குகின்றார்.

பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கிய வழி, இரசிகமணி, கனக செந்திநாதனின் ‘மூன்றாவது கண்’ வித்துவான், பொன். முத்துக்குமாரனின் ‘சிலம்பு பற்றிய நூல், மஹாகவியின் ‘வள்ளி’, எனது ‘தெய்வப்பாவை’ செங்கையாழியனின் 24 மணித்தியாலங்கள்’, ‘யானை’ பிளினர் காரை செ. சுந்தரம் கள்ளையின் குறுங்காவியப் படைப்பு முதலியன ‘வரதர்’ வெளியிட்ட குறிப்பிடத்தக்க நூல்களிற்சில. ‘தேன்மொழி’ என்ற கவிதைச் சஞ்சிகை, ‘ஆனந்தன்’ ‘வெள்ளி’ ‘புதினம்’ ஆகிய சஞ்சிகைகள் வரதரின் சஞ்சிகை வெளியீட்டுப் பணிக்குச் சான்று கூறுவன. பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் ‘தமிழிலக்கியத் திறனாய்வு’ என்ற நூலையும் வரதரே வெளியிட்டார்.

வரதரின் புதுமை வேட்கையின் முன்னோடி முயற்சிகளில் தலைசிறந்தது ‘வரத’ரின் பல குறிப்பு ஆகும். ஆங்கில Directory பாணியில் அமைந்த இத்தமிழ் நூலில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள், அவர்களின் ஆக்கங்கள் பற்றிய விபரங்கள் விரிவாகத் தரப்பட்டுள்ளமை சிறப்பித்துக்கூற வேண்டிய தொன்று. ‘திருக்குறள் பொழிப்புரை’யை மலிவுப் பதிப்பாக 50 சத விலையில் வெளியிட்டமையும் வரதரின் பணிப்பரப்பின் விரிவினை எடுத்துக் காட்டுவதாகும்.

வரதரின் எதிர்காலத் திட்டங்கள் பல. ‘உலகப் பேராளிகள்’ என்ற தலைப்பில் பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை உள்ளடக்கிய ‘கலைக்களஞ்சியம்’ ஒன்றினைப் பிரமாண்டமான அளவில் அமைத்து வெளியிடுவது இவற்றுள் தலையாயது. இந்தத் தொகுப்பாக்க வேலையை, ‘குருவி தலையில் பனங்காயை வைத்தது’ போல எனது தலையில் வரதர் ஏற்றி ஆண்டு ஒன்று நிறைகிறது. வரதரும் நம்பிக்கை இழக்கவில்லை. நானும் சிறு நம்பிக்கையில் தொங்கிக் கொண்டிருக்கிறேன். இம்முயற்சியின் சித்தி பற்றி எதிர்காலந்தான் விடையளிக்கும். இதற்கிடையில் மாதம் ஒரு நாவல், வாரசஞ்சிகை, மாதசஞ்சிகை என்று

**சொக்கன்**

அவரின் புதுப்புதுத் திட்டங்கள். ஒன்றை ஒன்று நெருக்கியடித்துக் கொண்டுவெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

‘நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்பட
வேண்டும்’

என்ற பாரதியின் கவிக்கூற்று ‘வரதர்’ வரையில் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்.

வரதருக்கு இந்த ஜூலை முதலாந் திகதியோடு அறுபத்து நான்கு வயது முடிந்து அறுபத்தைந்தாவது வயது தொடங்குகின்றது. என்றும் இளைஞர்க்கோலம் மாறாது விளங்கும் இவர் அறுபத்தைந் தாண்டு எல்லையை அடைந்துவிட்டாரா என்று நாமெல்லாம் வியப்படையும் நிலையிலேயே உள்ளோம். எதற்கும் அதிக உணர்ச்சிவசப்படாது நிதானமாகச் சிந்தித்து நிலையான பணிகளைத் திரிகரண சுத்தியோடு செய்து வருவதே இவரின் ‘இளமை இரகசியம்’ என்பது எனது கருத்து.

இலக்கியக் கூட்டங்களிலே குத்துவிளக்கேற்றித்தொடக்கி வைப்பதும், நூல்வெளியீட்டு விழாக்களில் முதற்பிரதி வாங்கி எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும், தம்மைக்கவர்ந்த இலக்கிய ஆக்கங்களைச் செய்தவர்களைப் பாராட்டி அவ்வப்

(15-ம் பக்கம் பார்க்க)

# புதினப் பத்திரிகை பற்றிச் சில செய்திகள்

முதலாவது புதினப் பத்திரிகை 1000 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் வெளியிடப்பட்டது. அதனுடைய பெயர் ‘சிங் பாஓ’ (Tching pao) அதன் அர்த்தம் ‘‘தலைநகர்ச் செய்திகள்’’ என்பதாகும்.

இரண்டாவது வெளிவந்த பத்திரிகை ‘அக்டா தியூர்னா’ (Acta Diurna) அதன் அர்த்தம் ‘நாளாந்த நடப்புகள்’ என்பதாகும்.

உலகின் முதலாவது தினசரி 1772-ம்ஆண்டு ‘மோர்னிங் போஸ்ற் (Morning Post) லண்டனில் வெளிவந்தது. இதையடுத்து வெளிவந்ததுதான் பிரபல ‘லண்டன் ரைம்ஸ்’ இப் பத்திரிகை இன்றும் வெளிவருகின்றது.

இந்தியாவில் முதல் வெளியிடப்பட்ட பத்திரிகையின் பெயர் ‘‘வங்காள கசெற்’’ (Bengal Gazette) வெளி வந்த திகதி 29. 1. 1780.

இன்று உலகம் முழுதும் 50 மில்லியன் மக்கள் தினமும் புதினப் பத்திரிகைகள் வாங்குகிறார்கள்.

உலகிலேயே அதிக எண்ணிக்கையில் புதினப் பத்திரிகைகள் வெளிவரும் நாடு ரஷ்யாவாகும். அங்கு 8000க்கு மேற்பட்ட பத்திரிகைகள் வெளிவருகின்றன. 120- 130 கோடி ரஷ்யர்கள் தினமும் பத்திரிகைகள் வாசிக்கின்றார்கள்.

1886-ம் ஆண்டில் முதன் முதலாக விநியோகத்தில் ஒரு மில்லியன் இலக்கைத் தாண்டிய பத்திரிகை பரிஸிலிருந்து வெளிவந்த ‘லெஸ் பெற்றிற் ஜார்னல்’ (Les Petit Journal) என்பதாகும்.

1970-ம் ஆண்டில் ‘ஆஷாஷி சிம்புன்’ (Ashashi Shimbun) என்ற ஜப்பானியப் பத்திரிகை விநியோகத்தில் 10 மில்லியன் இலக்கை அடைந்துள்ளது.

1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ந் திகதி நியூயோர்க் ரைம்ஸ் (New York Times) என்னும் பத்திரிகை 15 பகுதிகளாக 972 பக்கங்களில் 102 மில்லியன் வரிகளைக் கொண்ட விளம்பரங்களோடு 50 சத விலையில் வெளிவந்தது. இதுவே இதுவரை உலகில் வெளிவந்தபத்திரிகைகளில் மிகப் பெரிய பதிப்பாகும்.

# சான்றோர் கருத்துக்கள்

திறமைமிக்க ஒரு வண்டிக்காரன் மாடுகளைச் சீராக ஓட்டுவது போல், சிறந்த சாதகன் தனது ஐம்புலன்களைத் தன் கட்டுப் பாட்டில் வைத்திருப்பான்.

* *

நாம் தான் நம்முடைய பழக்கங்களை உண்டாக்குகிறோம். ஆனால் அவை நம்மையே அடிமையாக்கி அதிகாரம் செலுத்த ஆரம்பித்து விடுகின்றன.

* *

மனித உடலை ஆபரணங்கள் அழகுபடுத்துவது போல் தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த சாதகனை உண்மை, அடக்கம், அன்பு, தயை, காருண்யம் போன்றவை அழகு படுத்துகின்றன.

* *

கடவுளின் நாமம் ஒன்றே இந்தச் சம்சாரசாகரத்தைக் கடக்கக் கூடிய சிறந்த படகாகும். இக் கலியுகத்தில் இறைவனின் நாமத்தைத் தவிர வேறு எந்தச் சாதனையும் சீக்கிரம் கைகூடி வராது.

* *

கண்கண்ட தெய்வங்களாகத் திகழும் மாதா பிதாக்களை ஒதுக்கிவிட்டுப் பல கோயில்களை நாடுபவனைவிட நாத்திகனே சிறந்தவனாவான்.

# மகிழ்ச்சிக்கு வழி

சந்தேகம் எப்பொழுதும் எதிலும் வரக்கூடாது.

தாழ்வு மனப்பான்மை தவறியும் வரக்கூடாது.

தற்பெருமை என்றும் பேசவே கூடாது.

என்னால் முடியுமென்ற அவசியமற்ற சவாலை ஏற்கவே கூடாது.

**கே. வசந்தநாயகி**


பிரயாண அன்பர்களுக்கு எமது ஸ்தாபனத்தார் வழங்கும் மகிழ்ச்சிகரமான

**பிரயாண ஒழுங்குகள்**

★ இங்கிலாந்து ★ ஜேர்மன்
★ பிரான்ஸ் ★ இத்தாலி
★ சுவிஸ் ★ ஹொலண்ட்
ஆகிய நாடுகளுக்கும்

★ ஹொலண்ட் ★
றைவேஸ் மெக்கானிக்ஸ்

★ சவுதி அரேபியா ★
கிளினேஸ் எழுதுவினைஞர்
கவுஸ் றைவேஸ் விற்பனையாளர்

★ சிங்கப்பூர் ★
பணிப்பெண்கள் உடன் தேவை

சென்ற வார ஜேர்மன் குழு தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டது.

எமது அடுத்த குழுக்கள் விரைவில் புறப்பட இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்

இவை அனைத்திற்கும்
உங்கள் பயண அமைப்பாளர்

**M. P. LINGAMS**

764, Hospital Road, Jaffna.

07017



**யாழ். வேம்படி மகளிர் கல்லூரி**

**அதிபர் பதவி வெற்றிடம்**

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமைகளில் ஏதாவதொன்றைப் பெற்றிருக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் மூன்று அல்லது அதற்கு உயர்ந்த தரம்
அல்லது
இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லாத முதலாந்தர அதிபர்
அல்லது
1 ஏபி, 1 சி தரமுடைய பாடசாலைகளில் அதிபர் கடமை புரிபவர்

விண்ணப்பங்கள் யாவும் பூரண சுய விபரங்களுடன் 14. 07. 89 ஆந் திகதிக்கு முன்னர், பதிவுத்தபால் மூலம் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் பதவி விண்ணப்பம்’’ எனக் குறிப்பிடல் வேண்டும்’

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
29. 06. 1989.

07026

# வாழும் வழி

**சிவத்தமிழ்ச் செல்வி-தங்கம்மா அப்பாக்குட்டி**

## மனிதப் பிறவியை மதித்திடுமின்

மனிதப் பிறவி எடுப்பது என்பது பல கோடி புண்ணிய வசத்தினுல் ஏற்படுவது. செவ்வேற் கந்தன் தமிழ் மூதாட்டியை நோக்கி அரியது எது என்று கேட்கிருர். "அரிது அரிது மானிடராதலரிது" என்று கூறி மனிதப் பிறவியினது மாண்பினைச் செந்தமிழ்ப் பாவால் எடுத்து மொழிகின்ருர் தமிழ் மூதாட்டி ஔவையார். ஆனுல் மனிதப் பிறவி எடுத்தோர் எல்லோரும் மனிதராகிவிட முடியாது. உண்பது, உறங்குவது போகநுகர்வு அனைத்தும் மற்றும் ஜீவராசிகளுக்கும் உண்டு. ஆகவே மனிதர்களாகிய நாம் எந்த விதத்தில் ஏனைய ஜீவராசிகளிலிருந்தும் வேறுபடவேண்டும் என்பதுதான் சிந்திக்கவேண்டியது. விலங்கினங்கள் முதலியவற்றுக்கும் வாயுண்டு. என்ருலும் வாயில்லாச் சீவன்கள் என்று சொல்கின்ருேம் ஏன்? வாய் என்பதன் முக்கிய செயல் பேசுவதும் ஆண்டவன் நாமத்தைச் சொல்வதுமாகியவற்றில் சிறப்படைகிறது. இந்தச் சிறப்பு மனிதப் பிறவி ஒன்றுக்குத்தான் உண்டு.

### மனிதனைத் தேடுகிறேன்

மேலை நாட்டில் ஒரு அறிஞர் பகலில் விளக்கை ஏந்திக்கொண்டு தெருவால் போகிறவர்களையும் வருகிறவர்களையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டு திரிந்தாராம். வீதியில் போகிறவர்கள் இவருக்குப் பயித்தியம்பிடித்து விட்டது போலும் என்று பரிகாசம் பண்ணினுர்களாம். ஆனுல் அந்தப் பெரியார் என்ன சொன்னுர். "ஐயா வேறு ஒன்றுமில்லை. யாராவது மனிதர் இந்தத் தெருவால் போகிருர்களோ என்றுதான் பார்க்கிறேன்" என்று சொன்னுர். ஆகவே அந்த அறிஞருக்கு உண்மையான மனிதனை அடையாளங்காண அவா எழுந்தது என்ற உண்மையை உணர முடிகிறது.

### மனிதன் என்பவன் யார்?

கிடைத்தற்கரிய உண்மைப் பேறுகளை அளிக்க வல்லது இந்த மானிடப் பிறவி, மனிதன் என்ற சொல்லுக்கே நினைப்பவன் என்பதுபொருள். இந்த நினைப்பினுல் அவன் மனதை அடக்கி ஆளவும் பயின்று கொள்கின்ருன். சிரிக்கவும் சிந்திக்கவும் தெரிந்தவனே மனிதன்.

அத்துடன் ஜீவ சேவையையும் புரிந்து பின்பற்றுகிற கடமை மனிதனுக்கு உண்டு. மனிதப் பிறவி என்பது ஒரு ஏணி. ஏணியிலே நிலைத்து நிற்பதல்ல; ஏறிப்போக வேண்டிய இடத்துக்குப் போய்ச்சேர்ந்துவிடவேண்டும்.

நரை கூடிக் கிழப்பருவ
மெய்தி
கொடுங் கூற்றுக் கிரை
யெனப் பின் மாயும்
வேடிக்கை மனிதர்களைப்
போல
மண்ணில் வீணே வீழ்ந்து
விடலாமா?"

அப்படி விழ்வதற்கு இந்த ஆறறிவு படைத்த மனிதப் பிறப்பு வேண்டியதில்லை.

### செய்யும் தொழிலே தெய்வம்

சமயத்தலைவர் ஒருவருடைய மாளிகையிலே சமையற்காரராகப் பணிபுரிந்தவர் ஒரு துறவி. சமய போதனைகள், விழாக்கள் மாளிகையின் முன் புறத்தில் மிக ஆரவாரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். அதே நேரத்தில் மாளிகையின் பின்புறம் மிக அமைதியாகக் காட்சியளிக்கும். துறவி மௌனமாகச் சமையல் வேலையில் ஈடுபடுவார். உணவுப் பண்டங்களை ஏற்ற வகையில் பாகம் பண்ணல், பாத்திரங்களைத் தூய்மையாக வைத்திருத்தல், சமையல் அறை ஒழுங்கு, அனைத்தையும் தனி ஒருவராக மௌனமாகச் செய்துகொண்டு இறைவன் தன்னோடு துணையாக இருந்து வழிகாட்டுகிருன் என்ற அருளுணர்வோடு செயலாற்றினுர். நாளடைவில் சமயத்தலைவரின் அருளாற்றலிலும் பார்க்க இவருடைய அருளாற்றல் விஞ்சி விட்டது. தெய்வாம்சம் இவரிடத்திலே பிரகாசிக்கத் தொடங்கியது. முன் பக்கமாக வந்தவர்கள் எல்லோரும் பின்பக்கமாகச் சமையலறையை நோக்கி வந்து இவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். நோய், துன்பம் கவலை அனைத்தையும் மக்கள் மத்தியிலிருந்து விரட்டி ஓட்டும் மாபெரும் மதத் தலைவராம்நிலையை இந்தச் சமையற்காரத் துறவி பெற்ருர் என்பது ஒரு சிறு சம்பவம். இக்கதையிலிருந்து நாமறிந்து கொள்வது அடக்கமும், தூய உள்ளமும், அமைதியும் இறைவனை முன் வைத்து ஆற்றும் கடமைகளும் இணைந்து விட்டால் அங்கே தெய்வம் பிரகாசித்து வெளிப்பட்டு அருள் புரியத் தொடங்கி விடும் என்பதேயாம்.

"இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ" ஞானநெறி கைவரப்பெற்ற தாயுமான சுவாமிகளின் கூற்று இது வழிபாட்டுக்கும் பணி செய்வதற்கும் கிடைத்த மனிதப் பிறவியைப் பயன்படுத்தாமல் விட்டால் இறுதிக் காலத்தில் ஏக்கமே ஏற்படும் அந்த ஏக்கம் ஏற்படாமல் உணர்ந்து நன்னெறி நாடி வாழ்வதையே பெரியோர்கள் பின்பற்றினர். "பூவுலகில் போய் பிறக்கக் கடவாய்" என்று சுந்தரருக்குத் திருக்கைலாயத்தில் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கேட்டவுடன் அழுதார், தொழுதார் இரங்கி ஏங்கினுர். என்ருலும் பயனில்லை கட்டளையை மேற்கொணடார். வேண்டாம் மானிடப் பிறவி என்று வெறுத்தவருக்கு அப்பிறவி கிடைத்துவிட்டது. திருமுனைப்பாடி நாட்டில் வளர்ந்து வாலிபராகிச் சிதம்பர தரிசனத்துக்குச் செல்கிருர். நடராசப் பெருமானின் அற்புத நடன தரிசனத்தால் மனிதப் பிறவியே வேண்டும் என்ற நிலையைப் பெற்று விடுகிருர் சுவாமியின் இத்தகைய அற்புதக் காட்சியைத் தரிசிப்பதற்கு இந்த ஒரு பிறவியினுல் தானே முடியும். ஆகவே இதுவே எனக்கு மிகவும் வேண்டிய பெருநிலைமை எய்துவிக்கும் பிறவி என்று வாயாரப் படுகின்ருர். இதனைப் பெரிய புராண வரலாற்றில் காண்கிறேம். ஆகவே கும்பிடக் கிடைத்த அரிய பிறவி

[15-ம்பக்கம் பார்க்க]

## எழுத்துச் . . .

[3-ம் பக்கத் தொடர்]

சீர்திருத்தத்தினுல் பிற பிரச்சினைகள் தோன்றி, பெருமளவு பணச்செலவும் ஏற்படுமாயின் அத்தகைய சீர்திருத்தத்தை நாம் செய்யக்கூடிய நிலையில் இல்லை என்றே கூறவேண்டும். தமிழைப் பயன்படுத்தும் நாடுகள் பின்தங்கியவையாக, பிற பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்து, இச் சீர்திருத்தங்களை நினைத்தவாறு செய்துவிட முடியாது உதாரணமாக, இன்றைய சீனுவை எடுத்துக் கொள்வோமானுல், பல ஆயிரக்கணக்கான குறிகளைக் கொண்ட ஒரு எழுத்து முறையை வைத்துக்கொண்டு நவீனமயமாக்க முயற்சிகளிலும் துரிதமாக ஈடுபடவேண்டியிருப்பதைக் காணலாம். அருகேயுள்ள ஜப்பான் அதே போன்ற ஆயிரக் கணக்கான குறிகளை 1850 ஆக மட்டுப்படுத்தி, மேலும் மூன்று இலகுவான எழுத்துமுறைகளையும் (ஹிரகன, சுதகன, ரோமாஜி) அதனுடன் கலந்து பயன் படுத்துவதைக் காணலாம். அப்படியான எழுத்துப் பிரச்சனை இருந்தும், ஜப்பான் இன்று உலகிலே மிகவும் தொழில்மயமாகிய, நவீனமயமாகிய வளர்ச்சியடைந்த ஒரு நாடாக இருப்பதைக் காண்கிறேம். அதற்குரிய எழுத்து முறையுடன், எம்மைப்போன்று ஒரு இலகுவான தட்டெழுத்து யந்திரத்தைக் கூட ஜப்பானிய அலுவலகங்களில் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியிருப்பதைக் காணலாம். ஆனுல், நாம் எங்களுடைய எழுத்து முறையில் உயிர்மெய்க்குறியீடுகள் ஒரு சீராக இல்லை என்றே, வேறு குறியீடுகள் ஒரு சீராக இல்லை என்றே வாதாடி எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் என்கிறேம். ஆனுல் ஜப்பானுடன் ஒப்பிட்டால் எங்களுடைய எழுத்துமுறை எவ்வளவோ இலகுவானதாக கற்றுக்கொள்ளவும், எழுதவும் சுலபமானதாய் இருப்பதைக் காணலாம். எழுத்துச் சீர்திருத்தம் உண்மையில் அவசியமானதாகத் தோன்ருது. அதுமட்டுமன்றி, ஒரு சீராகச் சில குறியீடுகள் இருக்கவேண்டுமென்பதற்காகச் சீர்திருத்தத்தைப் புகுத்தினுல் பல பிரச்சினைகளும், பெருஞ்செலவும் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகவிருக்கும். பெருந்தொகையான நூல்களைத் திரும்பவும் அச்சிடுவது பேரன்ற பிரச்சினைகள் இலகுவில் தீர்க்கமுடியாதவை. மிகவும் முன்னேற்றம் அடைந்த மொழி என நாம் கருதும் ஆங்கிலத்திலே கூட நிறைய ஒரு சீரற்ற பண்புகள் எழுத்துமுறையிலே காணப்படுகின்றன. இவை எழுத்துக் கூட்டல் (spelling) சம்பந்தமான பிரச்சினைகளாக இருந்தாலும், எழுத்துமுறையுடன் தொடர்பானவை. இவற்றை தீர்க்கமுற்படுவது வேறு பல பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுமாகையால், அவற்றை அப்படியே விட்டுள்ளார்கள். உதாரணமாக, ஆங்கிலச் சொற்களில் வரும் ugh என்ற எழுத்துத்தொகுதி பல வேறுபட்ட ஒலிகளைக் குறித்து நிற்பதையும், அதனுல், புதிதாக ஆங்கிலத்தைக் கற்பவருக்குப் பிரச்சினைகள் ஏற்படுவதையும் காணலாம். cough என்பது கொவ் kofi எனவும் (Thorugh) என்பது த்று (Thru) எனவும், Bough என்பது Bow எனவும், Rough என்பது ரவ் (Tuff) எனவும். Though என்பது (Tho) தோ எனவும் பல்வகை ஒலிகளுக்கு நிற்பதைக் காணலாம். இத்தகைய பிரச்சினைகள் சாதாரணமாக எந்த மொழியைப் பொறுத்தும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஒத்தவை எனலாம்.

இச் சிறு பிரச்சினைகளுக்காக அடிப்படையான பல மாற்றங்களை எழுத்து முறையிலே ஏற்படுவதை விட, தமிழ் எழுத்துக்களைக் கைவிட்டு உரோம எழுத்து முறையைப் பயன்படுத்துவது எத்தனையோ வகைகளில் நன்மையானதாய் இருக்கும் உலகத்தில் முன்னேற்றமடைந்துள்ள பல மொழிகள் ஆங்கிலம் உட்பட, உரோம எழுத்தைப் பயன்படுத்துவதால், நாமும் அதே எழுத்தைப் பயன்படுத்தும் போது எமது பிள்ளைகளுக்கு ஒரு சில எழுத்துக்களை மட்டும் கற்கவேண்டிய அவசியம் ஏற்படும். (உரோம எழுத்துக்கள் எல்லாம் தேவைப்படா) அத்துடன் ஆங்கிலம் போன்ற சர்வதேச மொழிகளைக் கற்பதற்கும் உபயோகிப்பதற்கும் எழுத்து முறை பிரச்சனையாக அமையாது ஆனுல், உரோம எழுத்துக்களுக்கு மாறுவது அவ்வளவு இலகுவான செயலாகாது. ஆகவே தொடர்ந்தும் தற்போது நாம் பயன்படுத்தும் எழுத்துக்களை உபயோகிப்பதே சிறந்ததாகும்.

பிற மொழிகளுக்குரிய சில ஒலிகள் தமிழில் இல்லை என்பதற்காக அந்த ஒலிகளைக் குறிப்பதற்காக புதிய எழுத்துக்களைத் தமிழில் உருவாக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமானதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு மொழிக்கும் இயல்பாகவே சில ஒலிகள் உள்ளன. சில இல்லை, பிறமொழிகளில் உள்ள ஒலிகள் எல்லாம் எமக்குத்தேவை என்று கூற முடியாது. எங்களுக்கு முக்கியமானதாகத் தோன்றுகின்ற ஒலிகள் வேறு சில மொழிகளுக்கு இல்லாதிருந்தும் அவை முன்னேறியுள்ளன. உதாரணமாக, ஜப்பானிய மொழி இன்று மிக முன்னேற்றமான விஞ்ஞானத் தேவைகளுக்குரிய மொழியாக மாறியுள்ளது. ஆனுலும் எங்களுக்கு அத்தியாவசியமானதாகத் தோன்றும் 'ல' என்ற ஒலியைக் குறிக்கும் எழுத்து ஜப்பானிய மொழியில் இல்லை. அது அவர்களுடைய மொழிக்குரிய பண்பு. எமது மொழியில் ba, ga, fa என்பன இல்லை (பிறமொழிச் செல்வாக்கினுல் அந்த ஒலிகளைச் சேர்த்து வருகின்றேம்.) விஞ்ஞானத் தேவைகளுக்காக அவற்றைக் குறிக்கும் முறைகளை அனுசரிக்கலாம். ஆனுல் அதற்காக எல்லோரும் பயன்படுத்தும்போது எழுத்து முறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று கூறுவது சரியன்று.

இவ்வாறு பார்க்குமிடத்து நமக்கு தேவைப்படுவது எழுத்துச் சீர்திருத்தம் (Refrom) அல்ல, எழுத்து முறையில் முடியுமான இடங்களில் சில இலகுபடுத்தும் மாற்றங்களை (Simplification) ஏற்படுத்தலாகும். எமது உடை, உணவு ஆகியவற்றைப் போன்று எழுத்தும் எமது பண்பாட்டின் ஒரு சின்னமாகி விட்டது விஞ்ஞானரீதியாக உணவு வகைகளைத் தேவைக்கேற்ப உண்ணுவது விரும்பத்தக்கதாக இருந்தாலும் பாரம்பரிய உணவு முறையை மாற்றி விட முடியாது அதை ஒத்ததே எழுத்தும்

நன்றி: கலாவதி - 1979

## நகர் நடுவே நற்றவம்!

வன்செயலால் நீசிழிவாற் காலிழந்து முடமாகி
வருந்தி வாழ்வே

துன்பமிகு சுமையாகத் துவண்டுவிழு கின்ருேரைத்
தூக்கித்தாங்கி

அன்புமொழி பேசியவர் நடமாடக் கால்கொடுக்கும்
அரிய சேவைக்

கென்றுநிலை யம்வைத்தீர் நும்மிநதாள் உச்சிமிசை
என்றும் வைப்போம்

✶

"காலிழந்தோம் என்செய்வோம் எஞ்சியுள
வாழ்நாள்நும்
கக்கத் தூன்று
கோலிருக்கும் பிறர்தயவை எதிர்பார்த்தெம்
உடலுள்ளம்
குறுகிப் போகும்

நாலுபத்துப் பேர்நடுவே நடமாட முடியாத
நாணந் தோன்றும்

வேலையெதுஞ் செய்கின்ற வாய்ப்பிழந்தோம்"
எனத்தவித்தோர்
விடிவு கண்டார்

✶

சிற்றெறும்பாய்ப் பொன் பொருளெல் லாம்நாலு
திசையும் போய்த்
தேடித் தேடிப்

பெற்றுறையுள் உணவாதி வசதியெலாம்
செய்தன்பாய்ப்
பேணு கின்றீர்

முற்றுமுமை முடமானேர் துயர்துடைக்கும் முயற்சிக்கே
அர்ப்ப ணித்தீர்

நற்றவந்தான் செய்கின்றீர் நகருக்குள் இருந்தபடி
ஞாலம் உய்ய

✶

நண்பர்களின் கழகத்துக் கிளையாக யாழ்நகரின்
நடுவே வந்தீர்

துன்புறுவோர் இல்லாத சமுதாயம் காண்பதற்குத்
துணிந்தீர் வாழி

அன்புநெறி இதுவென்றிவ் வுலகறிய ஓர்முரசும்
அறைந்தீர் வாழி

என்புமிவர் பிறர்க்குரியர் எனுஞ் சொல்லுக்
கிலக்கணம் நீர்
என்றும் வாழி.

(யாழ்ப்பாணத்து 'ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்' நேற்றுத் தன் ஈராண்டு நிறைவைக் கொண்டாடியது.)

**சோ. பத்மநாதன்**

# இந்துபோர்ட் இராசரத்தினம்

## காலமும் வாழ்வும்

க.சி.குலரத்தினம்

**27**

### பருத்தி புடைவையாய்க் காய்த்தது

பருத்தி நட்டுப்பஞ்சு பறித்துக் கொட்டை நீக்கிப் பஞ்சை நூலாக்கி, நூலால் நெசவு செய்து புடைவையாக்குதல் நாகரிகமாயினும் அது நாட்படும் சிரமமிக்க தொழிலாகும். ஆனால் பருத்தி புடைவையாய்க் காய்ப்பதானால் பறித்து உடுத்துக் கொள்ளலாம். இவ்வாறே பாடசாலை அமைப்பதானால், நிலம் வாங்கக் கட்டடம் கட்டித் தளபாடங்கள் வாங்கிப் பாடசாலை ஆரம்பித்தல் சிரமமான வேலை. ஆனால் ஒரு முகாமையாளருக்கு இன்னொரு முகாமையாளர் தாம் நடத்திய தரமான பாடசாலைகள் மனப்பூர்வமாகக் கையளிப்பாராயின், இதனைப் பருத்தி புடைவையாய்க் காய்த்தது என்று கூறாமல் வேறெங்ஙனம் கூறலாம்.

இவ்வாறாகத் தனியார் பாடசாலை நடத்திய முகாமையாளர் சிலர் காலந்தோறும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்குத் தங்கள் பாடசாலைகளைக் கையளித்தமை நனி நாகரிகமான செயலாகும். இராசரத்தினம் அவர்களும் நன்றியறிவித்து அவற்றை ஏற்று நல்ல வழியில் நடத்தி வருவாராயினார். இவ்வாறு இராசரத்தினம் அவர்கள் பெறற்கரிய பரிசாகப் பெறுவதற்குப் பாடசாலைகள் கொடுத்தவர்களுள் கைதடி ஊரைச் சேர்ந்த குமாரசுவாமிக் குருக்கள் என்பாரும் ஒருவராவர். இவர் ஆறு பாடசாலைகளைக் கையளித்த ஒருவராவர்.

இன்னும் கொக்குவில் வாசியான குமாரசுவாமிப்பிள்ளை; புலவர் எனவும் வழங்கியவர். அவர் தருமபுரவாதீனத்தில் பயிற்சி பெற்ற ஓதுவா மூர்த்தியுமாவர். அவர் பரம்பரை பரம்பரையாகச் சைவம் வளர்த்த, சால்பறிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அம்பலம், தம்பு, குமாரசுவாமிப்பிள்ளை எல்லோரும் புராணபடனம் கைவந்தவர்கள். குமாரசுவாமிப் பிள்ளை பரமேஸ்வராக் கல்லூரியிலும் இராமநாதன் கல்லூரியிலும் ஆசிரியராயிருந்தவர். தம் அயலில் ஒரு சைவப் பாடசாலையை முருகக் கடவுளின் திருநாமத்தை முன்னிட்டு ஞான பண்டித வித்தியாசாலை எனப் பெயரிட்டவர். பெயர் பெரிதாயிருந்த போதிலும் அயலவர் அதனை ''குமாருவின் பள்ளி'' எனவே வழங்கி வந்தனர்.

குமாரசுவாமிப்பிள்ளை தமது பாடசாலையையும், 4000 ரூபாவையும் சைவவித்தியாவிருத்திச் சங்கத்திற்குக் கொடுத்தார். அயலவரான செனேற்றர் நீதிராசா அவர்களும் சகோதரரும் இருபதினாயிரத்துக்கும் அதிகமாக உபகரிப்ப ஊரவரும் அள்ளிக்கொடுப்ப ஞானபண்டித வித்தியாசாலை தரமுயர்ந்து வளர்ந்தது.

முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் என்னும் இடத்தில் சின்னத்தம்பி வித்தியாசாலை என வழங்கும் பாடசாலையை முற்று முழுதாக அமைத்துக் கொடுத்தவர் மகப்பேற்று வைத்திய நிபுணர் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களாவர். இவருடைய சைவப்பற்று ஆழமானதாகும்.

இருபாலை சேனாதிராய முதலியார் வாழ்ந்த இடம் செந்தமிழன்பும், சிவநேயமும் பொங்கித் ததும்பும் இடம். இங்கே சைவவித்தியாவிருத்திச் சங்கத்து ஆசிரியருள் ஒருவராய கந்தையா என்பார் கந்தவேள் வித்தியாலயத்திற்கான நிலமும், கட்டடமும் வழங்கியவராவர்.

வடமராட்சிப் பிரிவில் வதிரி தேவரையாளி என்னும் இடத்தில் ஒரு காலத்தில் பின்தங்கியவருள் சூரன் முதலானோர் படிப்பாற்றல் மிக்கவர்களாய்க் குருசீடர் முறையில் பெரும் புலமையும் பெற்றுச் செந்தமிழும், சைவசமயமும் வளர்க்க முற்பட்டுத் தாமே தம்மவருக்கான தரமான பாடசாலையை உருவாக்கிச் சைவ வித்தியாசங்கத்திற்குக் கொடுத்தவர்கள்.

புத்தளமும் அதனைச் சேர்ந்த பகுதிகளும் ஒரு காலத்தில் சைவத்தமிழ்ப் பிரதேசமாகவே இருந்தது. நாளடைவில் அங்கே வேறு மொழியும், வேறு சமயமும் படர்ந்த போதிலும் பாரம் பரியமறிந்தவர்கள் பலர் அங்கே இருக்கிறார்கள். அவர்களின் பாரிய உபகரிப்பாலும் வெங்கடாசலம் என்னும் வைத்திய கலாநிதி அவர்களின் உழைப்பினாலும் அங்கே கமலாம்பிகை வித்தியாலயம் எளிதிற் கிட்டியது.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் எங்கே கடமையாற்றினாலும் சைவத்தமிழ் என்பதே அவருடைய மூச்சாக உயிர்த்தது. அவர் சிலாபப் பகுதியில் வேலை பார்த்த போது அங்கே தங்கிய தம் திணைக்களத்தவரை ஊக்கப்படுத்திச் சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை ஒன்றைக் கட்டிக் கையளித்தார்.

ஈவினை, புன்னாலைக்கட்டுவன், போயிட்டி முதலிய ஊர்களின் நடுவே மக்கள் கொண்ட அபிலாசை காரணமாக அவர்தம் உபகரிப்பால் உருவான தமிழ்ப் பாடசாலை ஒன்று சங்கத்திற்கு எளிதில் கிட்டியது.

இவ்வாறே அல்வாய் தெற்குப் பகுதியிலும் ஊரவர் கொண்ட ஊக்கமும் உபகரிப்கரிப்பும் உழைப்பும் காரணமாக ஒரு சைவத்தமிழ்ப் பாடசாலை கிடைத்தது.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் கொண்ட பேரபிமானங் காரணமாகவும் செய்தபேருழைப்புக் காரணமாகவும் சிலாபப்பகுதியில் மருதங்குளம் என்னும் பகுதியில் உருவான சைவப்பிரகாச வித்தியாசாலை வைத்தியத் துறை சார்ந்த சைவப் பெரியார்களின் உபகரிப்பாகும்.

### காலந்தோறும் உண்டான அழிவுகள்

சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஆரம்பகாலம் முதலாகவே தங்கள் முகாமையில் நிலவிய பாடசாலைகளில் ஏற்றத்தாழ்வில்லாமல் எல்லோருக்கும் சமவுரிமை கொடுத்தல் வேண்டும் என்னும் பூட்கை பூண்டிருந்தனர். சங்கத்தின் முதலாண்டுப் பூர்த்தி விழாவிலேயே அரியாலையூர்ப் பெரியாரும் மேலதிக நீதவானுமாய ஆ. கதிரவேலு அவர்கள் தங்கள் கொள்கையை ஒரு பிரேரணையாக்கிப் பிரேரித்தபோது, கனம் சேர். இராமநாதன் அவர்கள் அதனைப் பின் மொழிந்து நிறைவேறச் செய்தார்.

இப் பிரேரணையையே அரியாலையூர் கௌரவ ஆ. கனகரத்தினம் அவர்கள் சட்டசபையிலே நிறைவேற்றிக் காரிய நிர்வாக சபையொன்றில் சேர். இராமநாதன் அவர்களையும், வைத்திலிங்கம் துரைசாமி அவர்களையும் இருக்குமாறு செய்தார். அக்காலத்தில் மயிலிட்டியில் புறமதப் பாடசாலையொன்றில் சமவுரிமை சமாசனம் மறுத்தவர்கள் கடுமையாகக் காரிய நிர்வாக சபையினரால் எச்சரிக்கப்பட்டதும் உண்டு.

இவ்வாறாகச் சைவவித்தியாவிருத்திச் சங்கப்பாடசாலைகளில் சமவுரிமை கொடுக்கப் பெற்றபோது கொதித்தெழுந்த சிலர் பாடசாலைகளில் தீக்கொளுத்தி அழித்தமையும் உண்டு. வெற்றியைக் கண்டு பூரிப்பும் தோல்வியைக் கண்டு மனமுடைதலுமறியாத இராசரத்தினம் அவர்கள் எரிந்த பாடசாலைகளை உடனடியாகக் கட்டியெழுப்பியமை அவர் செயல் வீரன் என்பதைக் காட்டிநின்றன.

### சைவாசிரியர் பயிற்சி

முன்னர் 1928ஆம் ஆண்டில் ஆரம்பித்த சைவாசிரிய கலாசாலையில், அரசாங்கம் ஆசிரியர் தொகையைக் காலந்தோறும் கட்டுப்படுத்தியும் குறைத்தும் வந்தது. ஆனால் 1949ஆம் ஆண்டில் அங்கே ஆண்டுகள் ஐம்பதின்மரும் பெண்கள் ஐம்பதின்மரும் பயிற்சி பெறுமாறு அனுமதி கொடுத்திருந்தமை சைவசமயத்தவர்களுக்கெல்லாம் வரப்பிரசாதமாயமைவதாயிற்று. எனினும் பெரியவர்களாகிய சுவாமிநாதன் அவர்கள், கைலாசபதி அவர்கள், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்றமை கலாசாலைக்கேயன்றிச் சைவாசிரிய உலகுக்கே பெரிய பாதிப்பாகவிருந்தது.

### வருடாந்தக் கூட்டம் ஒன்று

இலங்கை அரசாங்கம் நாட்டின் பாடசாலைகளைச் சுவீகரித்துக் கொள்வதற்கு முன்னர் 14-11-1959ஆம் நாள் சனிக்கிழமை முத்துத்தம்பி வித்தியாலயத்தில் சங்கம் நடத்திய வருடாந்தக் கூட்டம் சங்கத்தின் பெருங் கூட்டங்களில் கடைசியானதாயிருத்தல் வேண்டும். அதற்குப் பின் நடைபெற்ற கூட்டங்களின் தகவல்கள் கிடைப்பதாக இல்லை. அதனால் கூட்டங்கள் நடைபெறவில்லை என்பது துணிபல்ல.

சங்கத்தில் 1,100 ஆசிரியர்கள் 35000 பிள்ளைகளின் அறிவுக் கண்ணைத் திறந்துவந்தார்கள். அண்மையில் உதவி நன்கொடை பெற்ற புதிய பாடசாலைகளின் வரலாறும் படிக்கப் பெற்றது. எல்லாமாக 187 நிறுவனங்களைச் சங்கம் பரிபாலித்து வந்தது.

அண்மையில் சங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கான மேலதிக பணமீட்டும் வழியில் அதிர்ஷ்டலாபச்சீட்டு விற்பனையாயின. அன்று 1649,83 சீட்டுகளில் பத்துவீதக் கழிவு போக எஞ்சியவற்றால் கிடைத்த தொகைக்கு வரிப்பணமும் போக, பரிசுத் தொகையும் போக இறுதியில் 44,211 ரூபா கிடைத்தது. இன்னும் கலைக்காட்சி மூலம் கிடைத்த தொகை 5070 ஆகும். எல்லாமாக இறுதியில் 50,000 ரூபா வரையில் கிடைத்தமை சங்கத்திற்குப் பேருதவியாயிருந்தது. கலைக்காட்சியைக் கருத்தூன்றிச் சுற்றிப்பார்த்த கல்விமந்திரியார் பண்டா அவர்கள் சங்கத்தாரின் கலையார்வத்தையும், பாடசாலைகளின் கலைத்திறமையையும் வெகுவாகப் பாராட்டினார்.

சைவச்சிறுமியர் நல்வாழ்வு கருதி நடத்தப் பெற்ற கலைக்காட்சியில் நல்லோர் அனைவரதும் நல்லாதரவு நிரம்ப வேண்டும் என்று, தம்மை அழைத்தமைக்குத் தாம்நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

### மந்திரியாரின் தடையுத்தரவு

அன்று 1958-ஆம் ஆண்டின் ஆரம்பகாலத்தில் கனம் கல்வி மந்திரியாராயிருந்தவர் பிறப்பித்த தடையுத்தரவொன்று சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகளின் முகாமையாளரை வெகுவாக மனம் வருந்தச் செய்தது. அஃது அதுகாறும் சைவாசிரிய கலாசாலையில் பயிற்றப் பெற்ற ஆசிரியர்களுக்குச் சங்கம்வேலைகொடுத்த பின்னரே, பிறபயிற்சிக் கல்லூரிகளில் பயின்று வந்தவரைச் சேவைக்கு எடுக்கலாம் என்பதாகும்.

இத்தடையுத்தரவு இராசரத்தினம் அவர்கள் கருத்தில் நேர்மையற்றதாகப் பட்டது கனம் மந்திரியார் அவர்கள் முன்னர் இலங்கை முழுவதிலும் உள்ள சைவப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களைப் பயிற்றுமாறு அனுமதி கொடுத்ததையும், தாங்கள் தங்கள் பழைய மாணாக்கர்கள் பலர் பிற கல்லூரிகளில் பயிற்சி பெற்று வந்தபோதெல்லாம் தங்கள் முகாமையில் இடம் கொடுத்தமையையும் சுட்டிக் காட்டினார். இன்னும் கனம் மந்திரியாரவர்கள் முன்னர் வேறிடங்களில் பயின்று வந்தவர்கள் பலருக்கு எங்களிடம் வேலை செய்ய அனுமதியும் வழங்கியுள்ளார் என்று இவர் சுட்டிக் காட்டி தடையுத்தரவை நீக்குமாறு விண்ணப்பித்தார்.

(தொடரும்)

## உணவுப் பயிர்

உயிரினத்தின் முதல் தேவை உணவு. முதலில் வேட்டையாடியதும் பின் நாடோடியாக அலைந்ததும் ஈற்றில் கலப்பை தூக்கியதும் உணவுக்காகவே. கலப்பைக்குப் பின்னாலேயே உலகம். அதனால் உழவுத்தொழிலே சிறந்தது ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம். அதனால் உழந்தும் உழவே தலை'' காடு கெடுத்து நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கிய தமிழருக்கா உணவுப் பயிர் உண்டாக்க வேண்டும் என்று நாம் கூற வேண்டும். அது சொல்ல நாம் யார்? சொல்லுதல் என்பதற்குப் பார்க்க நினைவுபடுத்துகிறோம் என்போம். ஒரு சதுர அங்குல நிலமும் சும்மா கிடத்தலாகாது. மண் என்றும் மலடாக இருப்பதில்லை. தேடுவாரற்ற நிலமும் தேவையான மூலிகைகளைத் தருகிறது. தரிசு நிலமெல்லாம் பயிர்பூத்த நிலமாதல் வேண்டும்.

விலைப்பயிர், அழகுப்பயிர் உள்ள இடமெல்லாம் உணவுப் பயிர் விளைவதாக. உணவுப் பயிர் விளையும்போது மாற்றுப்பயிர் இடம்பெறுவதாக. வேலியோரங்களிற் செடிப் பயிர்கள், கொடிப்பயிர்கள் இடம்பெறுவனவாகுக. நெல் அறுவடையைத் தொடர்ந்து உழுந்து, பயறு அறுவடை இடம்பெறுவனவாகுக. தோட்டங்களில் வாழை வளம் பெருகுவதாக. அடுத்து மரவள்ளி போன்ற பஞ்சந்தாங்கிப்பயிரும் இடம்பெறுவதாக.

''மில்க்வைற் செய்தி''

## பக்தியின் மதிப்பு

கும்பகோணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் நடைபெறும். லட்சக்கணக்கான மக்கள் ஒரே நாளில் மகாமகக் குளத்தில் இறங்கி நீராடுவதால் குளத்தின் நீர் கலங்கி சேறாக மாறிவிடும். ஆனால் மக்களின் ஆழ்ந்த பக்தியின் முன் இந்தக் கலங்கலும் சேறும் தெரிவதில்லை. தங்கள் மனத்திலுள்ள கலங்கலான மாசை அகற்றிகொள்ள வரும் அன்பர்களுக்கு, அந்தக்குளத்து நீர் மிக மிகப் புனிதம் வாய்ந்ததுதான்.

ஒரு தடவை மகாமகம் நடந்தபோது சில ஆங்கில இளைஞர்களும், யுவதிகளும் கூட்ட நெரிசல் குறைந்த நேரத்தில் ஆர்வத்துடன் இந்தக் குளத்தில் நீராடினார்கள்.

''கலங்கலான இந்தத் தண்ணீரில் நீராட உங்களுக்கு வெறுப்பாக இல்லையா?'' என்று ஒரு அன்பர் அவர்களிடம் வினவினார்.

''வெறுப்பாவது? ஆயிரக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து வந்து பலவிதச் சிரமங்களையும் பொறுத்துக் கொண்டு, இங்கே குளித்து விட்டு எத்தனை ஆனந்தமாகப் போகிறார்கள்! வேடிக்கை பார்க்க வந்த எங்களையும் அவர்கள் பக்தியும் ஆழ்ந்த நம்பிக்கையும் குளத்தில் இறங்கி முழுகச் செய்து விட்டன. எத்தனையோ நூற்றாண்டுகளாக நடைபெற்று வரும் இந்த விழாவின் புனிதத்தைப் பற்றிக் கேட்டறிந்தேன், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் நடக்கும் இவ்விழாவில் லட்சக் கணக்கான மக்கள் பக்தியுடன் ஈடுபடுகிறார்களே, அந்தப் பக்திக்குத் தலை வணங்க வேண்டும். கலங்கலான மனசை உடையவனுக்கே இந்த நீர் கலங்கலாகத் தோன்றும். எங்களுக்கு அப்படித் தோன்றவில்லை. பக்தியுணர்வுதான் மனிதனை மனிதனாக வாழச் செய்கிறது'' என்று பதிலளித்தான் அந்த ஆங்கிலேய இளைஞரில்ஒருவன். பக்திக்கு மதிப்புஅளித்த அவர்களின் பண்பே பண்பு!

ஆதாரம் — கலைமகள்

**அத்தியாயம் பதினேழு**

**சமூக நவீனம்**




கே.எஸ்.ஆனந்தன்

வரண்ட பிரதேசம் மனித முயற்சியால் செழித்து, கொழிக்கும் பூமியாக விளங்குகின்றது. இயற்கையின் உற்பாதங்களுக்கு ஈடு கொடுத்து விளங்கும் சில முத்திரைகள் ஆங்காங்கே தென்பட்டனவாயினும் அதிக சேதாரம் ஏற்படவில்லை. பள்ள நிலங்களில் வெள்ளம் இன்னும் முற்றாக வற்றிவிடவில்லை. வடக்கில் வாழும் மக்கள் இயற்கையுடன் போராடியே தங்கள் தேவைகளைப் பெற்று வாழ்கின்றனர் என்பதை காரில் வரும் பொழுதே உணர்வு பூர்வமாக அறிந்து கொண்டார் சமரசிங்கா.

சமரசிங்காவின்வரவு ரகுவரனிலும் பார்க்க சின்னையாவுக்கே அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது இருவரும்ஒருவர்ஒருவரைப்பார்த்துகண்சாடைகாட்டிச் சிரித்துக்கொண்டனர்.

'அங்கிள் எனக்கு ஒரு வார்த்தை அறிவித்திருந்தால் நானே ஸ்ரேசனுக்கு வண்டி கொண்டு வந்திருப்பேன்' என்றான் ரகு.

'வாயிருந்தால் வங்காளம் போகலாம் என்று உன் தகப்பனார் அடிக்கடி கூறுவார். அதைவிட எதிர்பாராத வேளையில் வந்திறங்கினால் பல சுவையான சம்பவங்களையும் அறிய முடியும். இல்லையா சின்னையா?' என்று சின்னையாவை துணைக்கு அழைத்தார் சமரசிங்கா.

எதிர்பாராத விதமாக நீங்கள் வந்தாலும் நான் தினம் தினம்உங்களை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தேன்' என்றார் சின்னையா.

'அது சரி ரகு இந்தப் பெண்ணு யாரு? உன்னுடைய ஆபிஸில் வேலை செய்கிறார்களா?'

'அங்கிள் நீங்கள் வந்த மகிழ்ச்சியில்எல்லாமே மறந்து போச்சு. இவங்களை அறிமுகம் செய்து வைக்க வேமறந்திட்டேன். இவங்க மிஸ்......'என்று ஆரம்பிக்கும் போதே கையை காட்டி பேச வேண்டாம் என்று தடுத்தார் சமரசிங்கா.

'இங்கே வாம்மா இப்படி வந்து உட்கார். இவன்உங்களை அறிமுகம்செய்துவைக்கா விட்டால் என்ன? எனக்கு யாரும் யாரையும் அறிமுகப் படுத்தவும் வேண்டாம். நீங்கள் தான் மிஸ் சிந்துவா? என்றார்.

'ஆமாங்க' என்று சிரித்து கை கூப்பினாள் சிந்து.

'நல்லூரைச் சேர்ந்த நீங்கள் முருகன் அருளால் நல்லாயிருக்கணும் உங்களை பார்த்தா அருண்மொழியின் சாயல் இருக்கு. ஆனாலும் முடி கொஞ்சம் கட்டை. நான் சொல்லுவது சரிதானே?'

உண்மைதான் சார். ரகு சார் என்னைப்பற்றி ஏதாவது எழுதியிருப்பார் என நினைக்கின்றேன்'

'இவனா? பெண்களை பற்றியே ஒரு வார்த்தை கதைக்கப் பயப்படுவான். நான் வந்து இவ்வளவு நேரமாச்சு உங்களைப்பற்றி ஏதாவது கூறினானா' நான் கேட்ட பின்பு சமாளிக்கிறான். அதனால் நானாகவே ஊகித்தேன்'

அங்கிள் நான் மிகுதியை சொல்லட்டுமா?' இவை யாவும் சின்னையாவிடம் இருந்து நீங்கள் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்' என்று ரகு சிரித்தான்.

'சரி மிகுதியை கேளேன் இந்தப் பெண்ணுக்கு 'ருன்ஸ்ரார்' போட்டிருக்கிறார்கள்' யாழ்ப்பாணத்துக்கு. இவர்கள் அதனை விரும்பவில்லை. இதுபற்றி உன் உதவி கேட்டு இங்கே வந்திருக்கிறார்கள். இதையும் சின்னையா தான் கூறினாரா? என்று கேட்டு விட்டு வெற்றிச் சிரிப்புச் சிரித்தார் சமரசிங்கா.

அவருடைய மதிநுட்பமான பேச்சைக் கேட்டுச் சிந்துவே அசந்து போனாள். ரகுவரன் பிரமை பிடித்தவன் போல என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் நின்றான்.

'என்னப்பா ரகு. நான் முகம் பார்த்தே ஒருவருடைய குணாதிசயங்களை கூறக் கூடியவன். ஒப்புக் கொள்கிறாயா?'

'அங்கிள் இதில் ஒரு மர்மம் இருக்கிறது'

'என்ன மர்மம்?'

'நீங்கள் ஏற்கனவே சின்னையா மூலம் அறிந்த செய்தியை வைத்துக்கொண்டு வழியில் பாடசாலையில் சிந்துவைப் பார்க்கச் சென்றிருக்கின்றீர்கள். அங்கே பிரின்ஸ்பலிடம் தகவல்களை தெரிந்துகொண்டு வந்து சோதிடம் கூறுகிறீர்கள். அப்படித்தானே?''

கண்டுபிடிச்சுட்டானேஎன்று சிரித்தவர் ஏனம்மா உங்களுக்கு ஊரோடு மாற்றம் வேண்டாமா? என்ன கஷ்டம்? சொல்லம்மா. 'எடியூகேசன் மினிஸ்டரை'க் கொண்டே உங்கள் ஆர்டரை கான்சல்' பண்ணுவிக்கிறேன்' என்றார்.

'அங்கிள் நேரமாகுது நான் ஆபீஸ் போயிட்டு வருகின்றேன். சிந்து உங்களுக்கு துணையா இருப்பாள் விரைவில் வந்துவிடுவேன்'! என்று கூறிப் புறப்பட்டான்.

சிந்துவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எதற்காகவோ வந்து எங்கோ மாட்டிக் கொண்டு விட்டதாக நினைத்தாள். ஆபீஸிற்கு புறப்பட்டுக்கொண்டிருந்த ரகுவரனைப் பரிதாபமாக பார்த்தாள்.

''டோன்ற்வொறி சிந்து'' கோல் வந்ததும் அங்கிளிடம் சொல்லுங்கள் மினிஸ்டர் அங்கிளின்ரை உறவினர் நியாயப்படி எதையும் செய்யத் தயங்கமாட்டார். அங்கிளிடம் விடயத்தைக் கூறுங்கள் என்று கூறிவிட்டுச் சென்றான்.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தினையே எதிர்பார்த்திருந்தார் சமரசிங்கா. எப்படியும் அவள் மனநிலையை தெரிந்து கொள்ள வேண்டும் என விரும்பினார். அவளைப் பார்த்த போதே அவருக்கு மனப் பூர்வமாகப் பிடித்துக் கொண்டது.

''என்னம்மா யோசிக்கின்றாய்? உங்களுடைய மாற்றம் பற்றி யோசிக்க வேண்டாம். அது முடிந்த விடயம் என்றே வைத்துக்கொள், இப்ப நம்ம விடயத்துக்கு வருவோம் நம்ம பெண்ணுக்கு திருமணம் செய்தாயிற்று''

''ரகு எல்லாம் கூறினார்''

''கூறியிருக்கிறானா? நல்லது இவனுக்கு ஒரு பெண் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் போவதற்காகத்தான் நான் இங்கே வந்தேன். இந்த விடயம் ரகுவுக்கோ தெரியாது. எல்லாப் பொறுப்பையும் என் தலையில் சுமத்தி விட்டுப் பேசாமலிருக்கான் ரகு. சிறி தம்பி மாதிரி... ஒரு பெண்ணைப் பார்த்து இவளைக் கட்டிக்கப் போறன் என்று சொல்லக்கூட இவனுக்கு தெரியவில்லையே'' என்று கூறி அவள் முகத்தையே கூர்ந்து கவனித்தார்.

அவள் தலை குனிந்து கொண்டாள். நிமிடத்துக்கு நிமிடம் சோதனைமேல் சோதனையாக நடந்து கொண்டிருந்தது.

''என்னம்மா பேசாமல் இருக்கிறாய்''?

''தாரமும் குருவும் தலை விதிப்படி என்பார்கள். அப்படித்தானே நடக்கும்''. அவள் குரல் மாறுபட்டொலித்ததையும் அவர் உணர்ந்து கொண்டார்.

''இதற்கிடையில் சில கதைகளும் நான் அறிந்தேன். அருண்மொழியின் விடயமும் உங்களுக்கு தெரிந்திருக்கலாம். எங்கள் இனத்துப் பெண்ணை கட்டி வைக்கலாம். அதனை நான் விரும்பவில்லை. அவனுக்கு அப்பா–அம்மா இல்லை என்ற குறை தவிர வேறு எதுவும் இல்லை. ஆனால் அவன் அனாதை இல்லை. என் சொத்தில் அரைவாசி அவனுக்கே எழுதிவிட்டன். அவன் என் பிள்ளை தான்'' என்று கூறியபோது அவர் விழிகள் கலங்கிவிட்டன.

இதற்கிடையில் தொலைபேசி மணி ஒலித்தது. ஓடிச் சென்று எடுத்தவள் விடயம் அறிந்து அவரை அழைத்தாள்.

''மினிஸ்டரா?''

''ம்''

''சரியம்மா நான் கதைக்கிறேன்''என்று தொலைபேசியை வாங்கி 'ஹலோ' என்றவர் சிங்களத்திலேயே பேசினார். ஐந்து நிமிடம்வரையில் கதைத்தவர் சிந்துவைப் பார்த்து சிரித்தவாறே, அவர் கேட்கிற தகவல்களை கொடுத்திடம்மா'' என்று தொலை வாங்கியை அவளிடம் கொடுத்தார்.

சிந்துவின் விடயம் முடிந்ததும் மீண்டும் தொலை வாங்கியைப் பெற்றுக் கொண்டு சிங்களத்திலேயே பேசினார். ரகுவின் பெயரும் அடிபட்டது. அவளுடைய பெயரும் இடைக்கிடையே அடிபட்டது. மௌனமாக பார்த்துக்கொண்டிருந்தாள். தொலைவாங்கியை வைத்துவிட்டு 'உங்களுக்கு சிங்களம் பேசவருமா?'' என்றார்.

''இல்லை சில சொற்கள் விளங்கும்'' என்றாள்.

''நல்லது உங்கள் பிரச்சனை பற்றி இனி யோசிக்க வேண்டியதில்லை. நீங்களே மினிஸ்டரோட கதைத்தாயிற்று''

''நன்றி சார்''என்றாள்.

''இந்தப் பெண்ணு யார் என்று கேட்டார் நம்ம ரகுவைக் கட்டிக்கப்போற பெண்'' என்று கூறிவிட்டன். அதற்காக என்னை மன்னிச்சிடம்மா. நல்ல விடயத்துக்கு பொய் கூறுவதில் தப்பில்லையல்லவா?'' என்றார்.

''அங்கிள் நீங்கள் பொய் சொல்லவில்லை. என்னால் உங்களிடம் சொல்ல முடியாமல் இருந்ததை நீங்கள் அவரிடம் கூறிவிட்டீர்கள். நீங்கள் விரும்பினால் அந்தப் பாக்கியம் எனக்கு கிடைக்கலாம்''என்று அவர் கால்களில் விழுந்து வணங்கினாள்.

எதிர்பாராது நடந்து விட்ட நிகழ்ச்சியால் தடுமாறி விட்டார் சமரசிங்கா. சின்னையா ஓடிவந்து அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டார்.

''எழுந்திரம்மா. உங்கள் விருப்பம் நிறைவேற ஆண்டவன் அருள் புரிவார். எனக்கு பூரண சம்மதம். உங்க மன நிலையை அறிந்து கொள்ளவே பலவாறு கதைத்தேன் நீங்கள் அசையவில்லை ஒரேஒரு பொய் சொன்னேன். உண்மையை சொல்லி விட்டீர்கள்''

அவள் விழிகளில் பனித்து நின்ற நீரைத் துடைத்து விட்டார் ,'உட்காரம்மா'' என்று அவளையும் தனக்கு அருகிலேயே உட்கார வைத்துக் கொண்டார்.

''உங்கள் விருப்பம் சரி உங்க வீட்டார்......''

'ரகு எங்கள் வீட்டிற்கே ஒருமுறை வந்து விருந்து சாப்பிடடுள்ளார். அவரைப் பற்றி சகல விடயமும் எங்கள் வீட்டாருக்கும் தெரியும் என் விருப்பத்திற்கு மாறாக வீட்டினர்...' தலைகுனிந்து கொண்டாள் சிந்து.

'எந்த விடயமும் ரகுவுக்கு தெரியவேண்டாம். வீக்எண்டுக்கு நாங்கள் யாழ்ப்பாணம் போவோம்' என்று கூறிவிட்டு வேறு விடயங்கள் பற்றி பேசலானார்கள்.

அன்று மாலை சிந்துவுடன் அருண்மொழி வீடுவரை சென்று வந்தார் சமரசிங்கா. அங்கே அருண்மொழியும் பெற்றோரும் அவருக்கு மனம் நிறைந்த உபசரணைகள் செய்தனர். ஆனாலும் சமரசிங்காவின் மனதில் ஓர் உறுத்தல். அதனை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. தன்னையே கேள்வி கேட்டுத் தானே பதில் சொல்லமுடியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருந்தார்.

இரவு படுக்கையில் புரண்டபடி பலமணி நேரம் நித்திரையின்றி விழித்துக்கிடந்தார். அவருடைய மனதில் பல்வேறு நினைவுச் சுருள்கள் ஒன்றன் பின் ஒன்றாக சுழன்று கொண்டிருந்தன' விடைகாண முடியாத கேள்விக்கு நிச்சயம் விடை கண்டேயாக வேண்டும் என்ற முடிவுடன் தூங்கிவிட்டார்.

காலை உணவிற்காக சாப்பாட்டுமேசையில் உட்கார்ந்த போது வழமையான மனநிலையில் அவர் இருக்கவில்லை. ஆழ்ந்த யோசனையுடன் காணப்பட்டார். அடிக்கடி ரகுவரனை நிமிர்ந்து பார்த்தார்.

'அங்கிள் என்ன ஒரே யோசனையிலாழ்ந்து போயிருக்கின்றீர்கள்?'

'ஒன்றுமில்லை ரகு. பாவப் படுகுழியில் விழ இருந்த என்னை உன்னையறியாமலே காப்பாற்றிவிட்டாய்'

'புரியும்படிதான் கூறுங்களேன்'

'புரியும்படி கூறுவதாயிருந்தால் கூறியிருப்பேனே. ஆண்டவன் மனித உருவில் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்விக்கிறான். நீ செய்த நல்ல காரியம் என்னை நரகத்துக்குள் போகாமல் காப்பாற்றியிருக்கு. அதனை எண்ணித்தான் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறேன்'

'எனக்கு எதுவுமே புரியவில்லை அங்கிள்'

'உன்னைப் போன்ற புத்திசாலிகளுக்கு இவை புரியாமலிருப்பதே மேல்.'

இதற்கு மேற்கொண்டு அவரிடம் எதுவும் அறிய முடியாது என்று நன்குணர்ந்து கொண்டதால் எதுவும் பேசமல் உணவருந்தியவன் கடமைக்கு புறப்பட்டான்.

ரகுவரன் சென்றபின்பு சின்னையாவிடம் மாசிலாமணி குடும்பத்தைப்பற்றி விசாரித்து அறிந்து கொண்டார். ஒரு இடத்தில் நிம்மதியாக இருக்க முடியாது அங்குமிங்கும் நடைபயின்றார் ஈற்றில் சின்னையாவிடம் கூறிவிட்டு உடைகளை மாற்றிக்கொண்டு வெளியே புறப்பட்டார்.

கடைசியில் சிறியைச் சந்தித்தார் அவனுடன் பத்துநிமிடம் வரை உரையாடியபின்பு மாசிலாமணி வீடு நோக்கிப் புறப்பட்டார். அவர் அங்கே சென்ற சமயம் சந்திர ஞானம் மாவைத் தவிர வேறுயாரும் வீட்டில் இல்லை. அவரைப் பார்த்ததும் வரவேற்று அழைத்துச் சென்றாள் சந்திர ஞானம்.

'எங்கே மிஸ்டர் மாசிலாமணியைக் காணோம்'

'வயலுக்குப்போயிருக்கிறார்'

'வேறுயாருமே வீட்டில் இல்லையா?'

'இல்லை'

'உங்கள் பெயர் சந்திர ஞானம்தானே?'

'ம்'

'உங்களோட சில விடயங்கள் கதைக்கணுகம். நேற்று உங்களை பார்த்தது முதலே எனக்குத் தூக்கமில்லை, உங்களுக்கு நன்மை செய்ய நினைத்து பெரும் பாவத்தைச் சுமக்கவிருந்தேன் ரகு என்னைக் காப்பாற்றி விட்டான். ஆனாலும் என்மனம் உண்மை தெரியும் வரை நிம்மதியடையாது. உங்களுக்கு பிடித்தமில்லாத சம்பந்தமில்லாத விடயமாயிருந்தால் என்னை மன்னித்துக் கொண்டு என்னிடம் உண்மை பேசணும். என்னை உங்கள் சொந்த அண்ணனாகவே நினைத்து நடந்து கொள்ளுங்கள்' என்று அவர் கூறிக்கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்த போதிருந்த மகிழ்ச்சி இப்போ சந்திரஞானத்திடம் விடைபெற்றிருந்தது. அவர் கூறிய விடயங்களை கேட்க சந்திரஞானம் திகிலடைந்தாள் எவற்றையெல்லாம் மறந்து வாழ்ந்தாளோ அவை எல்லாம் அவர் வாயிலிருந்து புற்றீசல் போலக் கிளம்பிக் கொண்டிருந்தன. செய்வதறியாது திகைத்து நின்றாள் சந்திர ஞானம்.

[14-ம் பக்கம் பார்க்க]

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## செந்தமிழ்ப் புலவன் உள்ளம்

ஞாழல் மரத்தின் வேரில்
நண்டது வளையைக் கட்டி
வாழ்ந்திடும் போது அங்கே
வந்தது அலைகள் மோதி

நண்டினின் சிறிய விடு
நசிந்துமே போகு மாறு
கடலினின் அலைகள் மோதி
கழிக்குமே முழக்க மிட்டு

சிறுமனை தன்னை வந்து
சிதைத்திடும் கடலைக் கண்டு
சினந்துமே வெறுக்கும் அந்த
செந்தமிழ்ப் புலவன் உள்ளம்

வாயது சிறிது கொண்ட
வகையது சுனையே ஆகும்
தேன்பெய்த நீலக் குப்பி
தெரிவது போலத் தோன்றும்

தேரைகள் போடும் சத்தம்
தெரிந்திடும் தட்டைப் பறைபோல்
பாலையின் கண்ணே உள்ள
பாதையில் இருக்கும் கள்ளி
மரத்தினில் இருந்த பல்லி
மகிழ்வுடன் எழுப்பும் ஓசை
உற்றதன் துணைய ழைக்கும்
ஒசையே மென்மை ஆகு

பல்லியின் ஓசை போல
பாலையின் வழியில் உள்ள
கானவர் தீட்டும் அம்பில்
கைநகம் எழுப்பும் ஓசை.

வ. யோகானந்தசிவம்

---

## இயற்கையும் புலமையும்

பிறப்போடு சேர்ந்தொன்றாய் பிறப்பதுவே புலமை
பின்னுமதைக் கல்வியதால்வளர்ப்பதுவேதிறமை
சிறப்பாகச் செய்யுளியல் கற்றுவிட்டு யாரும்
செந்தமிழ்ப்பா செய்தாலும் சிறந்துவிடு மாமோ
பறப்பதற்குப் பிறந்தவைதாம் பறப்பதுவே இயற்கை
பறக்கின்றான் மனிதனுந்தான் பயம்நிறைந்த
சேர்க்கை
பெறப்படுமோர் குழந்தையினைப் போலஒருபொம்மை
புவியிலுளார் பேரன்பைப் பெற்றுவிடு மாமோ

இயற்கையதோ டுளமொன்றி இயற்கையாக
எழுமுணர்ச்சி வெள்ளமதே கவிதையாகி
மயக்கமெது மின்றிப்பொருள் மலிந்ததாகி
மண்ணுலக முள்ளவரை மறையாதாகி
உயத்தகுந்த உயர்நெறியை எடுத்துக்காட்டி
ஊரிலுளார் உள்ளங்களிலும் ஒளியை ஏற்றி
நயத்துடனே இலக்கணமும் நாடுவார்க்கு
நல்லதொரு கற்பகம்நற் புலமையன்றோ

ஆற்றங்கரையினிலே அழகுமலர்ச் சோலையிலே
நாற்றம் தருமலர்கள் நண்ணுமலர் சோலையிலே
சீற்றம் மிகுதிரைகள் சேர்கடலின் சேரியிலே
தோற்றும் சுடரினிலே அதுதேயும் வேளையிலே
காற்றின் இனிமையிலே கடும்புயலின் கொடுமையிலே
போற்றும் வாழ்க்கையிலே பொருந்துணர்வின்
அலைகளிலே
தூற்றும் சினந்தனிலே துன்ப இன்ப வேளையிலே
ஊற்றம் எடுத்துவிடும் உண்மைப் புலமையதே

க. கந்தவளம்

---

## இரண்டு இராகங்கள்

அவள் ஒரு
இனிமையான ராகம்
வாசித்திடும்
புல்லாங்குழல்
நான் பாடும்
இராகமும்
அவள் வாசித்திடும்
இராகமும்
ஒன்றுடன் ஒன்று
சங்கமமாகின
சங்கமித்த எமது ராகத்தில்
அபஸ்வரமாக
அவள் விதியோ
அன்றி
என் விதியோ
சதி செய்ததே
வாக்கு என்ற
மூன்றெழுத்தினல்
இரண்டு உள்ளங்களும்
பிரிக்கப்பட்டதே
அவள் வாழ்வில்
வசந்தம் வீச
அதில் அவள்
இன்னிசை பாடி
மகிழ்ந்திருக்கவே
நானும் விலகினேன்
அவள் வாழ்விலிருந்து.
அவள் ஒருவனை
கரம் பற்றி
வாழ்ந்திருக்கும் வேளையில்
நானும் அவளின்
வசந்த வாழ்வை
எட்ட நின்று நோக்கினேன்
அந்தோ! நான் பார்த்தது
அவளின் வசந்த
வாழ்வையா?
இல்லவே இல்லை
அவள்
என்ன வென்று
சொல்ல முடியாத
சோக வாழ்வல்லவா
வாழுகின்ருள்

'சுபோ'

---

## இதனை அறியாயோ?

தாரம் என்னும்
தகுதி பெற
தாவி ஓடும்பெண்ணே!
பி.டி.உஷாவும்,
பென்ஜான்சனும்
ஓடியது ஒலிம்பிக்குக்காக.
உலகப் புகழுக்காக!
நீ ஒடுவதோவெறும்
தாரமாய்த் தகுதிபெற.
உன் ஓட்டத்தை
திசை திருப்பு!
நீ எதிர்நோக்கி
ஓட வேண்டியது
இன்னும் எத்தனையோ......
கல்யாணத்தை-உன்
எல்லையாக்காதே!
உழுத்துப்போன
சீதன, கோட்பாடுகளும்,
வரண்டு போன
சாதி-மத-சாதக
கோஷங்களும்,
எமக்கின்று
செல்லாத
சில்லறைகளாகிவிட்டன!
காலாவதியாகிப்போன
கல்யாணத்திற்காக
ஏங்காதே!
திருமணம்
ஆண்களுக்கு
அவசியம் இல்லை என்ருல்
எங்களுக்கு
மட்டும் ஏன்
அவசியம்?
அங்கலாய்க்காதே!
உன்
அகராதியில்
விட்டுப்போன
கல்யாண எழுத்துக்காக
ஏங்குவதை விட்டு
ஏங்கி ஓடுவதை விட்டு
எழுந்து நில்
தலை நரைப்பதும்
தரம் குறைவதும்
எங்களுக்கு
மட்டுமல்ல......!

25-06-89வாரமுரசொலியில் பிரசுரமான பந்தயப்புறுக்கள் கவிதைக்குப் பதில் கவிதை

ஊரெழு தர்ஷினி

---

## இதயம் எங்கே?

எத்தனை
'யுகம்'
ஆனாலும்
நம் காதல்
அழியாது...
என்
'இதயம்'
உங்களிடம்
தந்து விட்டேன்
அத்தான்—என்றவள்?
இதுதான்
இறுதிக் கடிதம்
என்று
முடிவாக சென்றுவிட்டாள்
பெண்ணே,உனக்கு,
இரக்கமேயில்லையா...?
ஓ...நான்தான்
மறந்து விட்டேன்
உன்னுடைய
'இதயம்'தான்
உன்னிடம் இல்லையே!

சி.கலாராஜ்

---

## விடைகோடு என்கிருயே!

தன்மை மிகுஉன்
குணம் கண்டு தயங்காது
நட்புற்றேன்
வன்மையான
வேற்றுமைகள்
வந்ததில்லைநம் நட்பில்
பார்வையிலே பலகதைகள்
பரிகாசமுன் புன்சிரிப்பும்
பாதையிலே பலபகிடி
பார்வையிலே
விமர்சனங்கள்
தேவையற்ற கலகலப்பு
தேயாத புரிந்துணர்வு
தேவையுள்ள
வார்த்தைகளில்
துருதுருக்கும் குறும்புகள்
கண்ணிணைக் கண்கள் கவ்வ
கதைகள் பல பேசி நின்றோம்
என்ன தைரியமாய்
என்னை விடைகொடு
என்ருய்?

-சி.பிரபா

---

## யார் இதற்குக் காரணம்?

சீதனக் கொடுமைதனை
சீர்தூக்கிப் பேசுகின்றீர்
சீதனக் கொடுமைக்குக்
காரணம் யாரென்பதனை
சற்றே நாம் ஆராய்வோம்
சீர்கெட்ட சீதனத்தை
சீர் தூக்கி நிற்கின்ற
சீர் உடைய நம்மவரே!
சீர் கெடப் பார்ப்பவரே!
சீதனம் கேட்பவரே
சினக்கும் மங்கையரே!
ஆடவரைச் சினக்கின்றீர்
அர்த்தமற்ற சினமிதுவே
மங்கையாய் இருந்தவளும்
மாங்கல்யம் பெற்று
விட்டால்
தாய்மைதனைத் தான்
பெற்று
தன் பிள்ளை வாழ்வது
தரணியில் சிறக்க வேண்டி
தாராளமாய் சீதனத்தை
தானுமவள் கேட்கின்ருள்
சீதனம் கேட்டு நின்ருல்
சீறிச் சினப்பவர்கள்
தாய்மை அடைந்தவுடன்
தன்பிள்ளை தனக்காக
சீர்வரிசை உடனே
சீதனம் கேட்கின்ருர்
எங்களுடை நாட்டினிலே
தங்களுடை மணவாழ்வு
பாங்குடனே விளங்குதற்கு
தாங்களாய்த் தரும்
பெண்கள்
தரணியிலே இருக்கையிலே
வரதட்சணை தனைப்பற்றி
பரபரப்பாய் பேசுவதேன்

எஸ். நாவரசன்

---

## விடியல்

காலையிலே
கதிரவன்
கண் விழித்ததும்
எல்லோருக்கும்
விடிந்துவிடும்
ஆனால்—
எனக்கு
என்று
உன் சம்மதம்
கிடைக்கிறதோ
அன்றுதான்
விடியும்

---

## அறிந்து கோண்டேன்

உன்னுடைய
பெயர்
என்னவென்று
எனக்கு தெரியாது
இறுதியில்
என்—
இதயத் துடிப்பில்
இருந்துதான்
அறிந்து கொண்டேன்
ஏனெனில்
இதயம்
உன் பெயரைத்தான்
உச்சரிக்கின்றது.

-எஸ் சண்முகதாசன்

---

## வியாபாரக் கூட்டம்

என்றும் என்
தவறுகளை மட்டுமே கண்டு
பிடித்து
மணிக்கணக்காய் விமர்
சிக்கும்
பெற்ருேரும் உற்ருேரும்
இன்று மட்டும்
வருங்கால மாமனரிடம்
என் அருமை பெருமைகளை
விபரித்துக் கொண்டி
ருந்தனர்
''காக்கைக்கும் தன்குஞ்சு
பொன்குஞ்சு''
எனவெண்ணிப் பெருமைப்
பட்டேன்
பின்னர் தான் புரிந்தது
என் விலைக்கு
விளக்கவுரை நடாத்திடும்
''வியாபாரக் கூட்டம்''
என்று

துதி காந்தன்

---

## வரத் தயங்குவது ஏனே?

பணமே
நீ
ஏன்?
இன்னும்
வசதியுள்ளவர்களின்
கையிலே மட்டும்
தங்கி
நிற்கின்ருய்!
ஏழைகளின்
பக்கம்
நீ
வருவதற்கு
தயங்குவது ஏன்?
பணமுள்ளவர்கள்
உன்னைப்
பெட்டியில் பூட்டி
வைத்து
சிறை
வைத்திருப்பது
தெரியாதா?
ஒன்று மட்டும்
புரிகின்றது
நீ
வசதியானவர்களின்
சொந்தக்காரன்
என்று.

அளவையூர்
ப. உதயகுமார்




# சின்னஞ்சிறு சிட்டுக்களே!

பண்டிதமணித்தாத்தா என்ற பெரியவரை அறிவீர்களா? இதோ படத்தில் இருப்பவர் தான் அவர்.

பண்டிதமணித் தாத்தா 1899 ஆம் ஆண்டு மட்டுவிலிலே பிறந்தார். சுன்னுகம் அ. குமாரசுவாமிப் பிள்ளை என்ற பெரும் புலவரிடம் படித்தார். பெரிய அறிஞராய்த் திகழ்ந்தார் 1987-ம் ஆண்டில் மறைந்தார். சமயம், இலக்கியம் என்ற இரண்டு துறைகளுக்கும் அளவிலாத தொண்டைத்தம் முடைய எழுத்தாற்றலாற் செய்தவர் அவர்.



பெரியவர்களுக்காக நிறைய எழுதிய பண்டிதமணித்தாத்தா சிறியவர்களாகிய உங்களுக்கும் எழுதியிருக்கிருர். பழைய 'ஈழகேசரி' பத்திரிகையில். இலக்கணத்தையே, உங்களுக்காகக் கதைபோல — ஆசிரியரும் மாணவனும் உரையாடுவதுபோல-சுவையாக எழுதியிருக்கிருர். 'அறஞ்செய விரும்பு' என்ற தலைப்பில் பாரதக் கதையில் ஒரு துளியை உங்களுக்காக அவர் எழுதியிருக்கிருர். அது 'இலக்கிய மஞ்சரி' என்ற தொகுப்பு நூலில் வந்திருக்கிறது.

பண்டிதமணித் தாத்தா உங்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்களை உண்டாக்கித் தரும் ஆசிரிய கலாசாலையிலே தான் ஆசிரியராய் இருந்தார். எனவே குழந்தைகளுக்கு எப்படி எழுத வேண்டும் என்று அவருக்கு மிக நன்ருகத் தெரியும். ஆனுல் எழுதத் தான் அவருக்கு நேரம் இல்லை. பெரியவர்களுக்கு எழுதுவதிலேயே அவர்காலம்போய்விட்டது.

'ராஜாஜி' தாத்தா 'கற்பனைக்காடு' என்ருெரு கதைப்புத்தகம் சிட்டுக்களாகிய உங்களுக்கென்றே எழுதியிருக்கிருர். அவருடைய 'வியாசர்விருந்தும்' நீங்கள் படிக்க ஏற்ற சிறந்தநூல். பண்டிதமணித்தாத்தா அப்படிஎழுதக் கூடியவர். எழுதாதது நமது துரதிருஷ்டந்தான். அதனுல் என்ன நீங்கள் பன்னிரண்டாம் வகுப்புக்கு வந்ததும் அவருடைய புத்தகங்களை படிக்கத் தொடங்கலாம்தானே.

## பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 331 சின்னத்தம்பி' சிவகுமார்
வயது 13, ஹாட்லி கல்லூரி
பருத்தித்துறை

இலக்கம் 332 ஜி. யஸ்ரின் வாண்மதி
வயது 11, புனித சவேரியார்
பெண்கள் ம. ம. வித்தியாலயம்
மன்னுர்

இலக்கம் 333 விக்னராஜா நிதிபன்
வயது 10, தந்தை செல்வா
தொடக்க நிலைப்பள்ளி
தெல்லிப்பழை

இலக்கம் 334 தர்மலிங்கம் தர்மாம்பிகை
வயது 12, இந்துமகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

இலக்கம் 335 பென்ஜமின் சோமநாதர்
வயது 13, ட்றிபேர்க் கல்லூரி
சாவகச்சேரி

இலக்கம் 336 மார்க்கண்டு மாதவன்
வயது 13, திரு இருதயக் கல்லூரி
கரவெட்டி

இலக்கம் 337 பஞ்சாட்சரலிங்கம் சூர்யகலா
வயது 13, மல்லாகம் மகா
வித்தியாலயம்

இலக்கம் 388 பூபாலசிங்கம் சுபத்திரா
வயது 11, சாவகச்சேரி இந்துக்
கல்லூரி

இலக்கம் 339 லஜிதா நாகராஜா
வயது 11, இந்துமகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

இலக்கம் 340 சற்குணசிவம் நாகருஜேஸ்வரன்
வயது 07, ரோமன் கத்தோலிக்க
வித்தியாலயம் நாரந்தனை

## பண்டிதமணி புகழ் வாழ்க!

தெய்வம் பேணும் நெறி நின்றே
செகத்தே என்றும் தமிழ்பரப்பி
வையம் புகழ வாழ்ந்திட்ட
மணியே நின்றன் புகழ் வாழி

## கோழிச்சேவல்

கொக்கர கொக்கர
கொக்கரக் கோ
கோழிச்சேவல் நான்
கொக்கரக் கோ

காலை மலர்ந்தது
கொக்கரக் கோ
கண்ணைவிழித் தெழும்
கொக்கரக் கோ

இருள் அகன்றது
கொக்கரக் கோ
இனிய பகலாச்சு
கொக்கரக் கோ

கோயில் மணிகேட்கக்
கொக்கரக் கோ
கும்பிடப் போவீரே
கொக்கரக் கோ

பள்ளிப் பிள்ளையரே
கொக்கரக் கோ
பாடம் படித்திடக்
கொக்கரக் கோ

பாடசாலை செல்வீர்
கொக்கரக் கோ
பண்பாய் வளருவீர்
கொக்கரக் கோ

✶ விழிசைக்குயில்

## மரங்கொத்தி

மரங்கொத்திகள் உணவு தேடுவதற்காகவே மரங்களைக்கொத்துகின்றன. அவை மரப்பட்டைகளுக்கிடையில் இருக்கும் பூச்சி, புழுக்களை தமது உணவாகக் கொள்கின்றன. அவற்றினுடைய நீண்ட நாக்குகள் மரத்துளைகளுக்குள் விட்டு அங்கிருக்கும் பூச்சி, புழுக்களை உண்ண உதவுகின்றன. அனேகமான மரங்கொத்திகள் கூடுகட்டுவதற்காகவே மரங்களைத் துளையிடுகின்றன. இப்படியாகத் துளைக்கப்பட்ட ஓட்டைகளில் இருக்கும் மரங்கொத்திகள் அவ்விடங்களை விட்டு அகன்றதும் வேறு பறவையினங்கள் அவ்விடங்களில் வந்து குடி புகுகின்றன.

ஆண் மரங்கொத்திகள் அடிக்கடி தங்கள் சொண்டினுல் ஒருவகை இசையை உண்டாக்குகின்றன. மரத்தின் மீது அதிவேகமாகத் தங்கள் சொண்டினுல் கொத்துவதின் மூலம் எமக்கு மிகவும் பழக்கமான மேளத்தின் இசையை உண்டாக்குகின்றன. இவ்வகை இசையை அவைகள் அனேகமாக பட்டுப்போன மரங்களில் இருந்து ஏற்படுத்துகின்றன.

லோ. மேகலா
அங். இல. 48

## பிராணிகளின் இயல்புகள்

✶ நாய்க்கு வர்ண பேதம் கண்டு பிடிக்க தெரியாது.

✶ நாலுகால்பிராணிகளில் ஒட்டகத்திற்கு மட்டுமே நீந்தத் தெரியாது

★ 'ஒட்டகச் சிவிங்கி' தன் கழுத்தை திருப்பாமலே பின்புறம் பார்க்கும்

✶ பதினுறும் பெற்றுப் பெருவாழ்வு வாழும் ஒரு பிராணி எது தெரியுமா? கரப்பான்பூச்சி தான் எப்போதும் பதினுறு முட்டைகள் சரியாக இடும்

● தொகுப்பு:
செ. தயாபரன்

## முத்திரை வெளியீட்டு ஆண்டு

முத்திரை சேகரிக்கும் உங்களுக்கு ஒவ்வொரு நாடும் எப்போது முதல் முத்திரையை வெளியிட்டன என்பது மிகவும் உதவியாக இருக்கக் கூடும்.. அல்பத்தின் ஒவ்வொரு நாட்டுப் பக்கத்திலும் அதன் முதல் முத்திரை வெளியீட்டு ஆண்டை குறித்து வையுங்கள்.

பிரிட்டிஷ் — 1840, பிரேசில் — 1843, அமெரிக்கா — 1845, மொறீசியஸ் — 1847, கயானு — 1850, சுவிஸ்லாந்து — 1850, ஸ்பெயின் — 1850, ஒஸ்றியா — 1850, நிபுசவுத்வேல்ஸ் — 1850, கனடா — 1851, டென்மார்க் — 1851, ஹாவாய் — 1851, நெதர்லாந்து — 1852, இந்தியா — 1852, லகஸம்பேர்க் — 1852, பர்மா — 1852, சிலி — 1853, தன்ஸானியா — 1853, போர்த்துக்கல் — 1853, பிலிப்பைன்ஸ் ... 1854, அவுஸ்திரேலியா — 1854, பின்லாந்து — 1856, எமக்ஸிகோ — 1856, உருகுவே — 1856, செயின்ட்கெலனு — 1856, இலங்கை — 1857, நியுபவுண்லாந்து — 1857, பேரு — 1857, ஆஜென்டீனு — 1858, ரஷ்யா — 1858, வெனிசுலா — 1859, சிசிலி — 1859, ஜமேக்கா — 1860, குவின்லாந்து — 1860, பிரிட்டிஸ் கொலம்பியா — 1860, கிரேக்கம் — 1861, நிக்கரகுவா — 1862, இத்தாலி — 1862, ஹொங்ஹொங் — 1862, பொலிவியா — 1863, துருக்கி — 1863, ஈகுவாடோர் — 1865, ருமேனியா — 1865, ஷங்காய் — 1865, எகிப்து — 1866, ஹெலிகோலாந்து — 1867, பேர்ஸியா — 1868, ஆப்கானிஸ்தான் — 1870, அங்கோலா — 1870, பிஜி — 1870, பரகுவே — 1870, குவாடிமாலா — 1871, ஹங்கேரி — 1871, யப்பான் — 1871, கி. ஜேர்மன் — 1872, கியூபா — 1873, ஐஸ்லாந்து — 1873,

தி. தவபாலன்

## முரசொலி பூந்தோட்டம் அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:- ..........................................

வயது:- ..........................................

பாடசாலையின் பெயர்:- ..........................................

கல்விகற்கும் வகுப்பு: ..........................................

வீட்டு முகவரி: ..........................................

கையொப்பம்: ..........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

..................... .....................
திகதி பெற்ருர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினுன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்ருக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

## காலங்கள் . . .

[11-ம் பக்கத் தொடர்]

'என்னம்மா பேசாமல் நிக்கிருய்? எங்கிருந்தோ நேற்று வந்தவனுக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்திருக்கும் என்று தானே? ஊர் உலகத்துக்கு தெரியாமல் இருக்கும் விடயங்கள் சில எப்போ ஒரு நாள் கண் விழித்துக் கொள்ளும் போது உண்மை தெளிவாகத் தான் தெரியவரும். உண்மை உறங்கிக் கிடக்கலாம் அதற்காக அது விழித்துவிடாமலே போய்விடும் என்று நினைக்கக் கூடாது. இந்தா இந்தக்கடிதங்களைப் படித்துப் பார்' என்று சட்டைப் பையிலிருந்த கடிதங்களையும், புகைப்படப் பிரதி ஒன்றையும் எடுத்து நீட்டினுர்.

கைகளை நடுங்க அவற்றை பெற்றுக்கொண்ட சந்திரஞானம் ஆவலுடன் படித்தாள். விழிகளில் வடியும் நீரைத் துடைத்துக் கொண்டே படித்தாள். படித்து முடித்துவிட்டு திரும்ப அவரிடமே கொடுத்து விட்டு அவள் பாதங்களில் விழ்ந்தாள்.

'அண்ணு நீங்கள் என்னை சகோதரி என்று கூறியது உண்மையானுல் இந்த விடயங்கள் எதுவும் யாருக்கும்.........' மேலே பேச நா எழவில்லை 'தெரியக்கூடாது.' தெரிய வராது. இதுவரை என்னைத் தவிர யாருக்கும் தெரியாது. எழுந்திரம்மா, ஆனுல் உண்மை நன்மை பயக்குமானுல் தெரிவதில் நஷ்டமில்லை. பயப்படவும் தேவை இல்லை எல்லாம் நல்லபடியே நடக்கும். இன்னென்று தெரியுமா? நம் ரகுவுக்கும் சிந்துவுக்கும்கல்யாணம் செய்யத் தீர்மானித்துள்ளோம். நாளை மறு நாள் சிந்துவீட்டுக்குப் போகிருேம். நீங்களும் சிந்துவுடன் வந்தால் என்ன?' என்ருர்.

'நிச்சயமாக வாரேனுங்க' அவள் விழிகளில் மீண்டும் நீர்க்கோடுகள்.

'அழாதே அம்மா. நடந்து முடிந்தவைகளை இட்டு வருந்துவதில் பலன் இல்லை நடப்பவைகள் நல்லவையாக நடக்கட்டும். நான் புறப்படுகின்றேன். மாசிலாமணி வந்தால் நான் வந்ததாகக் கூறுங்கள்' என்ருர்.

'இருங்கள் அண்ணு தண்ணி கூட தரவில்லை'

'எனக்கு தண்ணி போடுற பழக்கமில்லையம்மா' என்ருர் இயல்பான நகைச்சுவையுடன்

'பிளாஸ்கில் சுடு தண்ணி இருக்கு ஒரு நிமிடத்தில் தந்து விடுகிறேன்' என்று கூறிவிட்டு குசினிக்குள் சென்று விட்டாள்.

பாடசாலையால் வீட்டுக்கு வந்தசிந்துவுக்கு சந்திரஞானத்திடம் தென்பட்டமாறுதல்கள் வியப்பை அளித்தது. அருண்மொழி ஏதாவது குத்தலாக கதைத்தாலும் அவளிடம் சிறிப்பாய்ந்தவள் இதுவரை காலமும் இல்லாத முறையில் மிக அன்பாக பழகினுள். சிலமணி நேரத்துள் அவளுடைய மாற்றத்தைப் புரிந்து கொண்டசிந்துவுக்கு ஆச்சரியமாகக் கூடவிருந்தது.

''சிந்து நாளையின்றைக்கு வீட்டுக்குப் போறியாமே'' என்று சந்திரஞானம் கேட்டாள்.

மறுவேளைகளில் அவளைப் பற்றி சந்திரஞானம் எதுவும் கதைப்பதில்லை. தங்கள் வீட்டில் குடியிருப்பவள் என்ற ஒன்றை தவிர அவளுடன் எதுவித கதையோ, தொடர்போ வைத்துக்கொள்வதில்லை. அவளுக்கு எப்படித் தான் வீட்டுக்கு போகவிருப்பது தெரிந்திருக்கும் என்று வியந்தவாறே பதிலளித்தாள்.

'ஒரு விடயம் தெரியுமா?'

'சொல்லுங்கள் தெரிந்து கொள்கிறேன்'

'நானும் உன்னேடு வீட்டுக்கு வருகிறேன்'

'நீங்களா?' என்ருள் வியப்புடன்.

''ஆமா உனக்கு நடக்கப் போகும் நல்ல காரியத்துக்கு நான் வரக்கூடாதா?'

'அம்மா... நிச்சயமாக நீங்கள் வரவேண்டும். இது உங்களுக்கு எப்படி......'அவளால் மேலே கேட்கமுடியவில்லை.

"எல்லாம் எனக்குதெரியும். கடவுள் எங்கெங்கோ இருந்த எங்களை எல்லாம் எப்படியெல்லாமோ கொண்டுவந்து ஒரு கோட்டுக்குள் அடக்கி விட்டார் பார்த்தியா' என்று தொடங்கி இரகசியமாக மற்றவர்களுக்கு கேட்காதபடி என்னவோ எல்லாம் கூறினுள்

சிந்து கேட்டுக்கொண்டிருந்தாளே தவிர பதில் எதுவும் கூறவில்லை. அவளுக்கு எதை நம்புவது எதை நம்பாமல் விடுவது என்று பிரித்தறிய முடியவில்லை. ஏதோ கதைகேட்பது போலக் கேட்டுக்கொண்டிருந்தாள். 'இவையாவும் கட்டுக்கதையில்லை. உண்மையில் நடந்தவைதான். இவைகளை மறைத்துப் புண்ணியமில்லை என்பதால் தானே உன்னிடம் கூறிவிட்டேன். ரகுவுக்கு நீ மனைவியாகப் போறவள் என்பதால் எனக்கு தெரிந்துவிட்ட ரகசியத்தை உன்னிடம் மறைக்கவில்லை' என்றபோது சிந்துவியப்பின் எல்லைக்கோட்டில் நின்ருள்.

(வளரும்)

## முனிக்கொரு...

[5-ம் பக்கத் தொடர்]

போரேற்றின் முகம் பார்க்க,
(துளக்கி-அசைத்து),
பொழிந்தநெய் யாகுதி வாய் வழி பொங்கி
'எழுந்த கொழுங்கனல் என்ன எழுந்த'
அச் சிவதனுசை நோக்கி,
'...................... நல்லோர்'
ஓகை விளம்பிட உம்பர் உவப்பமாக மடங்கலும் மால்வரையும் பொன்
நாகமும் நாகமும் நாண நடந்து'

(ஓகை-உவகை; மாகம்-பெருமை; மடங்கல்- சிங்கம்; பொன் நாகம்- மகாமேரு நாகம்- யானை) சீதாபிராட்டியாருக்குச் சூட்டுவதற்கெனப் பேரியோர் ஆசீர்வதித்து நீட்டிய மலர்மாலை இதுவாகும் எனக் கண்டோர் சொல்லும்படி அதனை, அச்சிவ தனுசை, ஒரு கரத்தால் எடுத்தான்.

சில கணங்கள் தம்பித்திருந்த இருதயங்கள் வீங்கித் துடிக்கின்றன. கண்மடல்கள் இமையாது தடுத்து நிறுத்தப்பட்டன. ஸ்ரீ ராமனது செயல் வேகத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தவர்கள், ஸ்ரீ ராமன் விற்குதையைக் காலில் மாட்டியதையோ, வில் நுதியில் நாண் ஏற்றியதையோ அக் கடுவேகத்திற் கண்டிலர்.

அச் சிவதனுசை ஸ்ரீராமன்,
''கையால் எடுத்தது கண்டார்
இற்றது கேட்டார்''
எடுத்ததற்கும் இற்றதற்கும் இடையில், ஒரு கணத்தினைக் கோடி கூறிட்ட காலப் பிரமாணமும் இல்லை.

காட்சி மாறுகிறது.

ஜனகனுக்கு, அவன் செய்த நல்வினை இப்பொழுது பெறற்கரிய பெரும் பயனைத் தந்தது என,
விண்ணேர் பூமழைசொரிய,
மேகம் பொன்மழை பொழிய,
கடல்கள் பன்மணி தூவி ஆர்ப்ப,
முனிவர்கள்மங்கள ஆசி கூறுகிருர்கள்.

காட்சி இன்னும் மாறுகிறது.

ஜனகனையும் விசுவாமித்திர முனிவரையும் தாங் கொண்ட அபிமான தோஷத்தால் பழி சொல்லி அபசாரஞ் செய்த மக்கட் கூட்டம்,பழிசொன்ன அதே நாவால்''இவ்வுலகில், இந் நகருக்கு ஸ்ரீராமனை யாம் கண்டுய்யுமாறும், சீதாதேவியின் மங்கலம் மலருமாறும் அழைத்து வந்த விசுவாமித்திர முனிவரை எல்லோரும் வணங்குவீராக'' என்கிறது!

ஸ்ரீராமனை,
''இம் பரிந் நகரில் தந்த முனிவனை இறைஞ்சும்'' என்பார்.

குறிகொண்ட அபிலாஷை ஒன்றின் பின்னணியில், அது தொடர்பான நிகழ்வுத் தொடரின் கூறுகளில் விளையும் மாற்றங்களைச் சார்ந்து. மக்களின் உளப்பாங்கு கணத்துக்குக் கணம் எதிரெதிரான மாற்ற விளைவுகளுக்கு உள்ளாவது இயல்பு.

கம்பனைப் போல் துல்லியமாக இதனைக் காட்ட வல்லார் உளரோ?

கம்ப சமுத்திரத்தைக் கடைந்து இரசத்தின் இரசத்தை எம் முன் வைக்கப் பண்டிதமணிபோல் தக்கவர் இனி யாருளர்?


# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால்மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

## Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

★ I thank you very much for your nice training. I can speak and write english now. I never forget your training centre and I like to introduce your training centre to my friends and relations.

MISS. RADSANIYANAYAKI KRISHNAPILLAI
NARANTHANAI CENTRAL, KAYTS.

★ I can speak and write english very well now. I feel I am very happy when I talk with my friends because of your spoken english is enough for me.

MISS SOZAMATAEVY KRISHNARAJAH
KINGS AVENUE, URUMPARAI EAST,
URUMPARAI.

★ I am very glad to write my thoughts in this letter. I am proud of you and your centre. BTC has cultivated my english knowledge withen three months It is yours success, NO DOUBT. I have already told about your centre to my friends. I can help to your centre whenever I can.

MASTER THAVANAYAGAM GNANAVINTHAN
''SHUKTHANTHAM'' KARAITIVU-1.

★ I would like to inform you that after I got BTC english training I have learn a lot of vocabulary and improved my english knowledge.

Miss S. FOWZIYA ANAS,
No. 14, N. H. MAWATHA,
CHINA FORT, BERUWELA.

★ Before I join to your BTC as a student I had very hesitation and fear to speak english, now by the help of your BTC I have fair knowledge to read, write and speak in english.

MR. K. GNANALINGAM, MAIN STREET,
THAMBILUVIL - 2. (E. P.)

★ வெளிநாடுகளில் உள்ள மாணவர்க்கு விசேட ஊக்குவிப்பு திட்டங்களுடன் தபால்மூலம் ஆங்கிலம் நடைபெறுகிறது.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

# BRIGHT TRAINING CENTRE

P. O. Box 162 Colombo

07002



A/L MATHS
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]



HORIZON Enterprises

# உடனடி வேலைவாய்ப்புகள்

● **அபுதாபி**

கிளீனேர்ஸ் — 550 டினுர்கள்
பணிப்பெண்கள் — 400 டினுர்கள்
(முழு அளவிலான கலர் படங்கள் இரண்டும் பாஸ்போட் படங்கள் நான்கும் தேவை)

● **சவூதி அரேபியா**

பேக்கரித் தொழிலாளர்
(அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

● **குவைத்**

1. கிளீனேர்ஸ்
2. கனரக சாரதிகள் (கல்வ் லைசென்ஸ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
3. தச்சுத் தொழிலாளர்கள்
4. மேசன்
5. எலெக்றிசன்ஸ்
6. எலெக்றிசன்ஸ் உதவியாளர்கள்

கவர்ச்சிகரமான சம்பளம்

உடனடியாகப் பயணம் செய்ய விரும்புபவர்கள் பாஸ்போட், அனுபவச்சான்றிதழ்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும்

முகவரி:

# Horizon Enterprises

No. 9, 19th Lane
Kollupitiya Colombo - 3
(Chinese Lotus Hotel)
(சைனிஸ் லோட்டஸ் ஹோட்டல் முன் கடற்கரைப்பக்கம் செல்லும் லேன்)

Labour Licence No. 609
Approval No, 609/AL/17/89
609/AL/15/89,609/AL/18/89

07029

## அச்சுக்கலை ...

[ 5-ம் பக்கத் தொடர்]

களை நன்கு பாராட்டி வெள்ளித் தட்டு ஒன்றைப் பேராசிரியர் ஆ.வி.மயில்வாகனம் அவர்கள் முகாமையாளராயிருந்த திரு.மு சபாரத்தினம் அவர்களுக்கு வழங்கினார்கள்.

நூல்களாயினும் சரி சாதாரண விளம்பரங்களாயினுஞ் சரி எழுத்து சொல் பொருட் குற்றங்களின்றி வெளிவர வேண்டுமென்ற கொள்கையினர் திருமகள் அழுத்தக அச்சமைப்பு முதல்வர். கனிஷ்ட பொதுத்தாரதர பத்தி உயர்வகுப்பு மாணவரின் பொருட்டு இலக்கியவழி திருத்தப் பதிப்பின் வேலைகள் திருமகள் அழுத்தகத்தில் 1964 ல் நடந்து கொண்டிருந்தன.

இலக்கியவழி திருத்தப்பதிப்பிற் பதின் மூன்ருவது பாடம் சொற்சித்திரம். சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய பழமலை அந்தாதியில் உள்ள ஒருபாடல் இக்கட்டுரையிற் இடம் பெற்றுள்ளது. ''மேருக்குவடு...'' என்ற தொடக்கத்தையுடைய அப்பாடல்தேருக்குவடுவசமாரு என்ற இரண்டாம் அடியில் 'வசமாடு' என்ற தொடர் 'வடமாடு' என்று அச்சாகி விட்டது. அச்சாகிய பாரத்தைப் பார்வையிட்ட பண்டிதமணி அவர்கள்'' ஒரு எழுத்தல்லோ காணும் மேருக்குவடு பாடலில் பிழையாக அச்சாகி விட்டது; இரண்டாவது வரியில் 'வசமாடு' என்பது 'வடமாடு' என்று அச்சாகிவிட்டது. 'ட' என்ற எழுத்தை வெட்டி 'ச' என்ற எழுத்தை மையால் எழுதிவிட்டால் நல்லது'' என்ருர்கள்.

திருமகள் அழுத்தகத்துக்கு அடுத்த நாள் சென்றபோது இந்த விஷயத்தைச் சொன்னேன். முகாமையாளர் திரு. மு. சபாரத்தினம் அவர்களும் அச்சமைப்பு முதல்வர் திரு. சின்னத்துரை அவர்களும் ஒருவரையொருவர் பார்த்தவாறு 'பலர் பல முறை' 'புறாவ்' பார்த்தும் இப்பிழை வந்துவிட்டதே' என்று கவலைப் பட்டார்கள். 'காரியமில்லை மையினல் திருத்தி விடலாம் தானே' என்றேன். அடுத்த நாள் அச்சகத்துக்குச் சென்ற போது புதியதொரு பாரத்தைத் தந்தார்கள். அந்தப் பாரத்தில 'வசமாடு' என்று சரியாகவே இருந்தது. 'முன்னர் பிழையாக இருந்த தொடர் இப்பொழுது எப்படிச் சரியாக இருக்கிறது இது என்ன ஆச்சரியம்' என்று திரு சபாரத்தினம் அவர்களை நோக்கியவாறு கூற 'ஒரு சிறு பிழை தன்னும் இருக்கச் சின்னத்துரையர் விரும்பவில்லை. அவரது விருப்பத்தின் படி திரும்ப அடித்தோம்' என்ருர் சபாரத்தினம் அவர்கள். 'போமன் ஐயா ஏன் இந்த வேலை' என்று திரு சின்னத்துரை அவர்களைக் கேட்டபோது 'அச்சில் பிழை வராமல் பார்க்க வேண்டியது எங்களது பொறுப்பு. பிழை ஏற்பட்டால் திருத்தத்தானே வேண்டும், என்று வழக்கமான புன்னகையுடன் கூறினர்

இதை அறிந்த பண்டிதமணி அவர்கள் ஒரு எழுத்துப் பிழைக்காக சம்பந்தப்பட்ட இரண்டாயிரம் பாரங்களையுமா திருப்பி அடித்தார்கள்! நாவலர் வழியைப் பின்பற்றுகின்றவராயிருக்கின்ருரே, 'போமன்' சின்னத்துரையர் திருப்பி அடித்ததில் கடதாசியில் பெரிய நட்டம் அடைந்திருப்பார்களே. இந்தக் காலத்தில் இப்படியான ஆட்களும் வியாபார உலகில் இருக்கின்ருர்களே' என்று சொல்லிவாயிலேகையைவைத்தார்கள் பண்டிதர் ஆயா அவர்கள் அன்று தொடக்கம் பண்டிதமணி அவர்கள் திரு. சின்னத்துரையிடம் விசேட மதிப்பு வைத்திருதார்கள்

செய்யுள் இலக்கணம் நன்கு தெரிந்தவர் 'போமன்' சின்னத்துரை. புராணங்கள் பாராட்டு மலர்கள், கவிதை நூல்கள் முதலியனவற்றை

அச்சிடும் போது கீர்த்தனைகளை நன்கு கவனித்து அச்சிட ஒழுங்கு செய்வார். கவிதைகளில் ஏதாவது சிறு குற்றங்கள் இருப்பினும் ஆக்கியோனுடன் தொடர்பு கொண்டு அக்குற்றங்களை நீக்கிச் செய்யுள்களை அச்சிடுவதில் வெகு சமர்த்தர் திரு. சின்னத்துரை.

வசனபாகங்களையும் உரைக் குறிப்புக்களையும் நன்கு வாசித்து அவற்றில் நல்ல திருத்தங்கள் இருப்பின் தெளிவாக எடுத்துச் சொல்லி எழுத்தாளர்களையும் பண்பாகவைக்கு விப்பார்.

திருமகள் அழுத்தக உரிமையாளரான நா. பொன்னையா அவர்களோ முகாமையாளர்களாகப் பணிபுரிந்த கோ. அப்பாக்குட்டி, மு சபாரத்தினம் முதலானவர்களோ சின்னத்துரை அவர்களை மிகவும் கௌரவமாகவே நடத்தி வந்தார்கள். அச்சமைப்புத் துறையில் சின்னத்துரை அவர்களுடைய கருத்துக்கே முதலிடம் இருக்கும் தமக்குக் கீழே வேலைசெய்கிற தொழிலாளி தானே என்று சின்னத்துரை அவர்களை 'வா', போ', இப்படிச் செய்' என்று ஒரு நாளும் கூறியதில்லை. ''சின்னத்துரை என்றே'' அழைத்திருக்க மாட்டார்கள் சின்னத்துரையர், வாருங்கள், போங்கள் என்றே கண்ணியமாக அழைப்பார்கள்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அழுத்தகத்தின் முகாமையாளராக இருந்த திரு க. சிவகுமார் அவர்கள் வயசில் இளையவர். பண்பிலே மிகவும் உயர்ந்தவர். 'முதலாளியின் ஆள்' என்ற மிடுக்கு இல்லாதவர். சின்னத்துரை அவர்களை மையமாக வைத்துத் திருமகள் அழுத்தக வேலைகளைத் திரிகரண சுத்தியுடன் கவனித்து வந்தார். சின்னத்துரை அவர்களை ஐயா, போமன் ஐயா என்றே அவர்கள் அழைப்பார்கள்.

### கேள்வி – பதில்

திரு சின்னத்துரை அவர்களிடம் நான் கேட்ட ஒரு கேள்வியையும் அதற்கு அவர் அளித்த பதிலையும் இங்கே குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

கேள்வி:– அச்சமைப்புத்துறை வளர்ச்சிக்கு நீங்கள் அறுபது ஆண்டுகளாக உழைத்திருக்கிறீர்களே இதனல் நீங்கள் பெற்ற பலன் என்ன?

பதில்: அச்சுக்கூட வேலையையான் இளமையில் விரும்பாதிருந்த போதிலும் எனது குடும்ப நிலையையிட்டு இத்தொழிலையே தொடரவேண்டி இருந்தது. அதையிட்டு இப்பொழுது பெருமகிழ்ச்சியடைகிறேன். வித்துவ சிரோமணி கணேசையர், கலைப்புலவர் க. நவரத்தினம்,பண்டிதமணி சி. கணபதப்பிள்ளை, ஹண்டி பேரின்பநாயகம், திரு. ச.

அம்பிகைபாகன், கலாநிதி ஆ. சதாசிவம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், துர்க்கா துரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி உள்ளிட்ட பெரியார்களைக் காணவும் அவர்களோடு சம்பாஷிக்கவும், அவர்கள் எழுத்துக்களைப் பதிக்கும் போது எழுத்தெண்ணி யெண்ணிப் படிக்கவும்வாய்ப்பு ஏற்பட்டது. இது பெறற்கரும் பேறே. இன்னும் தமிழகத்துப் பெரியார்கள் ஈழ நாட்டின் கல்விமான்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் பலரினதும் சகவாசத்தைப் பெறவும் எனது அறிவை வளர்க்கவும் இந்த அச்சமைப்பு முதல்வர் வேலை பெரிதும் உதவிபிருக்கிறது. இதிலும் பார்க்க வேறு செல்வம் என்ன இருக்கிறது?

திருமகள் அழுத்தக நிர்வாகத்தை இப்பொழுது ஏற்றிருப்பவர்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர். இவர்களது நிர்வாகத்தில் திருமகள் அழுத்தகம் மேலும் மேலும் வளர்ச்சியடையலாம் என்று எதிர் பார்ப்பது இயற்கையே. குறித்த தேவஸ்தானத்தினர் காலத்துக்குக் காலம் பலபல விழாக்களை நடத்தியவர்கள் எத்தனையோ விழாக்களையெல்லாம் கண்டவர்கள். கண்டவர்களைக் கண்டவர்களே நாங்கள்

திருமகள் அழுத்தக அச்சமைப்பு முதல்வர் திரு. செ. சின்னத்துரை அவர்களுக்கு எண்பது வயது பூர்த்தியடைகின்றது. அச்சமைப்புத் துறைக்கென அறுபது ஆண்டுகளுக்கு மேலாகத் தம்மை அர்ப்பணித்துள்ளார் திருமகள் அழுத்தகம் இந்த ஆண்டில் அறுபது வருடத்தைப் பூர்த்தி செய்கின்றது அச்சமைப்பு முதல்வர் திரு செ. சின்னத்துரை அவர்களது அறுபதாண்டுச் சேவையினையும் திருமகள் அழுத்தகத்தின் அறுபதாண்டு நிறைவினையும் சம்பந்தப்பட்ட தேவஸ்தானத்தினர் ஏற்ற செவ்வி அறிந்து சிறப்பாகக் கொண்டாடுவார்கள் என்பது ஒருதலை.

''மொழி வளர்ச்சியில் அச்சமைப்புத்துறையின் பங்கு'' என்ற தலைப்பில், பல்கலைக்கழக மட்டத்தில் ஆராய்ச்சி ஒன்று நிகழுமேயானல் குறித்த ஆய்வில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களுக்கு அச்சமைப்பு முறைபற்றி நல்ல ஆலோசனையைக் கூறக் கூடியவர்களில் சுன்னகம் திருமகள் அழுத்தக அச்சமைப்பு முதல்வர் திரு. செல்லப்பா-சின்னத்துரை ஒருவராக இடம் பெறுவார்.

## பெற்றோர்......

வரும் மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் காரணத்தினை புரிந்து கொள்ளாதது போல், இப் போராட்டமானது கல்வியை பாழடிக்கும் நோக்கோடு செய்யப்படும் சதி எனத் திரித்துக்கூறி எமது போராட்டத்தை திசைதிருப்ப முயல்கின்றது இவ்வாறுமாணவர் ஒன்றியம்விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மாணவர்களிற்கு எந்த வித இடையூறுகளையும் ஏற்படுத்தாமல் மாணவர்கள் சுயமாக தங்கள் கல்வியை தொடருவதற்காகவே மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கோடு இப் பகிஷ்கரிப்புப் போராட்டமானது நடைபெறுகிறது என்பதை தமிழ் மக்கள் அனைவரும் அறிவார்கள்.

மாணவர்களின் பாதுகாப்பு விடயம் தொடர்பாக உறுதி மொழி வழங்கிய சில மணி நேரத்தினுள் பரியோவான்கல்லூரி மாணவன் கல்லூரி வளவினுள் வைத்து கைதுசெய்யப்பட்டது இவ் உறுதி மொழியைக்கேள்விக்குறி ஆக்கி விட்டது.

எனவே மாணவர்களின் பாதுகாப்புவிடயத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் உடனடியாக, மேலும் காலம் தாமதிக்காமல் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து எமக்கு அறியத்தராத வரையில், நாம் பாடசாலை செல்வது எந்த விதத்திலும் பயனைத் தராது. எனவே தீர்க்கமான முடிவு கிடைக்கப்படும் வரை நாம் பாடசாலைகளை தொடர்ச்சியாகப் பகிஷ்கரிப்போம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை வங்கி...

இதற்கமைய இலங்கை வங்கியுடன் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளும் அனைவருக்குமே இனிமேல் தமிழ் மொழியிலேயே பதில் அனுப்பப்படுமென இலங்கை வங்கியின் நிறைவேற்று பிரதிபொது முகாமையாளர் திரு. கே. துரைராஜா தெரிவித்தார்.

இதேபோன்று இலங்கை வங்கியின் கொழும்பு அலுவலகங்களுடன் தமிழில் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு தமிழிலேயே பதில் அனுப்பப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர் ச. அரியநாயகம்

மேடம்: எதிர் பாராத் இலாபம், எண்ணியது கைகூடும், வாகனசுகம், வணிகர்கள், கடல் தொழில் செய்வோர் இலாபம், விவாக நிச்சயம், தூரதேசம் போனவர் வருகை, பெரியோராசி, கல்வியால் தொழில், பிரிந்தகாதலர்கள் ஒன்று சேருவார்கள்.

இடபம்: வாக்கு பலிதம், கல்வியால் சித்தி, காதலர் மகிழ்ச்சி, பணப்புழக்கம், வாகன மாற்றம், திடீர்பிரயாணம், புதுமனை ச்சேர்க்கை, புதுத் தொழில், தேடியவர் வருகை, இயந்திரதொழில், வைத்தியம், சோதிடம் பார்ப்போர் இலாபம்.

மிதுனம்: உயர்கல்வி, இராஜ மரியாதை, உடல்நொடிய ரோகம், அன்னியதேச வாழ்க்கை, வாகன மாற்றம், விவாகநிச்சயம், பண வரவு, விருந்துபசாரம், புகழ்தேடி வரும், தெய்வஆசி, சகோதர வழிபுதவி.

கடகம்: மனையலங்காரம்,புதுத் தொழில், புகழான செய்தி, வாக்குவசிகரம், கைப்பொருள் நஷ்டம், வெளியூர் போனவர்கள் வருகை, வணிகர்கள், கடல்தொழில், வைத்தியம், சோதிடம், இயந்திர தொழில் செய்வோர் சமபலன்.

சிங்கம்: இடமாற்றம், புத்திரரால் கவலை, புண்ணிய வழி, வாகன மாற்றம், உடல்ரோகம், இரணசிகிச்சை, வாக்குக்கலகம், மனவிசாரம், மாமன் வழியுதவி, மூத்த சகோதர வழியுதவி.

கன்னி: வாகன நஷ்டம், வணிகர்கள் இலாபம், வெளியூர் செய்தியால் இலாபம், சகோதரவழியுதவி, மனை பூமிச் சேர்க்கை, வெளிநாட்டு பிரயாணம், விவாகநிச்சயம், கலைஞர்கள், கடல் தொழில் செய்வோர், வைத்தியர்கள், சோதிடர்கள் கௌரவம்.

துலாம்: வாக்குப்பலிதம், வாகனசுகம், மனையலங்காரம், மங்கள காரிய நிறைவு, பெரியோராசி, வெளிநாட்டுப் பிரயாண நிறைவு,புதுத்தொழில், புகழ் தேடிவரும், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

விருச்சிகம்: எண்ணியது நடக்கும், சகோதர வழியுதவி, வாகன சுகம், பெரியோராசி, புகழ் தேடிவரும், வெளியூர் பிரயாண சுகம், பெண்களால் உதவி பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், மங்களகாரிய நிவர்த்தி, மனமகிழ்ச்சி.

தனுசு: பெரியபதவி, உயர் அதிகாரிகளின் பாராட்டு, பணப்புழக்கம், கல்வியால் தொழில், காதலர் வாழ்வில் மகிழ்ச்சி, எண்ணியது நடக்கும், விருந்துபசாரம், சிநேகித வழியுதவி, திடீர் பிரயாணம், மனை பூமியால் நன்மை.

மகரம்: பொருள் சேதம், புகழுக்குப் பங்கம், வாகன நஷ்டம், வணிகர்கள் கடல் தொழில்செய்வோர் வைத்தியம், சோதிடம் பார்ப்போர் இலாபம், வெளியூர் போனவர்கள் வருகை, உயர்பதவி மூலம் இடமாற்றம், இளைய சகோதரவழியுதவி.

கும்பம்: மனமகிழ்ச்சி, மங்கள காரிய நிவர்த்தி, வாகன மாற்றம், பெரியோராசி, புண்ணிய வழிபாடு,புதுத்தொழில் இராஜ மரியாதை, கலைஞர்கள் கௌரவிக்கப்படல்,பிரிந்த காதலர் ஒன்று சேருதல்.

மீனம்: கல்வியால் உயர்பதவி, பெரியோராசி, மங்கள காரிய நிவர்த்தி, வாகன சேர்க்கை, வணிகர்கள், கடல் தொழில் செய்வோர் இலாபம், புதுத் தொழில், மனை பூமியால் நன்மை, எதிர்பார்த்த பணம், கிடைக்கும், இளைய சகோதர வழியுதவியால் நன்மை.

## மனிதப்பிறவி......

— 9ம் பக்கம் பார்க்க

இது என்பதை மறந்து விடக் கூடாது

## தொண்டு செய்ய ஒரு வாய்ப்பு

சேவை அல்லது தொண்டு என்பது மக்கள் வாழ்வில் ஒரு வகை வழிபாடாகும் இதனல் திருப்தியும் நிறைவும் மனதுக்கு ஏற்படுகிறது. பிரதிபலன் எதனையும் நோக்காது ஆற்றும் தொண்டுகளுக்கு இறைவனுடைய ஆசியுண்டு. சேவை செய்யக் கிடைத்த பிறவியைப் பாராட்டுகிருர் சுவாமி விவேகானந்தர் ''மோட்சத்துக்குள்ளே போய் வீணே முடங்கிக் கிடப்பதிலும் பார்க்க மேலும் மேலும் பிறவிகளை எடுத்து மக்களுக்காகச் சேவை செய்வதே எனது குறிக்கோளோடு கூடிய விருப்பமாகும்'' என்று கூறினர்.

''அன்பர் பணிசெய்யவெனை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே
வந்தெய்தும் பராபரமே''

என்ருர் தாயுமான சுவாமிகள், நோயாளிகள். தரித்திரர்கள் கல்வியறிவற்றவர் ஆகியோர் மத்தியில் புகுந்து அவர் தம் துன்ப நீக்கத்துக்குப் பாடுபடுவதும் இதனல் அவர்களிடைய திருப்தியைக் கண்டு இன்பமுறுதலும் எமது கடமையாக வேண்டும் இவையனைத்துக்குமாகக் கிடைத்ததே இந்த மானிடப் பிறவி இதனை மதித்து வாழ்ந்தால் இவ்வுலகத்திலேயே மோட்ச இன்பம் எம்மை அணைத்துக் கொள்ளுமன்றே.

## மகோற்சவம்

(சுன்னகம்)

சுன்னகம் மயிலணி கந்தசாமி ஆலயமகோற்சவம் சென்ற புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகிறது. தினமும் காலை ஏழு மணிக்கும் மாலை 4 30 மணிக்கும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்

## வரதர்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

போது சிறுச்சிறு குறிப்புக்களை எழுதிப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியிடுவதுமே வரதரின் இன்றைய இலக்கிய சேவைகளாக இருந்து வருகின்றன

இயன்ற அளவு தூய தமிழ்ச் சொற்களைக் கையாண்டு இலக்கிய ஆக்கங்கள் செய்யப்படல் வேண்டும் என்பது வரதரின் வேணவா தமிழ் நாட்டில் செயலுருப் பெற்று வரும் எழுத்துச் சீர்திருத்தத்தினை நாமும் பின்பற்றல் வேண்டும் என்றும் வரதர் விரும்புகின்ருர்.

மூத்த எழுத்தாளரான இவரின் அபிலாசைகளை இளம் பரம்பரையினர் நிறைவேற்ற முன்வருவார்களா?

## தலை நகரில் போக்குவரத்து சீர்குலைவினால் விலைவீழ்ச்சி

கொழும்பில் போக்குவரத்துச்சபை ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்தும் நடைபெறுவதால் நேற்றும் கொழும்புப் பகுதியில் மக்கள் தமது வேலைத்தலங்களுக்கு செல்வதில் பல சிரமத்திற்குட்பட்டனர். சேவையில் ஈடுபட்ட சில போக்குவரத்துச்சபை பஸ் வண்டிகளிலும், தனியார் பஸ்வண்டிகளிலும் மக்கள் பெருந்தொகையாக ஏறிக் கொண்டனர். பஸ்வண்டிகளில் பெரும்பாலாக பெண்களே அதிகமாக பயணம் செய்தனர். லொறி கூரைகளிலும் டிராக்டர்களிலும் ஆண்கள் அதிகமாக காணப்பட்டனர். இதே வேளை போக்குவரத்து நெருக்கடியினால் புறக்கோட்டை சந்தைக்கு வரும் மக்களின் தொகையும் குறைந்துள்ளது. இதனால் மரக்கறி விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. தேங்காய் இரண்டு ரூபாவாகவும், முட்டை ஒரு ரூபா எண்பது சதமாகவும், போஞ்சி ஐந்துரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. வாடிக்கையாளருக்கு வியாபாரிகளினால் பழங்கள் இனமாகவும் வழங்கப்படுகிறது.

## சிறிய செய்திகள்

### கரவெட்டியில் சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

கரவெட்டியில் நேற்று ஒருவர் இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் நெல்லியடியை சேர்ந்த தவராசா எனத்தெரிவிக்கப்படுகிறது.

### நீரில் மூழ்கி தமிழ் இளைஞர் பலி

தெஹிவளை கடலில் குளிக்கச் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார். மட்டக்களப்பைச் சேர்ந்த யூட் வித்தியானந்தன் நமசிவாயம் என்ற இளைஞரே இப்பரிதாப மரணத்தைத் தழுவியவராவார்.

பிரபல கூடைப்பந்தாட்ட வீரரான இவர் தற்பொழுது கொழும்பு பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் உதவிப் பொலிஸ் அதிபர் பயிற்சி பெற்றுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கண்ணிவெடியில் நால்வர் காயம்

(மட்டுநகர்)

வந்தாறுமூலை களுவாங்கேணி என்ற இடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் உழவு யந்திரம் சிக்கி சேதமடைந்தது அதில் சென்ற நால்வர் படுகாயமடைந்தனர்.

### தபால்கள் வரவில்லை

யாழ்ப்பாணத்திற்கான வெளியிடத்து தபால் பொதிகள் நேற்றும் இங்கு வந்து சேரவில்லை நேற்று முன்தினம் சரக்கு ரயில் மூலம் அநுராதபுரத்திற்கு கொண்டு வரப்பட்ட தபால் பொதிகள் அனைத்தும் தற்சமயம் வவுனியா தபால் நிலையத்துக்கு அதிகாரிகளால் எடுத்து வரப்பட்டன.

நேற்றும் நேற்று முன்தினமும் தபால் பொதிகளுடன் இங்கிருந்து சென்ற பஸ் மாங்குளத்திற்கு அப்பால் செல்லமுடியாமல் திரும்பியதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

### இன்று மடுமாதா திருநாள்

கத்தோலிக்கர்களின் யாத்திரிகை ஸ்தலமான மருதமடு மாதா ஆலய ஜூலை மாத திருநாள் இன்று நடைபெறுகிறது இம்முறை பெருமளவு யாத்திரிகர்கள் இங்கு சென்றுள்ளார்கள். வட பிராந்திய போக்குவரத்து சபை விசேட பஸ் சேவைகளை இங்கு நடாத்தியுள்ளது. தனியார் மினி பஸ்களும் சென்றுள்ளன.

### நாளை பரீட்சை

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் இளமாணி பட்டத்திற்கான 1986 —87ஆம் ஆண்டு முதல் வருட பரீட்சை திட்டமிட்டபடி நாளை மூன்றும் திகதி திங்கட்கிழமை நடை பெறும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

### புலோலியில் ஷெல் தாக்கிப் பலி

(பருத்தித்துறை)

புலோலியில் புதன்கிழமை நடைபெற்ற ஷெல் தாக்குதலையடுத்து புலோலி தெற்கை சேர்ந்த தொழிலாளி எஸ். சுப்பிரமணியம் (24) என்ற மேசன் தொழிலாளியே பலியானவர்.

இச்சம்பவங்களின் போது துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான சைக்கிள் கடை உரிமையாளர் திரு. எஸ். கதிர்காமநாதன் காயமடைந்தார் இச்சம்பவங்களின் போது உணவுக்களஞ்சிய காவலாளியொருவரும் பலத்த தாக்குதலுக்குள்ளானார்கள்.

### பொறுத்திருந்து பார்ப்போம்

ஜனாதிபதியின் இந்தியப் படைகள் வெளியேற்றம் குறித்து விதிக்கப்பட்ட காலக்கெடு இன்னும் முடியவில்லை எனவே பொறுத்து இருந்து பார்ப்போம் என அமைச்சர் காமினி திஸ்ஸநாயக்கா நேற்று கம உதாவ நிகழ்ச்சியில் நிருபர் ஒருவரின் கேள்விக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# அரசின் கவலையீனத்தால் உதவிப்பணம் திரும்பலாம்

(எப். சி. ஆர்.)

தமிழ்ப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடனாக வழங்கவென உலக வங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி என்பன வழங்கிய பெருந்தொகைப்பணம் திரும்பிச்செல்வதை தடுப்பதற்கு, கடன் பிணை தொடர்பான நடைமுறையில் உடனடிச்சலுகை வழங்கப்படல் வேண்டுமென இலங்கை வங்கி அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளது. அவ்வாறு சலுகை வழங்காவிடில் இப்பணம் திரும்பிச் செல்லலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனருத்தாரண கடனை வழங்குவதற்கென உலகவங்கி, ஆகிய அபிவிருத்தி வங்கி என்பன நூற்றிஇருபத்திஐந்து கோடி ரூபாவை இலங்கை அரசிற்கு கடனாக வழங்கியிருந்தது.

இப்பணத்தினை வீடு புனரமைப்பு, வியாபார விருத்தி, கடற்றொழில் அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கு கடனாக வழங்கும் பொறுப்பு இலங்கை வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் காணி அலுவலகம், நீதிமன்றம், காப்புறுதி அலுவலகம் என்பனவற்றின் இயக்கம் பாதிக்கப்பட்டிருப்பதினால் கடனுக்கான உறுதிப்பிணையை பதிவுசெய்து கொள்ள முடியாதநிலை இலங்கைவங்கிக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த பல மாதகாலமாக இந்த நிலை தொடர்வதானால் வெளி நாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் இருந்து வருகின்றது.

இதனைத் தவிர்ப்பதற்காக கடனுக்கான உறுதிப்பிணையை பதியும் நடைமுறையில் இலங்கை அரசு சலுகை வழங்க வேண்டுமென இலங்கை வங்கி அரசைக் கோரியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு கடனாக வழங்கப்படும் பணத்துக்கான பொறுப்பை அரசு தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் உடனடியாக கடனை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கலாமெனவும் அதன்பின்னர் நிலைமை சீரானதும் உறுதிப்பிணை பதிவை செய்துகொள்ளலாம் எனவும் வங்கி அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது.

அத்துடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட உடமைகளுக்கு நட்டஈடு வழங்கும் விடயத்தில் தற்பொழுது கடைப்பிடித்துவரும் கொள்கையை கைவிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டை வழங்க முன்வந்தால் அது இந்த கடனை வழங்குவதற்கு பிணையாக ஏற்றுக்கொள்வதற்கு உதவும் எனவும் இலங்கை வங்கி சிபார்சு செய்துள்ளது.

இலங்கை வங்கியின் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளுக்கு அரசு மௌனம் சாதிப்பதாகவும் இதனால் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இலங்கைக்கு வழங்கிய பெரும் தொகை புனருத்தாரண கடன் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நெல்லியடியில் கடைகள் மீண்டும் மூடப்பட்டுள்ளன

நீண்ட நாள் இடைவெளிக்குப்பின்னர் கடந்த புதன்கிழமை திறக்கப்பட்ட நெல்லியடிக் கடைகள் பல மீண்டும் மூடப்பட்ட நிலையிலேயே நேற்று காணப்பட்டன.

இதனால் நெல்லியடிப் பிரதேசம் சோபை இழந்த நிலையில் காணப்பட்டது. மக்கள் வரவு மந்த நிலையிலேயே காணப்பட்டது.

பதினைந்து நாள் இடைவெளிகுப் பின்னர் கடந்த புதன்கிழமை திறக்கப்பட்ட மேற்படி கடைகள் மக்கள் வரவு குறைவாலும், நெல்லியடிப் பிரதேசத்தில் நிகழும் திடீர் திடீர் சூட்டுச்சம்பவங்களாலுமே மூடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

### ராஜீவின் பதில்

ஜனாதிபதியின் யுத்தநிறுத்தக் கோரிக்கைக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அனுப்பிவைத்த பதில் கடிதம் நேற்று இந்தியதூதுவர் மல்ஹோத்திராவினால் ஜனாதிபதி பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டது.

---

### கரவெட்டியில்...

மரக்கறி, மீன் சந்தை நடைபெறவில்லை.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை வதிரி, இரும்பு மதவடிப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதனால் இப்பகுதிகளில் சிறிது நேரம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களால் பீதியுற்ற இப்பகுதி மக்கள் அயல் கிராமங்களை நோக்கிப் படையெடுத்தனர்.

### ஜவானுக்கு...

குருநகர் முகாமைச் சேர்ந்த சாலிங்கிராம் (28)என்ற இந்த ஜவான் முகாமில் கடமையில் இருந்தபோது துப்பாக்கி தற்செயலாக வெடித்ததினால் காயமடைந்து சிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

### ஜே. ஆர். ...

தும், இதற்கு ஒரு காரணம் எனத் தெரிவித்துள்ள டேவிற் பிறவுண் சிறிய நாடு ஒன்று தமக்கு உத்தரவிட முடியாது என்ற நிலையில் இந்தியா நிற்க, பெரியநாடு எம்மை அச்சுறுத்த இடமளியோம் என இலங்கை நிற்க இப்பிரச்சனை இப்பிராந்தியத்தில் பெரும் சிக்கலை உருவாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் ஒப்பந்தத்தில் கைச்சாததிட்ட முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இதில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு ஜனாதிபதி பிரேமதாஸ அனுமதியளிப்பாரா என்பது தான் தற்போது கேள்வியாக உள்ளது எனவும் கார்டியன் நிருபர் அப்பேட்டியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

### புனர் வாழ்வு...

இக்கொடுப்பனவுகளை மீண்டும் இங்கு ஆரம்பிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது. மக்கள்வங்கி, இலங்கைவங்கி அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்,

இக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுக்கமைய, யாழ். அரசாங்க அதிபரின் ஆலோசனையுடன் இக்கொடுப்பனவை என்ன தினங்களில் வங்கிகளில் வழங்குவது என்பது பற்றி இறுதிமுடிவு எடுக்கப்படும்.

### பாதிக்கப்பட்டவர்களுக்கு...

டுமே மீள அறவிடப்படும். எஞ்சிய பகுதியை அவர்கள் செலுத்த வேண்டியதில்லை.

ஆனால் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் தான்பெற்ற கடனை, தவணைதப்பாமல் முழுமையாக செலுத்துதல் வேண்டும். இதுபற்றிய பூரண விபரங்களை சம்பந்தப்பட்ட வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

### சகல...

இப்பேச்சுக்கள்நடைபெற்றன.

இது பற்றி செய்தியாளரிடம் பேசியமுதலமைச்சர்இலங்கைப் பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டுமாயின் சம்பந்தப்பட்ட சகலருடனும் பேச்சு வார்த்தைகள் நடைபெற வேண்டும் எனக் கூறினார்.

### மிருசுவில்......

கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் மக்களுக்கு பூரணபாதுகாப்பு வழங்குவதற்காகவும், அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்காகவும், பல்வேறு காலகட்டங்களில் கொடும் புயல்களையும், காட்டாற்று வெள்ளங்களையும் தாங்கி திடகாத்திரமாக செயற்பட்டு வருபவர்கள் மீது இத்தாக்குதல் மேற்கொண்டது மிகவும் கோரத்தனமானவை.

மேலும் இப்படியாக எமது மண் சோதனைக்களமாக பேர் தாங்கி வருவது எமக்கு வேதனையை அளிக்கின்றது.

மக்கள் கண் முன் தெரியாமல் மண்ணோடு மண்ணாகி வருகின்றார்கள். இன்னும் இந்த நிலைப்பாடு நிறுத்தப்படாமல் தொடருமானால், மரணங்களும், மர்மங்களும் தொடரப்போவது திண்ணம். எம் இனம் மீண்டும் மீண்டும் அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பட்டதாரி...

நியமிக்கப்பட்ட இந்த பட்டதாரிகளை இடம் மாற்றுவதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெற்றிருந்தது. அதன் பின்னர் இவர்களுக்கான இடமாற்றத்தை இடைநிறுத்தி வைத்திருந்த கல்விச் சேவைகள் ஆணைக்கு தற்பொழுது அந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

### மாங்குளத்தில் .....

களுக்கான பஸ்வண்டிகள் மாங்குளத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன வவுனியாவின் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

### ஜனாதிபதியின்...

ஜனாதிபதி ஆகியோருடனும் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் பற்றி பேச்சு நடாத்தியதாகவும், தாம் தெவிரித்த கருத்துக்களை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளும் எனத்தாம் நம்புவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 02-07-89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.